# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 364 கார்த்திகை 9ஆம் நாள் சனிக்கிழமை 25 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


## பௌத்த நிர்வாகத்தில் கூட்டாட்சி இருக்கும்போது நாட்டில் ஏன் அது இருக்கக்கூடாது? தேரர் கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 25
பௌத்த பீடத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்களிலேயே அதிகாரங்கள் பகிரப்பட்டு, கிட்டத்தட்ட கூட்டாட்சி முறையில் இயங்கும்போது, நாட்டின் கட்டமைப்பில் அதிகாரங்கள் பகிரப்படுவதை மகாநாயக்க தேரர்கள் ஏன் எதிர்கின்றனர்? இவ்வாறு தம்பிர அமில தேரர் கேள்வி எழுப்பினார். புதிய அரசமைப்புக்கு ஆதரவு திரட்டும் பரப்புரை மாத்தறையில் நேற்று நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.
"மகாநாயக்க தேரர்கள் அதிகாரப் பகிர்வுக்கு எதிராகக் குரல் கொடுக்கின்றனர். ஆனால் எமது பௌத்த மதத்தில் எல்லாமே பகிரப்பட்டுத்தான் இருக்கின்றது.
எமது பௌத்த நிர்வாகக் ›› 25

## கூட்டு அரசு பதவியில் தொடருமா?

### பிரிந்து செல்லுமாறு சு.க. தலைவர்கள் அழுத்தம்

கொழும்பு, நவம்பர் 25
பதவியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூட்டு அரசு தொடர்ந்து பதவியில் இருப்பது சந்தேகத்துக்கிடமாகி வருகின்றது. இரு கட்சிகளுக்கும் இடையிலான இரண்டாண்டு கால ஒப்பந்தம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதற்குப் பின்னர் கூட்டு அரசில் தொடர்ந்து இருக்க வேண்டாம் என்று சுதந்திரக் கட்சியின் முக்கிய மூத்த தலைவர்கள் கட்சித் தலைவரும் அரச தலைவருமான மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடும் அழுத்தங்கள் கொடுத்து வருகின்றனர். இதனால் கூட்டு அரசு பதவியில் தொடர்ந்து நீடிக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டு அரசு உறவை அடுத்த மாதம் 31ஆம் திகதியு ›› 25

## தேசியத் தலைவருக்கு நாளை அகவை 63



யாழ்ப்பாணம், நவ. 25
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள், தமிழர் தாயக மண்ணிலும், புலம்பெயர்தேசங்களிலும் நாளை கொண்டாடப்படவுள்ளது.
1954ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செயற்பட ஆரம்பித்த பின்னர், தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த நாள் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டு வருவது வழமையாகும்.
ஆயுதப் போர் தாயக மண்ணில் மௌனிக்கும் வரையில் பகிரங்கமாக ›› 25

## சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் கதை சொன்ன சுமந்திரன் எம்.பி.

யாழ்ப்பாணம், நவ. 25
அதிகாரப் பகிர்வு தொடர்பில் சிங்கள மக்கள் அச்சப்பட வேண்டியதில்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு ›› 25

## கூட்டமைப்பினது ஒற்றுமை வரும் தேர்தலில் வெளிப்படும்

### சம்பந்தர் நம்பிக்கை

கொழும்பு, நவ. 25
வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த கட்சியாகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பே உள்ளது. இதனை எவராலும் பிளவுபடுத்தவோ - உடைக்கவோ முடியாது. கூட்டமைப்பின் ஒற்றுமை, அதன் பலம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ›› 04

## நாடு பிரியாமல் இருப்பதற்கு அதிகாரப் பகிர்வே அவசியம்

### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25
உண்மையில் நாடு துண்டாடப்படாமல் இருக்க வேண்டுமானால் அதிகாரப் பகிர்வு வேண்டும். யதார்த்தபூர்வமாக இது பற்றிச் சிந்திப்பது அனைவரினதும் தார்மீகக் கடமையாகும். இது அரசியல் தலைமைகளுக்குள்ள மிகப் பெரிய பொறுப்பும் ஆகும். இதனை அடுத்த சந்ததியினருக்கு விட்டுச்செல்ல முடியாது. ›› 04

## ஐ.தே.க. தவறிழைத்தாலும் மக்கள் ஏற்கவேமாட்டார்கள்

### எச்சரிக்கிறார் மைத்திரிபால

கொழும்பு, நவ. 25
'ஐக்கிய தேசிய கட்சியிலுள்ளவர்களும் அரசில் இருந்து கொண்டு தவறுகளைச் செய்வார்களானால் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தேர்தல் வெற்றிக்காக மட்டுமன்றி சிறந்த அரசியல் கலாசாரத்திற்காகவும் பலப்படுத்வேண்டும்' என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மக்கள் சந்திப்பில் நேற்றுத் தெரிவித்துள்ளார்.
கூட்டு அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் நடைபெற்று வந்த முறுகல் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது.
சிறிலங்கா சுதந்தி ›› 25

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தேர்தல் குறித்து முடிவில்லை

### 133 சபைகளுக்குத் தேர்தல் நடத்த முடியும் என்கிறார் ஆணைக்குழுத் தலைவர்

கொழும்பு, நவ. 25
உயர் நீதிமன்ற உத்தரவினால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளபோதும் வழக்கில் சிக்கிக் கொண்டுள்ள சபைகளைத் தவிர்ந்த 133 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.
கட்சித் தலைவர்கள் கூட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று மாலை 5.30 மணிக்கு நடைபெற்றது. நாடாளுமன்றத்தின் அழைப்புக்கு அமை ›› 25

## தாய் இறந்த செய்தி கேட்ட அதிர்ச்சியில் தனயனும் சாவு

யாழ்ப்பாணம் நவ 25
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த தாயார் மாரடைப்பால் உயிரிழந்த தகவல் அறிந்ததும் அதிர்ச்சியில் அவரது மகனும் மாரடைப்பால் உயிரிழந்தார்.
இந்தச் சோகச் சம்பவம் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த பாலசிங்கம் தவமணி (வயது - 72). அவரது மகன் பாலசிங்கம் பிரசன்னா ›› 04

## ஆவா குழுவின் மற்றொரு முக்கியமான நபரும் கைது

### அண்மைய பல வன்முறைகளுடன் தொடர்புடையவர்

யாழ்ப்பாணம், நவ.25
வாள் வெட்டுக் குழுவைச் சேர்ந்த மற்றுமொரு முக்கிய நபரும் நேற்றுக் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வன்முறைச் சம்பவங்களின் போது பயன்படுத்தப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் கோடரி ஒன்றும் அவருடைய வீட்டில் இருந்து மீட்கப்பட்டது என கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சபாஷ் மனுஷ்லா காந்தாவள தெரிவித்தார்.
கைதானவர் ›› 25

## புதிய அரசமைப்பு விடயத்தில் இந்தியத் தலையீடு இல்லை

### இலங்கைத் தூர்தர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25
இலங்கையில் புதியதொரு அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் இந்தியா எந்தவிதத்திலும் தலையீடு செய்யவில்லை. அழுத்தங்களையும் பிரயோகிக்கவில்லை.
இவ்வாறு இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் சித்திரங் ›› 25

## குளத்தில் நீராடியபோது மூழ்கி அண்ணன், தங்கை உயிரிழப்பு

### வவுனியாவில் நேற்று சோகம்

வவுனியா, நவ.25
வவுனியா, நம்பவெட்டிக்குளத்தில் குளிக்கச் சென்ற அண்ணனும், தங்கையும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மதியம் நடந்துள்ளது.
ஜெயபிரதாப் (வயது-26), பானுரேகா (வயது-16) ஆகியோரே உயிரிழந்தனர்.
ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் குளிப்பதற்குக் குளத்துக்குச் சென்றுள்ளனர். கரையில் குளித்துக் கொண்டிருந்தபோது திடீரென இருவரும் ஆழமான பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.
ஜெயப்பிரதாப் திருமணமாகி 2 மாதங்களே ஆகின்றன. ›› 25






வெளிவந்துவிட்டது...!
புதுவிதியின் இந்த வார இதழ்
புதுவிதி
உங்கள் பிரதிகளைப் பெற இன்றே அருகில் உள்ள முகவரை நாடுங்கள்...!
விநியோகத் தொடர்புகளுக்கு :-
021 493 2222

## கஞ்சாவுடன் பெண் கைது



யாழ்ப்பாணம்,நவ.25
யாழ்ப்பாணம் கந்தர்மடம் அரசடிப் பகுதியில் 2 கிலோ கேரளா கஞ்சா மற்றும் 60 ஆயிரம் ரூபா பணத்துடன் குடும்ப பெண் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார் என யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். பிரதேச மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பொலிஸ் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய யாழ்ப்பாணம் கந்தர்மடத்துக்கு அருகிலுள்ள அரசடிப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் கைது செய்தனர்.
கைது செய்யப்பட்ட 35 வயதுடைய 3 பிள்ளைகளின் தாயான பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, அரியாலை பூம்புகார் பகுதியில் உள்ள நபர் ஒருவர் கேரளா கஞ்சா கொண்டு வந்து தருகின்றார் என்றும் கணவர் இல்லாத காரணத்தினால் தான் விற்பனை செய்வதாகவும் கூறினார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர் யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது என பொலிஸார் தெரிவித்தனர். (ந,8,101, 106)

# தடைகள் சரி செய்யப்பட்டு எட்கா கைச்சாத்திடப்படும்

## புதுடில்லியில் ரணில் உறுதி

கொழும்பு,நவ.25
இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கையைக் கைச்சாத்திடுவதற்குத் தடையாகவுள்ள காரணிகள் சரிசெய்யப்பட்டு வெகுவிரைவிலேயே உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் என்று இலங்கைத்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
மூன்று நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா வந்திருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க நேற்று நாடு திரும்புவதற்கு முன்னர், புதுடில்லியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்தித்தார். அதன்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
இந்தியப் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அரசதலைவர் ராம்நாத் கோவிந்த், வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்டவர்களை எனது பயணத்தின்போது சந்தித்துப் பேச்சு நடத்தினேன். இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலுள்ள உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பிலேயே மேற்படி அனைத்து சந்திப்புகளிலும் அதிகம் கவனம் செலுத்தப்பட்டது.
இந்தியப் பிரதமருடனான சந்திப்பில், கடந்த ஏப்ரல் மாதத்தில் நாங்கள் உடன்பட்டிருந்த அறிக்கையின் முன்னேற்றகரம் தொடர்பில் கலந்துரையாடினோம். அவற்றில் சில வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதங்கள் ஏற்பட்டன. இவற்றுக்கான தெளிவுபடுத்தல் தேவைப்பட்டது. அவை தொடர்பிலும் பேசினோம்.
அதேபோல், இந்திய இலங்கை இடையே கைச்சாத்திடப்படவுள்ள புதிய பொருளாதார, தொழில்நுட்ப உடன்படிக்கைகள் (எட்கா) சம்பந்தமாகவும் பேசினோம்.
பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கையைக் கைச்சாத்திடப்படுவதற்கான தடைகளை நீக்கி அவற்றை இறுதிப்படுத்தி முன்னொக்கிச் செல்வது குறித்து தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டது" என்றார். (ந,ரி4)

## யோஷித வெளிநாடு செல்ல அனுமதி

கொழும்பு,நவ.25
முன்னாள் அரச தலைவரின் புதல்வர் யோஷித்த ராஜபக்ச, வெளிநாடு செல்ல கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.
அவரின் மருத்துவ சிகிச்சைக்காக அடுத்த மாதம் 10 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை வெளிநாடு அனுமதி கிடைத்துள்ளது. இந்த வழக்கு சம்பந்தமாக அவரின் கடவுச்சீட்டு கடுவலை நீதிவான் நீதிமன்ற பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (நரி5)

## த. ம. வி. புலிகள் தேர்தலில் தனித்தே களமிறங்குவாராம்

மட்டக்களப்பு,நவ.25
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்து போட்டியிடும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், கட்சியின் பிரதி தலைவருமான நா.திரவியம் தெரிவித்தார்.
வாழைச்சேனை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெண்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு உதவிப் பிரதேச செயலாளர் நிருபா பிருந்தன் தலைமையில் கறுவாக்கேணி சமூக சேவைகள் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தனித்து போட்டியிடும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் கிடையாது.
இதற்கு முன்னர் நாங்கள் எந்தக் கட்சிகளோடும் சேர்ந்து இருந்தாலும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தனித்தே போட்டியிடும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இரண்டாக பிரிந்து விட்டது என்று பலர் பேசுகின்றார்கள் அது பொய்யான கருத்து என்றார். (ந-ரி5)

## வறுமையை ஒழிப்பது தொடர்பாக சிறப்புக் கலந்துரையாடல் யாழில்

யாழ்ப்பாணம், நவ.25
வறுமை ஒழிப்பு மற்றும் விவசாய அபிவிருத்தித் திட்டம் தொடர்பில் வடக்கின் ஐந்து மாவட்டச் செயலர்களுக்கும், அரச தலைவரின் இணைப்புச் செயலாளர் சிரால்லக் திலகவுக்கும் இடையே நேற்று கலந்துரையாடல் நடைபெற்றது.
இந்தத் திட்டம் 2018ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது. வடக்கு மாகாணத்தின் 34 பிரதேச செயலகங்கள் தோறும் 3 கிராமங்கள் வீதம் 102 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்தக் கிராமங்களில் வசிக்கும் குடும்பங்களுக்குத் தலா 8 ஆயிரம் ரூபா ஒதுக்கப்படும். அதில் இரு கிராமங்களில் வறுமை ஒழிப்பு அபிவிருத்தியும், ஒரு கிராமத்தில் விவசாய அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படும்.
வறுமை ஒழிப்பின் கீழ் வாழ்வாதார அபிவிருத்திக்காக தொழில் மையங்கள், உற்பத்தி நிலையங்கள் போன்றன அமைக்கப்படும். பயிற்சி மையங்களும் இடம்பெறும்.
விவசாய கிராமங்களின் அபிவிருத்திக்காக அந்தப் பிரதேச விவசாய தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றின் அபிவிருத்திக்காக நிதி செலவிடப்படும்.
இனங்காணப்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளவேண்டிய மதிப்பீடுகள், திட்ட முன்னாயத்தங்கள் மேற்கொள்வதற்காக இந்த ஆண்டு பிரதேச செயலக ரீதியாக தலா 3 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்ட முன்னாயத்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.
கலந்துரையாடலில் அரச தலைவர் செயலக இணைப்புச் செயலாளருடன் அகிலன் கதிர்காமர் கலந்து கொண்டனர். 5 மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு திட்டத்தை முன்னெடுக்கும் வழிமுறைகள் தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. முதற்கட்டமாக வடக்கில் 102 கிராமங்களில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-101)

## விபத்தில் சிறுமி படுகாயம்



மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காஞ்சிரங்குடாவில் டிப்பர் வாகனம் மோதி சிறுமி ஒருவர் படுகாயமடைந்தார். நேற்று பிற்பகல் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.
ஆத்திரமடைந்த அந்தப் பகுதி மக்கள் கன்ரரை அடித்து நொருக்கினர். அந்தப் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டுள்ளது.
காஞ்சிரங்குடா முதன்மை வீதியில் சைக்கிளில் பயணித்த 12 வயதுச் சிறுமியை மண் ஏற்றிவந்த கன்ரர் வாகனம் மோதியது. அதில் சிறுமி படுகாயமடைந்தார். வவுணதீவு மண்டபத்தடி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.



## தேசிய போசாக்கு உணவு விற்பனை நிலையம் நாவலபிட்டியில் திறப்பு

நாவலப்பிட்டி,நவ.25
மத்திய மாகாண விவசாய திணைக்களத்தின் நாவலபிட்டி குறுந்துவத்த நகர் பகுதியில் அமைக்கப்பட்ட தேசிய போசாக்கு உணவு விற்பனை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.
இலங்கையின் சுவைமிகு உணவுடன் ஆரோக்கியமானதோர் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் அமைக்கப்பட்ட இந்த விற்பனை நிலையத்தை மத்திய மாகாண விவசாய அமைச்சர் மருதபாண்டி ராமேஸ்வரன் திறந்துவைத்தார்.
அந்தப்பகுதி விவசாய பயனாளர்களுக்கான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது.
நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர் வீரசிங்க அலுத்கமகே, அமைச்சின் செயலாளர், விவசாய அமைச்சின் பிரதி பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர் விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (ந-ரி5)







பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட மாற்றுத்திறனாளிகளின் விளையாட்டுப்போட்டி நேற்று நடைபெற்றது. மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்றது.




# குற்ற விசாரணை அதிகாரிகளின் சேவை சமூகத்துக்கு அவசியம்

## அரச தலைவரின் செயலர் தெரிவிப்பு

கொழும்பு.நவ.25

குற்ற விசாரணை அதிகாரிகளின் சேவை சமூகத்துக்கு அத்தியாவசியமாக அமைகிறது. நீதியை நிலைநாட்டவும் குற்றங்கள், இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றை இல்லாதொழிக்கவும் இவர்களது சேவை மிக அவசியமாகும்.

இவ்வாறு அரச தலைவரின் செயலர் ஒஸ்டின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

குற்ற விசாரணைகளுக்கான தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான தெற்காசிய பிராந்திய மையமொன்றை ஆரம்பிப்பதற்கான உயர் மட்ட அதிகாரிகளின் கலந்துரையாடல் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது.

அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டதன் பின்னர் இலஞ்சம், ஊழல் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் போது பிரயோகிக்கப்படும் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக குற்ற விசாரணை அதிகாரிகளின் சேவை சவால் மிக்கதாகவும் கடினமானதாகவும் காணப்படுகின்றது.

அவர்களின் சேவை சமூகத்துக்கு அத்தியாவசியமாக அமைகிறது. நீதியை நிலைநாட்டவும் குற்றங்கள், இலஞ்சம் மற்றும் ஊழல் என்பவற்றை இல்லாதொழிக்கவும் இவர்களது சேவை மிக அவசியமாகும். என்றார்.

இரண்டு நாள்கள் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில், தெற்காசிய நாடுகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் கட்டமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் கடத்தல் நடவடிக்கைகளை இல்லாதொழிப்பதற்கான இரகசிய தகவல் பரிமாற்றத்தை இலகுபடுத்தும் நோக்கில் தெற்காசிய பிராந்திய நிலையத்தை நிறுவுதல் தொடர்பில் ஆராயப்படவுள்ளது. பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைத்தீவு, நேபாளம் மற்றும் இலங்கை உள்ளிட்ட ஆறுதெற்காசிய நாடுகளைச் சேர்ந்த சிறப்பு நிபுணர்களின் பங்குபற்றலில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலை ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் குற்றங்கள் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்தது.

சட்டம், ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் பீ. விஜேவீர, சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, போதைப்பொருள் ஒழிப்பு அரச தலைவர் செயலணியின் பணிப்பாளர் மருத்துவர் சமந்த கித்தலவாரச்சி உள்ளிட்ட மூத்த அதிகாரிகள் இந்தக்கலந்துரையாடலில் பங்குபற்றினர். (ரி2)



## ஆடு திருடியவர்கள் காரை விட்டு தப்பி ஓட்டம்

ஊர்காவற்றுறை,நவ.25

ஆடுகளைத் திருடிச் சென்றவர்கள் பொலிஸாரைக் கண்டதும் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர். இந்தச் சம்பவம் ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று நடந்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் வாகனத்தைப் பின்தொடர்ந்தனர். பொலிஸாரைக் கண்டதும் சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். கார் மற்றும் அதில் ஏற்றப்பட்டிருந்த 8 ஆடுகளும் ஊர்காவற்றுறைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2, 26)

## மாத்தளை அமரவங்ச தேரருக்கு அரச தலைவர் இறுதி அஞ்சலி

கொழும்பு,நவ.25

இலங்கை ராமக்ஞ மகா நிக்காயவின் மறைந்த மாத்தளை அமரவங்ச தேரரின் பூதவுடலுக்கு அரசதலைவர் மைத்ரிபால சிறிசேன நேற்று இறுதி அஞ்சலி செலுத்தினார். நாத்தண்டிய, தப்போவ. போதிமாலக்க புஷ்பாராம விகாரைக்கு பயணம் செய்த அரசதலைவர், மறைந்த தேரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

பிக்கு மாணவர்கள் உள்ளிட்ட விகாரையின் மகா சங்கத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

1956 ஆம் ஆண்டு மக்கள் ஆட்சியை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டிருந்த எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு இளம் பிக்குவான மறைந்த மாத்தளை அமரவங்ச தேரர் அவர்கள், உறுதுணையாக செயற்பட்டவர். அன்று முதல் இன்று வரை சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து செயற்பாடுகளிலும் கட்சிக்கு இவர் பெரும் பங்காற்றியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி2)

## துன்னாலை இளைஞன் படுகொலை; பொலிஸாரின் விளக்கமறியல் நீடிப்பு

வடமராட்சி,நவ.25

வடமராட்சி கிழக்குப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரினதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, எதிர்வரும் 8 ஆம் திகதிவரை சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த ஜூலை 9 ஆம் திகதி 6ஆம் கட்டை மணற்காட்டுப் பகுதியில், அனுமதியற்ற முறையில், மணலை கன்ரர் ரக வாகனத்தில், ஏற்றிச் சென்றபோது, பொலிஸாரால் வழிமறிக்கப்பட்டது.

இதனை மீறிச் சென்றபோது, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே, 24 வயதான யோகரசா தினேஸ் என்ற துன்னாலையைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்திருந்தார். (ற-ரி2,26)

# 25 முதிரை மரக் குற்றிகள் கடத்தப்பட்டபோது சிக்கின

முல்லைத்தீவு, நவ.25

முல்லைத்தீவு, மாந்தைகிழக்கு சிராட்டிக்குளம் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்ட 25 முதிரை மரக் குற்றிகள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளன என்று முல்லைத்திவு சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

டிப்பர் வாகனத்தில் ஏற்றப்பட்டு அவை யாழ்ப்பாணத்துக்குக் கடத்துவதற்குத் தயராக இருந்தபோது பொலிஸ் உப பரிசோதகர் சாமர தலைமையிலான பொலிஸ் குழு அவற்றைக் கைப்பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், ஏனையோர் தப்பியோடிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

டிப்பரில் முதிரை மரக்குற்றிகளை ஏற்றி அதற்கு மேல் சல்லிக் கற்களையிட்டு மறைத்து மரங்கள் கடத்தப்படுகின்றன என்று விசாரணைகளில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-102)





## போதை மாத்திரையுடன் நேற்று ஒருவர் கைது

கொழும்பு,நவ.25

கொலன்னாவையில் சட்டவிரோதமான முறையில் போதை மாத்திரை விற்பனையில் ஈடுப்பட்டு வந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 21 இலட்சம் ரூபா பெறுமதியான போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## விரைவில் புதிய வரிச் சூத்திரம்; நிதி அமைச்சர் மங்கள தெரிவிப்பு

கொழும்பு,நவ.25

புதிய தேசிய வருமான வரி சட்டத்தின் புதிய சூத்திரத்திற்கமைய வருமான வரி தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நிதி அமைச்சர் இதனை தெரிவித்தார்.

சாதாரண மக்களுக்கு வரிச் சுமையை அதிகரிப்பதை காட்டிலும், அனைவருக்கும் சமமான முறையில் வரி அறவீட்டினை மேற்கொள்ள இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ரி2)

# கிந்தோட்டை வன்முறையில் கைதானவர்களை விடுவிக்க அரசியல் தரப்புக்கள் அழுத்தம்

## பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

காலி கிந்தோட்டையில் சிங்கள - முஸ்லிம்சமூகங்களுக்குஇடையே ஏற்பட்ட வன்முறையில் கைதானவர்களை விடுவிக்க அரசியல் உயர் மட்டங்களால் பொலிஸாருக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதேசத்தில் தற்போது சமாதான சூழல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து, வன்முறைகளில் ஈடுபட்ட சந்தேகத்தில் கைதான இரு சமூகத்தைச் சேர்ந்த 22 பேரையும் விடுவிக்க அரசியல் தரப்புக்கள் அழுத்தம் வழங்குவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைதானோருக்கு எதிராக 2007ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பிலான பன்னாட்டு இணக்கப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர். இருப்பினும் அரசியல் அழுத்தம் காரணமாக அந்தப் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை மீளப்பெறும் நிலமை ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்த வழக்குப் பிரிவின் கீழ் நீதிவான் நீதிமன்றில் பிணை பெறமுடியாது என்பதாலேயே மேற்படி முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகப் பொலிஸ் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

சந்தேகநபர்களுக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவையின் கீழ், நீதிவான் நீதிமன்றில் பிணை பெறக் கூடிய வகையில் வழக்குத் தாக்கல் செய்வதற்கும், நீதிமன்றில் பிணை கோரும்போது பொலிஸார் எதிர்க்காமல் இருப்பதற்கும் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. (5.31)

# காமினி உட்பட மூவரின் மனு ஜனவரி 21இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ. 25

நீதிமன்ற விசாரணைகளுக்காக, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பொதுச் சொத்துகள் கட்டளைச் சட்டத்தின் கீழ், தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரி, முன்னாள் அரச தலைவரின் பாதுகாப்புப் பிரதானி காமினி சேதர செனரத் உட்பட மூவரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுக்களை ஜனவரி 21ஆம் திகதியன்று எடுக்க உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

2012ஆம் ஆண்டு அமைச்சரவையால் ஒதுக்கப்பட்ட 18.5 பில்லியன் ரூபா நிதியில் 4 பில்லியன் ரூபாவை சட்டவிரோதமாக முதலீடு செய்தனர் என்று இவர்கள் மூவருக்கும் எதிராக நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தாக்கல் செய்யப்பட்ட பி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் தாம் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு கோரி, காமினி செனரத் உள்ளிட்ட மூவரும் இந்த மூன்று மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர், சட்டமா அதிபர் உட்படச் சிலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த மனுக்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்களான புவனேஹ அலுவிஹார, அனில் குணரத்ன, நளின் பெரோரா ஆகியோரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில், நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்குறிப்பிட்ட தினம் அறிவிக்கப்பட்டது.

மூவரையும் தலா 50 லட்சம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 10 லட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் கோட்டை நீதிவான் நீதிமன்றம் கடந்த 21ஆம் திகதி விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# கோத்தாவுக்காக பிக்குகள் களத்தில் குதிப்பர்

*கொழும்பு, நவ. 25*

*முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ச கைது செய்யப்பட்டால், அதற்கு எதிராகக் கணிசமானளவு பௌத்த பிக்குகள் வீதியில் இறங்குவார்கள் என்று முறுத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.*

*கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதுபற்றி கருத்து வெளியிட்ட அவர், இந்த அரசு பெருமளவில் பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆட்சியாளர்களின் பாவத்தினால் நாடு பேரழிவுகளைச் சந்திக்கும்.*

*மகிந்த ராஜபக்சவுடன் தொடர்புடையவர்களைப் பழிவாங்குவதை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்.*

*இப்போது கோத்தபாய ராஜபக்சவைக் கைது செய்ய முயற்சிக்கின்றனர். அவர் அரசியலில் இறங்குவார் என்ற அச்சத்தினால்.தான் கைது செய்வதற்கு முயற்சிக்கின்றனர் - என்றார். (5,31)*

# நெல்லியடி விபத்தில் காயமடைந்தவர் நான்கு நாள்களின் பின்னர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ.25

நெல்லியடீயில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்தவர் நான்கு நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார். பருத்தித்துறை வீதி நெல்லியடியைச் சேர்ந்த பிலிப் மரியதாஸ் (வயது - 67) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். நெல்லியடிச் சந்தியில் நடந்து சென்ற இவரை மோட்டார் சைக்கிளில் மோதியதில் இவர் காயமடைந்தார்.

சம்பவம் கடந்த 20ஆம் திகதி இடம்பெற்றது. காயமடைந்த மரியதாஸ் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் கடந்த நான்கு நாள்களாக மரியதாசுக்கு சிகிச்சை வழங்கப்பட்டது. அந்தச் சிகிச்சைகள் பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார். (21,26)

# இரண்டாண்டுகளில் 583 பேருக்கு வகுப்புத் தடை

கொழும்பு, நவ. 25

2013ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 583 மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளது. 37 மாணவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இருவரின் தகுதி நிலை இல்லாமல் செய்யப்பட்டுள்ளது என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறி ஜயவர்தன பல்கலைக் கழகத்தில் 193 பேரும், பேராதனையில் 105 பேரும், சப்ரகமுவவில் 83 பேரும், மொரட்டுவையில் 47 பேரும், ருகுனுவில் 43 பேரும், கிழக்கில் 31 பேரும், தென்கிழக்கில் 12 பேரும், இலங்கை பௌத்த, பாளி பல்கலைகழகத்தில் 15 பேரும், களணியில் 11 பேரும், யாழில் 9 பேரும், இலங்கை பிக்கு பல்கலைகழகத்தில் 10 பேரும், கொழும்பில் 8 பேரும், சுதேச மருத்துவகக் கற்கை நிறுவகத்தில் ஒருவரும், கம்பகா விக்கிரமாரச்சி ஆயுர்வேதக் கற்கை நிறுவகத்தில் 2 பேருமாக மொத்தம் 583 பேர் வகுப்பு தடைக்குள்ளாகியுள்ளனர்.

மேலும் சப்ரகமுவ பல்கலைகழகத்தில் 17 பேரும், களனியில் 13 பேரும், பேராதனையில் 7 பேருமாக மொத்தம் 37 மாணவர்களுக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (5.31)

# பைசர் முஸ்தபாவுக்கு நாம் கைகொடுப்போம்

## சுதந்திரக் கட்சி திட்டவட்டம்

கொழும்பு, நவ. 25

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் உள்பட ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே ஆதரவு வழங்குவார்கள் என்று இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை நிர்ணயம் மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பில் வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் டிசெம்பர் 4ஆம் திகதிவரை இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜனவரி இறுதியில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போகக்கூடிய சாத்தியம் நிலவுகின்றது. தேர்தலை திட்டமிட்ட அடிப்படையில் அமைச்சர் பைசர் முஸ்தபா இழுத்தடிக்கிறார் என்றும், தமக்குரிய கடப்பாட்டை அவர் மீறியுள்ளார் என்றும் சுட்டிக்காட்டி அமைச்சர் பைசர் முஸ்தபாவுக்கு எதிராக மகிந்த அணி நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பித்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணி தாமும் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பிக்கவுள்ளதாக எச்சரித்துள்ளதுடன், கூட்டு அரசின் பங்காளியான ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என அறிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே, சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான லக்ஸ்மன் யாப்பாவிடம் உதயன் பத்திரிகை வினவியது.

அவர் தெரிவித்ததாவது:

எல்லை நிர்ணயத்தில் குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து, எந்தவொரு தரப்புக்கும் பாதிப்பேற்படாத வகையில் தீர்வை முன்வைப்பதற்காக அமைச்சர் குழுவொன்றை அமைத்தார். அந்தக் குழுவின் அறிக்கைக்கு அமையவே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. நுவரெலிய மாவட்டத்தில் பிரதேச சபைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டபோதும் சர்ச்சை ஏற்பட்டது. அதனையும் அமைச்சர் பைசர் தீர்த்துவைத்தார்.

இவ்வாறு மக்களாட்சி முறைப்படி அனைவரும் ஏற்கும் வகையில் தேர்தல் நடத்த முற்படும் ஒருவரை குற்றவாளி எனக் கூறமுடியாது. அவருக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (5)

## கூட்டமைப்பினது...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

வெளிப்படும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற பொதுமக்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தொடரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வே வேண்டும். அதனை வென்றெடுக்கும் வரை எமது மக்கள் மயப்படுத்தப்பட்ட போராட்டம் தொடரும். புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவால் அரசமைப்புச் சபையில் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளது இடைக்கால அறிக்கையே. இது இறுதி வரைபு அல்ல, இறுதி வரைபு வரும்வரை அதற்கான ஒத்துழைப்புக்களை நாம் வழங்குவோம்.

புதிய அரசமைப்புக்கான இறுதி வரைபு தமிழ் பேசும் மக்களுக்கு உகந்ததாக இல்லை என்றால் அந்த இறுதி வரைபை நாம் அடியோடு நிராகரிப்போம் - என்றார். (உ-5)

## நாடு...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அதிகாரப் பகிர்வு என்பது தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மாத்திரமல்ல. வழிநடத்தல் குழுவில் நானும் உறுப்பினர். எங்களுடைய குழுவுக்கு முன்னால் வந்து தெற்கிலுள்ள எல்லா முதலமைச்சர்களும் இருக்கின்ற அதிகாரங்களை அதிகரித்துத் தருமாறே கேட்டார்கள். ஆளுநரின் தலையீடுகளைக் குறையுங்கள் என்றார்கள். கொழும்பு அரசின் தலையீட்டையும் குறைக்கச் சொன்னார்கள்.

இந்த நாட்டில் அதிகாரப்பகிர்வு கலாசாரம் வந்து விட்டது. இதனை இனி இல்லாமல் செய்ய முடியாது. இதனால் நாடு துண்டாடப்பட்டு விடுமென்று பீதியை சில தீவிரவாதக் குழுக்கள் உருவாக்குகின்றன. அவ்வாறல்ல. உண்மையில் நாடு துண்டாடப்படாமல் இருக்கவேண்டுமானால் அதிகாரப் பகிர்வு வேண்டும்.

ஏற்கனவே பல்லாயிரக்கணக்கான அப்பாவி உயிர்கள் கொல்லப்பட்டு விட்டன. மக்களாட்சி நாட்டில் தங்களது உரிமைகளையும் தேவைகளையும் பகிரங்கமாகக் கேட்பதில் எந்தத் தவறுமில்லை. புரிந்துணர்வோடு இந்த விடயங்களை அணுக வேண்டியது அவசியமாகும் - என்றார். (உ-5)

## தாய் இறந்த...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

(வயது - 37) ஆகிய இருவருமே உயிரிழந்தனர் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

இந்த இறப்புக்கள் தொடர்பான விசாரணையை ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (உ-8,37)

## டெங்கு உற்பத்தியாக கூடியவாறு குடியிருப்புகளை வைத்திருந்த மூவருக்குத் தண்டம்

சாவகச்சேரி, நவ. 25
டெங்கு நுளம்பு உற்பத்தியாகும் ஏதுநிலையில் குடியிருப்புக்களை வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி சுகாதாரத் திணைக் களத்தினரின் ஏற்பாட்டில் வரணி மற்றும் மட்டுவில் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுகளில் கடந்த வாரம் சிறப்பு டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.
இரு பிரிவுகளிலும் நீர் ஏந்து பொருள்களில் டெங்குக் குடம்பிகள் காணப்பட்டதால் குடியிருப்பாளர்களுக்கு எதிராக பொலிஸார் வழக்குகள் பதிவு செய்திருந்தனர்.
இந்த வழக்குகளில் 3 பேருக்கு எதிரான வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
விசாரணையின்போது மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை யடுத்து பதில் நீதிவான் ப. குகனேஸ்வரன் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ.9)

## ஒக்ரோபர் புரட்சியை பாதுகாத்தல் தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம், நவ.25
ஒக்ரோபர் புரட்சியை பாதுகாத்தல் தொடர்பான கூட்டம் இடம்பெற வுள்ளது.
நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு டி.எம்.ஐ நிறுவனத்தில் (361, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பா ணம்) நிகழவுள்ளது.
சொ.சிவபாலன் தலைமையில் நிகழும் கூட்டத்தில் முதன்மை உரையை எ.சி.ஜோர்ச் வழங்க வுள்ளார். ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பன்னாட்டு மார்க்சியக் குழு தெரி வித்துள்ளது. (எ)


## புரட்சிகர பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் நவ 25
1917ஆம் ஆண்டு சோசலிசப்புரட்சி யின் புரட்சிகரப் பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத் தில் நாளை பி.ப. 3.30 மணிக்கு தோழர் சி.கா. செந்திவேல் தலை மையில் நிகழ்வு இடம்பெறும் என வும் ஆர்வமுடையவர்களை கலந்துகொள்ளுமாறும் புதிய ஜன நாயக மாக்சிச லெனினிசக் கட்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ள னர். (எ)

# வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் மாவீரர் நாள் எழுச்சியுடன் இடம்பெறும்

வடமராட்சி, நவ. 24
தமிழீழ தேசிய மாவீரர் நிகழ்வு எதிர் வரும் 27ஆம் திகதி 6.10 மணிக்கு ஈகைச் சுடரேற்றலுடன் வல்வெட்டித்துறை தீரு வில் குமரப்பா புலேந்திரன் சதுக்கத்தில் எழுச்சியுடன் இடம்பெறவுள்ளது.
வடமராட்சி மாவீரர் ஏற்பாட்டுக்குழு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது தமிழீழக் கனவோடு சமராடி காவியமான மாவீரர்களை நினைவு கூரும் புனிதநாள் நாளைமறுதினம் தாயகம் கடந்து புலம் பெயர் நாடுகளிலும் எழுச்சியுடன் கடைப் பிடிக்கப்படவுள்ளது. ஏனைய பகுதிகளி லுள்ள துயிலுமில்லங்களும் மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப் பணிகள் மூலம் துப்பரவு செய்யப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. ஆனால் வடமராட்சிப் பகுதியில் அமைந் துள்ள எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தற்போது இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளதால் அங்கு மாவீரர் களுக்கான அஞ்சலி நிகழ்வுகளைச் செய்யமுடியாத நிலை காணப்படுகின்றது.
இதனையடுத்து வடமராட்சிப் பகுதியி லுள்ள மாவீரர் பெற்றோர்களின் நலன் கருதி திருவில் சதுக்கத்தில் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
அந்தவகையில் போக்குவரத்து வசதி கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நெல் லியடி, பருத்தித்துறை பேருந்து தரிப்பி டங்கள் மற்றும் சந்நிதி கோவில் ஆகிய இடங்களில் இருந்து பிற்பகல் 3 மணியி லிருந்து 4 மணிவரை போக்குவரத்துக் கான வாகனங்கள் புறப்படும் என ஏற் பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ.108)

# அராலி பாம்கௌவுஸ் வீதியை சீரமைத்துத் தருமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம்.நவ.24
யாழ்ப்பாணம் அராலி பாம் கௌவுஸ் வீதி 35 வருட கால மாக திருத்தப்படாத நிலையில் காணப்படுகின்றது. தொடர்ந்து பெய்து வரும் மழை காரண மாக வீதி சேற்று நிலமாகக் காணப்படுவதால் பயணிப்ப தில் மக்கள் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.
அராலி ஜே/164 கிராம அலுவ லர் பிரிவுக்குட்பட்டதே இந்த வீதி. அராலிப் பிரதேசத்தில் ஏனைய வீதிகள் திருத்தப்பட்டு விட்ட நிலையில் இந்த வீதி மட் டுமே திருத்தப்படாது காணப்ப டுகின்றது என மக்கள் கவலை தெரிவித் துள்ளனர்.
இந்த வீதி வழியாக வாகனங்கள் பய ணம் செய்ய முடியாத வகையில் மழை வெள்ளம் தேங்கி நிற்பதுடன் தேங்கி நிற்கும் வெள்ளத்தாலும் பல அசௌகரி யங்களை எதிர்நோக்குகின்றோம் என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
ஆகவே உரிய அதிகாரிகள் வீதியைச் சீரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய முன்பள்ளிக்கு நிதியுதவி

நீர்வேலி, நவ. 25
நீர்வேலி செல்லக்கதிர்காம ஆலய முன்பள்ளி கட்டடத்துக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.
யாழ்ப்பாணம் நீர்வேலி செல் லக்கதிர்காம ஆலய முன்பள்ளிக்கான கட்டட சீர மைப்புக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது 2017ஆம் ஆண்டுக் கான மாகாணசபைக்கான நிதியொதுக்கீட்டின் கீழ் ரூ. 75 ஆயிரம் நிதி வழங்கினார்.
மேற்படி காசோலை கையளிக் கும் நிகழ்வு கடந்த 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நீர் வேலி செல்லக்கதிர்காம கோயிலில் இடம்பெற்றது. நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், ஆலய பிரதமகுரு மற்றும் ஆலய நிர்வா கிகள், ஊரவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (எ)



# அச்சுவேலிப் பொலிஸாரின் தேடுதலில் எண்மர் சிக்கினர்

யாழ்ப்பாணம், நவ.25
அச்சுவேலிப் பொலிஸாரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளில் அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த எண்மர் கைது செய்யப் பட்டனர்.
யாழ்ப்பாணக் குடா நாட்டில் அண்மைக் காலங்களில் இடம் பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களின் பின்னர் பொலிஸாரு டைய சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெறுகின் றன. வன்முறைச் சம்பவங்களில் ஈடுபவோரைக் கைது செய்வதற்காக அவர்கள் தேடுதல்களிலும் ஈடுபடுகின்றனர்.
அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.
இதன் போதே எண்மர் கைது செய்யப்பட்டனர். அச்சுவேலி வசவிளான் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்ற சிறியரக உழவியந்திரத்தின் சாரதி, அனுமதிப்பத்திரமின்றி கல் ஏற்றிய கன்ரர் ரக வாகனத்தின் சாரதி, மல்லாகம் நீதி மன்றால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர்கள் அறுவர் என எண்மர் கைது செய்யப்பட்டனர் என அச்சு வேலிப் பொலிஸார் தெரிவித்தனர். (21.26)

# யாழ். சின்மயா மிஷனில் வானப்பிரஸ்த வகுப்பு

யாழ்ப்பாணம், நவ. 24
யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம் மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாரந்தோறும் சனிக்கிழ மைகளில் 60 வயதினருக்கு மேற்பட்ட மூத்த பிரஜை களுக்கான வானப்பிரஸ்த வகுப்பு காலை 9 மணி முதல் 10 மணி வரை சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் விலாசத்தில் நடைபெறும்.
எதிர்வரும் இன்று சனிக்கிழமை ஆதிசங்கரர் அருளிய 'தத் வபோதம்' வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. ஆர்வலர்கள் அனை வரும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.
அனுமதி இலவசம். தொடர்புகளுக்கு 0212223447 என்ற அலைபேசியூடாக தொடர்பு கொள்ளவும். (எ)

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் அமைக்கப்பட்ட திட்டங்கள் நேற்று ஆராய்வு

யாழ்ப்பாணம் நவ. 25
ஆசிய அபிவிருத்தி வங்கி யின் உதவிப் பணிப்பாளர் சென்சாய் சாங் தலைமையி லான குழுவினர் நேற்று நெடுந்தீவுக்குச் சென்றனர்.
ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதிப் பங்களிப்பில் நெடுந்தீவில் முன்னெடுத்த திட்டங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் மேற்கொள் ளத் திட்டமிடப்படும் திட்டங் கள் தொடர்பிலும் அராய்வ தற்காகவே அவர்கள் அங்கு சென்றனர்.
ஆசிய அபிவிருத்தி வங்கி யின் நிதியில் கட்டப்பட்ட நெடுந்தீவுப் பிரதேச செயல கம், பிரதேச செயலகத்துக் கான 3 விடுதிகள் மற்றும் நெடுந்தீவுக்கான கடல் நீர் சுத்திகரிப்புத் திட்ட ஆரோப் பிளாட் என்பனவற்றை அவர்கள் நேரில் பார்வை யிட்டனர். தொடர்ந்து நெடுந் தீவுப் பிரதேச செயலாளர் தலைமையில் நெடுந்தீவு மக் கள், பொது அமைப்புக்களை யும் சந்தித்துத் தீவுக்கான தேவைகள் தொடர்பில் கேட் டறிந்தனர்.
"நெடுந்தீவில் தற்போது 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் உள்ளபோதிலும் சுமார் 2 ஆயிரத்து 500 மக் களின் நீர்த்தேவையைக் கூட தற்போது உள்ள ஆரோ பிளாட்டினால் பூர்த்தி செய்ய முடியவில்லை. எனவே இதேபோன்று மற்றுமோர் நீர் சுத்திகரிப்பு இயந்தி ரத்தை வழக்குங்கள். நெடுந் தீவின் உள்ளக வீதிகள் பல நீண்டகாலமாகச் சீரமைப்பு இன்றிக் காணப்படுவத் தோடு நெடுந்தீவில் உள்ள ஒரேயொரு வைத்தியசாலை யிலும்பலதேவைகள்காணப் படுகின்றன. அவற்றையும் ஆசிய அபிவிருத்தி வங்கி பூர்த்திசெய்து தரவேண்டும்" என மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது
மக்களுடைய கோரிக் கைக்கு அமைய மாவட்டச் செயலருடன் கலந்துரை யாடி நெடுந்தீவு மக்களின் முழுமையான நீர்த்தேவை யைப் பூர்த்தி செய்யும் வகை யில் மற்றுமோர் ஆரோ பிளாட் அமைத்துக் கொடுக்க முயற்சிக்கப்படும் என அவர் கள் தெரிவித்தனர். (21.101)




*காங்கேசன்துறை சாரணர் மாவட்ட தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் தரம் 1 மற்றும் தரம் 2 ஆகிய வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு கிங்சிலி சாரணர்களுக்கான சின்னஞ் சூட் டும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.* (எ,9)

## வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள்

யாழ்ப்பாணம் நவ 25
வயாவிளான் புனித யாகப்பர் ஆலயத்தில் கிறிஸ்து அரசர் பெருவிழா மற்றும் பொது நிலையினர் தினத்தையொட்டி சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இன்று சனிக்கி ழமை மாலை 5 மணிக்கு ஆயத்த வழிபாடுகளும் மறு நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 2 மணிக்கு திருப்பலியும் இடம்பெறவுள்ளது எனப் பங்குத்தந்தை அருட்பணி சீ.யே. ஜெயக்குமார் அடிகள் தெருவித்துள்ளார். (எ.135)

# அமரர் கமலாதேவி ஞாபகார்த்த சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வு

கரணவாய், நவ. 25
அமரர் இரத்தினம் கமலாதேவி ஞாபகார்த்த புலமைப் பரிசில் வழங்கலும் சாதனையாளர் மதிப்பளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கரணவாய் மணியகாரன் தோட்ட அ.த.க பாடசாலை முன்றலில் இடம்பெறவுள்ளன.
தேசிய சேமிப்பு வங்கி ஓய்வு நிலை முகாமையாளர் மா.பரமானந்தம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் அரசுக் கட்சித் தலைவருமான மாவை சேனாதிராசா கலந்து கொள்வார்.
இதில் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்த 30 மாணவர்களும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 35 மாணவர்களும் தேசிய மட்ட ஆங்கில மற்றும் தடகளப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.
அத்துடன் குரு பிரதிபா விருது பெற்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். (எ.9,108)

# ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் குருதித் தானம்

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் குருதிக்கொடை முகாம் இடம்பெறவுள்ளது.
இல.05 பழையபூங்கா வீதி, சுண்டுக்குளியிலுள்ள ஜெய்ப்பூர் நிறுவன அலுவலகத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9 மணிக்கு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
ஜெய்ப்பூர் நிறுவனப் பயனாளிகள், அலுவலக உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிறுவனத் தலைவர் மருத்துவர் ஜெ.கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார். (எ)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 | 80 |
| கத்தரி | 160 | 160 | 150 | 160 | 160 |
| மரவள்ளி | 60 | 50 | 80 | 40 | 50 |
| பயிற்றை | 220 | 240 | 300 | 200 | 220 |
| பாகல் | 350 | 360 | 450 | 300 | 360 |
| க.கிழங்கு | 70 | 70 | 70 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 200 | 140 | 160 | 180 |
| சி.வெங்காயம் | 400 | 320 | 350 | 400 | 400 |
| பூசணி | 70 | 80 | 60 | 80 | 60 |
| தக்காளி | 90 | 140 | 200 | 140 | 240 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| கீரை | - | 50 | 60 | 40 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 30 | 50 |
| ப.மிளகாய் | 800 | 800 | 800 | 800 | 700 |
| புடோல் | 90 | 140 | 120 | 140 | 120 |
| கோவா | 160 | 160 | 140 | 200 | 160 |
| வெண்டி | 100 | 120 | 180 | 140 | 120 |
| போஞ்சி | 130 | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 280 | 200 | 220 | 240 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 60 | 70 | 80 | 80 | 70 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 380 | 300 | 250 | 300 | 340 |
| கரட் | 200 | 240 | 200 | 160 | 220 |
| முருங்கைக்காய் | 120 | 250 | 400 | 120 | 200 |

# மானிய விலை உருளைக்கிழங்கு விநியோக நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.25
யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கான மானிய விலை விதை உருளைக்கிழங்கு விநியோகத்தின் உத்தியோகபூர்வ ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை பி.ப 3 மணிக்கு திருநெல்வேலி விவசாயத் திணைக்கள வளாகத்தில் நடைபெறும்.
யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் விதை உருளைக்கிழங்கு விநியோகித்து ஆரம்பித்து வைக்கின்றார். நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் ஏ.ஶ்ரீரங்கன், மாவட்டச் செயலாளர் கைலேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட சமாசத்தின் தலைவர் இ.தெய்வேந்திரன் மற்றும் விவசாய பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர். இந்த வருடம் உருளைக்கிழங்குக்கு பதிவு செய்த விவசாயிகளுக்கு நான்கு அந்தர் விதை உருளைக்கிழங்கு 50 சதவீத மானிய விலைக்கு வழங்கப்படவுள்ளது. (எ,11)

# விவசாயிகளுக்கான உரமானியப் பணம் வைப்பிலிடப்பட்டது

யாழ்ப்பாணம்.நவ.25
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான உரமானியத்துக்கான நிதிப்பணம் நேற்றுமுன்தினம் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
நடப்பு வருடத்தின் நெற்செய்கை மானியத்துக்காக உரிய ஆவணங்கள் சமர்ப்பித்த 8 ஆயிரத்து 225 பேருக்கான உரமானிய நிதி அவர்களின் வங்கிக் கணக்கில் நேற்றுமுன்தினம் வைப்பிலிடப்பட்டது.
இந்த வருடம் சுமார் 4ஆயிரத்து 541 கெஹ்டேயரில் நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்காக பதிவுகளை மேற்கொண்ட யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளுக்கான பணம் இலங்கை வங்கியில் அவர்களின் சொந்தக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது. காலதாமதமாக விண்ணப்பித்த சாவகச்சேரி, கைதடி பிரதேச விவசாயிகளுக்கான உரமானியம் அடுத்த வாரம் கிடைக்கும். மொத்தமாக 6 கோடியே 11 லட்சத்து 37 ஆயிரத்து 500 ரூபா வைப்பில் இடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ.ரி 50)

# கிட்டுப் பூங்காவில் மலர்க் கண்காட்சி இன்றும் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ. 25
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கிட்டுப் பூங்காவில் நடைபெற்று வரும் மலர்க் கண்காட்சி இன்று இரவு 8 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என அந்த அமைப்பின் தலைவரும் மாகாணசபை உறுப்பினருமான பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். (5)

# உருளைக்கிழங்கு செய்கை மானியம் பெறுவதில் யாழ். விவசாயிகள் ஆர்வம்

## மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தகவல்

யாழ்ப்பாணம்.நவ.25
யாழ்ப்பாண மாவட்டத்தில் உருளைக்கிழங்கு செய்கைக்கான அரை மானியத்தை பெறுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டியுள்ளனர் என்று மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
உருளைக்கிழங்குச் செய்கையாளர்களுக்கான அரைமானியம் வழங்குவதற்கு கொழும்பு அரசு தீர்மானித்தது. உருளைக்கிழங்குச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதற்காக விவசாயி ஒருவர் மேற்கொள்ளும் செய்கைக்கு ஏற்ப அதற்கான மொத்த பெறுமதியின் அரைவாசிப் பணத்தை அரசு வழங்கி விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக்கொடுக்கும் ஒரு திட்டமாகும்.
அதன்படி யாழ்ப்பாண மாவட்ட உருளைக்கிழங்கு சங்கத்தின் ஊடாக மாவட்ட செயலக விவசாயப் பிரிவுக்கு செய்கையாளர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. நேற்றுமுன்தினம் முதல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டிசெம்பர் மாதம் முதலாம் திகதி வரை இந்தப் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
கடந்த இரண்டு நாள்களில் 183 பேர் பதிவு செய்துள்ளனர். இந்தமுறை ஆயிரத்து 300 விவசாயிகள் இந்தச் செய்கையை மேற்கொள்வதற்குப் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கான விதை உருளைக்கிழங்கு வழங்கும் ஆரம்ப நிகழ்வு இன்று சனிக்கிழமை திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் மாலை 3 மணிக்கு நடைபெறும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
50 கிலோவுக்கான உருளைக்கிழங்கு அரை மானியமாக 14 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ.ரி.17)

# பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25
யாழ்ப்பாணம் பரமேஸ்வரா வித்தியாலயத்தின் பழைய மாணவர் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறும். அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (எ)

# ஆ.சி.நடராசாவின் நினைவஞ்சலியும் முதியோர் மதிப்பளிப்பும்


யாழ்ப்பாணம், நவ.25
குரும்பசிட்டி மறைந்த ஆ.சி.நடராசாவின் 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் முதியோர் மதிப்பளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு குரும்பசிட்டி பொழுதுபோக்கு மண்டபத்தில் (கலைஞானி கலையரங்கம்) இடம்பெறவுள்ளது.
குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொ.தங்கராசா தலைமையில் இது நடைபெறவுள்ளது. முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொள்வார். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது. (4)

# சேவைநலன் பாராட்டு விழாவும் வரவேற்பு விழாவும்

யாழ்ப்பாணம்,நவ.25
பருத்தித்துறை பிரதேச செயலகராகச் சேவையாற்றி யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகப் பதவியேற்றுச் சென்றுள்ள இ.த.ஜெயசீலனின் சேவைநலன் பாராட்டுவிழாவும் ஆழ்வார்பிள்ளை சிறியின் வரவேற்பு விழாவும் இடம்பெறவுள்ளது.
பருத்தித்துறை ராஜாராணி மண்டபத்தில் ராஜாராணி சேவை இல்ல தலைவர் யோ. இருதயராசா தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை மாவட்டச் செயலர் வே.விசுவலிங்கமும் சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை மாவட்டச் செயலர் ஶ்ரீநிவாசனும் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம்,நவ.25
வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு அதிபர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தரம் ii நாகர்கோவில் அ.மி.த.க. பாடசாலை, தரம் iii துன்னாலை வடக்கு மெ.மி.த.க பாடசாலை, தரம் iii புனிதநகர் தமிழ் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமைகளாக பின்வருவன கொள்ளப்படும்.
தரம் ii பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவையில் தரம் ii அல்லது அதற்கு மேற்பட்ட தகமையுடையவராக இருத்தல் வேண்டும். தரம் iii பாடசாலைக்கு விண்ணப்பிப்போர் அதிபர் சேவையில் தரம் iii அல்லது அதற்கு மேற்பட்ட தகமையுடையவராக இருத்தல் வேண்டும்.
அதிபர் தரத்துக்குப் பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் இலங்கை அதிபர் சேவையில் கடமையாற்றாதவர்களும் விண்ணப்பிக்கமுடியும். வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நிரந்தரமாக சேவையாற்றுபவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது 3 வருடங்கள் சேவையாற்றியிருத்தல் வேண்டும்.
வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு வடமராட்சிக் வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ)



பெண்களுக்கான கைப்பைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை இரண்டாயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# உறுப்பினர்களின் அசமந்தத்தால் மாகாண மூலதன நிதி கிடப்பில்

## 61 சதவீதமானது இன்னும் செலவு செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம்.நவ.25
நடப்பு வருடத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர்ககளின் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியில் மேற்கொள்ள சமர்ப்பித்த வேலைத்திட்டங்கள் இழுத்தடிப்பு நிலையில் காணப்படுவதாக மாகாண பேரவைச்செயலகம் தெரிவித்துள்ளது.
தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்கள் பற்றிய விவரங்களை கேட்டபோதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:
வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நடப்பு வருடத்தில் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியாக தலா 6 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. அந்த நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்களுக்கான அறிக்கையை அவர்கள் முன்வைத்திருந்தாரக்ள்.
அதன் படி 2ஆயிரத்து 390 திட்டங்களை முன்வைக்கப்பட்டன. ஆனால் அந்த வேலைகள் யாவும் நடப்பு வருடத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவை. வருடம் நிறைவடைவதற்கு ஒரு மாத கா்லம் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் இதுவரை 925 திட்டங்கள் மாத்திரமே முழுமை பெற்றுள்ளன.
அதாவது 39 வீதமானவையே முழுமை பெற்றுள்ளது.
திட்டங்களைக் காலதாமதமின்றிச் சமா்ப்பியுங்கள், வேலைகளை முன்னெடுங்கள் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அனைவரின் முன்திட்ட முன்மொழிவு களும் ஒக்டோபர் மாதமே கிடைத்தது.
வடக்கு மாகாணத்தில் 17 திணைக்களங்களுக்கு மொத்த நிதி ஒதுக்கீடாக நடப்பு வருடத்தில் ரூ 198 மில்லியன் வழங்கப்பட்டது. சபை உறுப்பினர்கள் இதற்கான வேலைகளை குறித்த திணைக்களங்கள் ஊடாக மேற்கொள்ளுவதற்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்கள்.
அதன்படி உள்ளூராட்சித் திணைக்களம் 397 வேலைத்திட்டத்தில் 243 வேலைகள், கலாசாரத் திணைக்களம் 291 வேலைத்திட்டத்தில் 97 வேலைகள், தொழில்துறைத் திணைக்களம் 173 வேலைத்திட்டத்தில் 17 வேலைகள், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் 34 வேலைத்திட்டத்தில் 22 வேலைகள், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் 191 வேலைத்திட்டத்தில் 63 வேலைகள், கல்வித் திணைக்களம் 502 வேலைத்திட்டத்தில் 187 வேலைகள், விளையாட்டுத் திணைக்களம் 216 வேலைத்திட்டத்தில் 62 வேலைகள், கிராம அபிவிருத்தித் திணைக்களம் 159 வேலைத்திட்டத்தில் 89 வேலைகள், சுகாதாரத் திணைக்களம் 30 வேலைத் திட்டத்தில் 4 வேலைகள், விவசாயத் திணைக்களம் 62 வேலைத்திட்டத்தில் 38 வேலைகள், சுதேச மருத்துவத் திணைக்களம் 5 வேலைத்திட்டத்தில் 5 வேலைகள், நீர்ப்பாசனத் திணைக்களம் 2 வேலைத்திட்டத்தில் 1 வேலை, சமூக சேவைகள் திணைக்களம் 153 வேலைத்திட்டத்தில் 30 வேலைகள், சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம் 2 வேலைத்திட்டத்தில் 0 வேலைகள், பேரவைச் செயலகம் 1 வேலைத்திட்டத்தில் 0 வேலைகள் என்பனவே தற்போது நிறைவடைந்துள்ளன.
இது பற்றி பேரவைச் செயலகம் தெரிவித்ததாவது:
ஒதுக்கப்பட்ட நிதியில் முன்மொழிவுகளைச் சமா்ப்பித்து வேலைத் திட்டங்களை ஆரம்பியுங்கள் என்று தெரிவித்தாலும் வருட இறுதிவரை வேலைத்திட்டங்களை இழுத்தடிப்பு செய்வது வழமை. பொருள்கள் கொள்வனவு, திட்ட அறிக்கையில் மாற்றம் போன்ற காரணத்தினால் வேலைத்திட்டங்கள் தாமதம் ஆகினாலும், வருட ஆரம்பத்தில் நிதி ஒதுக்கீடு கிடைக்கும். வேலைகளை அப்போது ஆரம்பித்தால் வேலைகள் தாமதம் ஆகாது. கணக்கு அறிக்கை சமா்ப்பிப்பதில் எமக்கும் சிக்கல் இருக்காது-என்று தெரிவிக்கப்பட்டது. (எ.ரி)

---

கோரிக்கை வைத்து 3 மாதம் கடந்தும்

## தெருநாய்கள் பிடித்தல் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இல்லை

யாழ்ப்பாணம்,நவ.25
யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துக் காணப்படும் தெருநாய்களால் அதிகளவில் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதோடு நாய்க்கடிக்கும் மக்கள் இலக்காகின்றனர்.
இதனைக் கருத்தில் கொண்டு உடனடியாக தெருநாய்களைப் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என கடந்த மே மாதம் 13ஆம் திகதி வடக்க மாகாண முதலமைச்சர் தலைமையிலான கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டபோதிலும் இன்றுவரை தீர்வு வழங்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த மே மாதம் 13ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் முதலமைச்சர் தலைமையில் இடம்பெற்றது.
இதன்போதே மேற்படி விடயம் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது.
தெரு நாய்களை முன்னர் உள்ளூராட்சி மன்றங்கள் பிடித்தன இருப்பினும் 6 ஆண்டுகளுக்கும் மேலாக நாய்களை கட்டுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதன் காரணமாக மீண்டும் தெருநாய்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது.
இவற்றினைக் கருத்தில் கொண்டு நாய்களை உடனே பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கோரிக்கை விடப்பட்டது. இது தொடர்பில் ஆராய்ந்த வேளையில் மகிந்த சிந்தனையின் பிரகாரம் நாய்களை பிடிப்பது தடுக்கப்பட்டது எனக் கூறப்பட்டது. எனினும் அது சட்டப்பிரகாரம் தடை செய்யப்பட்ட ஓர் விடயம் அல்ல என்பது சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இது தொடர்பில் மேலும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் சுட்டிக்காட்டியிருந்தனர்.
இருப்பினும் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் இது தொடர்பில் பதில் அளிக்காத காரணத்தால் நாய்களைப் பிடிப்பது தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபட முடியவில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (எ.101)

---

## கஞ்சா வைத்திருந்த மூன்று பேருக்கு தண்டம்

கிளிநொச்சி நவ 25
கஞ்சாவை உடமையில் வைத்திருந்த மூன்று பேருக்கு 75 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.
கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் கஞ்சாவினை உடமையில் வைத்திருந்தார்கள் என கைது செய்யப்பட்டவர்கள் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். இதில் 500 கிராம் கஞ்சாவினை உடமையில் வைத்திருந்த நபருக்கு 50ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
15 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபருக்கு 15 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
4 கிராம் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (எ.6)

---

## புங்குடுதீவு மாணவி கொலை வழக்கு நிரபராதியின் விளக்கமறியல் நீடிப்பு

தீவகம், நவ. 25
புங்குடுதீவு மாணவி கொலை வழக்கின் நிரபராதியின் விளக்கமறியல் எதிர்வரும் 06ஆம் திகதி வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.
மாணவி கொலை வழக்கில் முதலாவது சந்தேக நபராக கைது செய்யப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமார் ஊர்காவற்துறை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரின் பெயரைக் கூறி கொலை அச்சறுத்தல் விடுத்து இருந்தார்.
அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்துறை பொலிஸார் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்,
குறித்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதவான் மன்றில் நீதவான் ஏ. எம்.எம்.றியாழ் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.
அதன் போது சந்தேக நபர் சார்பில் முன்னிலையாகிய சட்டத்தரணி, சந்தேக நபரின் குடும்ப நிலை மற்றும் மாணவி கொலை வழக்கில் குற்றம் இழைக்காது தண்டனை அனுபவித்து வந்தவர் என்பதனையும் கருத்தில் கொண்டு விடுதலை செய்யுமாறு விண்ணப்பம் செய்தார்.
அதனை தொடர்ந்து நீதிபதி தெரிவிக்கையில்,
நீதிமன்றில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் எனச் சந்தேக நபருக்கு விளக்கமளித்து இருந்த போதிலும் நீதிமன்ற வளாகத்தில் வைத்தே அவர் அச்சுறுத்தல் விடுத்தார்.
எனவே சட்டத்தின் பிரகாரம் வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த தவணையின் போது கட்டளை பிறப்பிக்கப்படும் எனத் தெரிவித்தார். (எ.37)

---

## விடுதலைப்புலிகள் காலத்தில் காவல்துறைக்கும் மக்களுக்குமான உறவு நெருக்கமாக இருந்தது

### பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்

கொழும்பு, நவ. 25
விடுதலைப்புலிகளின் காலத்தில் காவல்துறைக்கும் பொது மக்களுக்குமான உறவு நெருக்கமாக இருந்தது. இதனால் பிரச்சினைகளை உடனுக்குடன் தெரியப்படுத்தி தீர்வுகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. தற்போது அப்படியில்லை என பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:
கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மாவட்ட சிவில் பாதுகாப்பு குழு கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
நிகழ்வில் வடக்கு மாகாண சிரேஸ்ட காவல்துறை அதிகாரி ரி.கணேசநாதன் மற்றும் கிளி நொச்சி மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெறுகின்ற குற்றச்செயல்களை கட்டுப்படுத்தல், சட்டம் ஒழுங்கை பேணுதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. இது தொடர்பில் சிவில், சமூக அமைப்புகளின் குறிப்பாக கிராம, மாவட்ட மட்டங்களின் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் பங்களிப்பின் அவசியம் பற்றியும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு அவர்களின் ஒத்துழைப்புப் பற்றியும் வடக்கு மாகாண சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியினால் வலியுறுத்தப்பட்டது.
இதன் போது கலந்துகொண்ட சிவில் சமூக பிரதிநிதிகள் தங்களின் கருத்துக்களையும் தெரிவித்தனர்.
அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:
காவல்துறைக்கும் பொது மக்களுக்குமான உறவு குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு ஆனால் தற்போது அவர்களுக்கிடையிலான உறவில் இடைவெளி காணப்படுகிறது. இதனால் குற்றச்செயல்க ளைக் கட்டுப்படுத்து வதில் பெரும் சிரமங்கள் காணப்படுகின்றன. அதற்கு மொழியும் ஒரு தடையாக இருக்கிறது. இது தொடர்பில் கருத்தில் எடுக்க வேண்டும்-என்று தெரிவிக்கப்பட்டது. (எ.35)

---

## தொழிற்பயிற்சி கற்கைநெறிகள்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வேலைவாய்ப்பை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன..
தேசிய தொழில் தகைமை சான்றிதழுக்கான இந்த கற்கை நெறிகள் அனைத்தும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி இலவசமாக ஆரம்பிக்கப்படும்.
பதிவுகளை அலுவலக நேரத்தில் 'மாவட்ட அலுவலகம் 4ஆம் மாடி, வீரசிங்க மண்டபம், இல.12, கே. கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்' (0212227949) நிலையத்தில் அல்லது தொழிற்பயிற்சி நிலையங்களில் எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண அதிகார சபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் தெரிவித்துள்ளார். (எ.4)

---

பனை அபிவிருத்திச் சபையிலிருந்து

## பலாலி இராணுவத்தால் ஒரு லட்சம் பனம் விதைகள் பெறப்பட்டன

யாழ்ப்பாணம்.நவ. 25
யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு லட்சம் பனம் விதைகளைத் தாம் நடவுள்ளதாகக்கூறி பலாலியில் உள்ள இராணுவத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர் என்று மாவட்டப் பனை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.
இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தின் அடையாளமான பனை மரத்தின் பரம்பலை அதிகரிக்க பனம் விதைகள் நடும் செயல்திட்டம் பிரதேச செயலகம் ரீதியாக நடைபெற்று வருகின்றது. பனையின் முளைதிறனை கருத்தில் கொண்டு அதற்கான பராமரிப்பு வேலைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. நடப்பு வருடத்தில் 2 லட்சத்து 87 ஆயிரத்து 500 பனம் விதைகள் நடப்பட்டன.
இதற்காகப் பிரதேச செயலகங்கள் கேட்கும் எண்ணிக்கையிலான பனம் விதைகளை வழங்கி வருகின்றோம்.
பலாலி படைப்பிரிவின் பொறுப்பதிகாரியின் வேண்டுகோளுக்கு அமைவாக வழங்கிய பனம் விதைகளை பலாலி மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நட்டுள்ளனர். அடுத்த வருடம் தற்போது நடப்பட்டுள்ள பனம் விதைகளைப் போல இரண்டு மடங்கு விதைகளை நடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ.ரி)

பிற மாவட்டங்களில் கற்பிக்கும்

## ஆசிரியர்களுக்கு போக்குவரத்து விடுதி வசதி ஏற்படுத்த வேண்டும்

### இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 25
வடக்கு மாகாணத்தில் பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில், வெளிமாவட்டங்களிலிருந்து சென்று பணியாற்ற போக்குவரத்துகளும் தங்குமிட வசதிகளின்மையும் தடையாக உள்ளன. இவற்றில் கூடுதல் கவனம் செலுத்துமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கோருகிறது.

வெளிமாவட்டங்களுக்குச் சென்று பெரும் மனச்சுமைகளோடு பணியாற்றும் ஆசிரியர்களின் நலன் சார்ந்து சிறிதளவேனும் சிந்திக்காமல் வடக்கு மாகாணத்தின் கல்வியில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் என்று வடக்கு மாகாண கல்வியமைச்சு கருதுகின்றதா? என்றும் சங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

அரச நிர்வாக முகாமைத்துவ அமைச்சு விரல் அடையாள இயந்திரப் பதிவுமுறையை நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

ஆனால் அது சார்ந்த நடவடிக்கையைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த முன்னர் வடக்கு மாகாணத்தின் பாடசாலைகளின் இதர வசதி வாய்ப்புக்களின் சாதக பாதக நிலைகளைக் கருத்திலெடுத்து பாடசாலைகளுக்கான நேர நிர்ணயம் வடக்கு மாகாண கல்வியமைச்சால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

பல மாவட்டங்களில் உள்ள பல பாடசாலைகளுக்குக் காலை 7.30 மணிக்கு முன்னர் சென்றடைய முடியாத போக்குவரத்தும் காணப்படுகின்றது. இந்த விடயங்கள் சீர் செய்யப்படாமலேயே, பாடசாலைகள் அனைத்தும் அரை மணிநேரம் முன்னராக 7.30க்கு ஆரம்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வியமைச்சால் அறிவுறுத்தப்பட்டது.

விரலடையாளப் பதிவிடலில் சட்டம் பற்றிப் பேசும் அதிகாரிகள் பாடசாலை நிறைவடைந்த பின்னரும் ஆசிரியர்களை மறித்து மேலதிக நிகழ்வுகளையும், ஆசிரியர் கூட்டங்களையும் நடத்துவது சட்டவிரோதம் என்பதை பேசமறுக்கின்றனர்.

மாணவர்களுடன் நேரடியாக தொடர்புபடுபவர்கள் ஆசிரியர்களே. இவர்களே களப்பணியாளர்கள். இவர்களின் உளவியல் என்பது மிகமுக்கியமானது. குளிரூட்டப்பட்ட அறைகளிலிருந்து தீர்மானங்களை எடுப்பவர்கள் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கக்கூடிய தீர்மானங்களை எடுக்கவேண்டும். மாறாகத் தமது அதிகாரத் திணிப்பினூடாக ஆசிரியர்களையும் மாணவர்களையும் விரக்தி நிலைக்குக் கொண்டுசெல்லும் முடிவுகளை எடுக்கக்கூடாது - என்றுள்ளது. (எ.4)

வடக்கு மாகாணத்தில்

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஜனவரியிலிருந்து 6,000 ரூபா

### வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 25
வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 6 ஆயிரம் வழங்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணசபையால் நிறைவேற்றப்பட்ட 2015ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க வடக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி நியதிச் சட்டத்தின் 19ஆம் பிரிவுக்கு அமைவாக இந்த அதிகரிப்பு வழங்கப்படவுள்ளது.

நியதிச்சட்டத்தில் குறிப்பிட்டது போன்று முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவு 6 ஆயிரம் ரூபாவாக 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் வழங்கப்படும்.

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கமும் இன்னும் பல முன்பள்ளி ஆசிரியர்களும் கொடுப்பனவு தொடர்பில் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கல்வி அமைச்சின் செயலாளரின் அறிக்கையின்படி வடக்கு மாகாண கல்வி அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ரூபா 6 வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்குவதற்கான நிதி பிரதித் தலைமைச் செயலாளரிடமிருந்து கல்வி அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே கொடுப்பனவு தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்கள் கலக்கமடையத் தேவையில்லை என்பதனை அறியத்தருகின்றேன். என்றுள்ளது.

வடக்கிலுள்ள 3ஆயிரத்து 202 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வடக்கு மாகாண சபையால் வலயக் கல்வி அலுவலகங்கள் ஊடாக தற்போது மாதாந்தம் 4 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டு வருகின்றது. இந்தத் தொகையே 6 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (எ.4)

## வடக்கில் 40,493 பேர் வேலைகோரி மாவட்ட செயலகங்களில் பதிவு

யாழ்ப்பாணம், நவ.25
வடக்கு மாகாணத்தில் தற்போது 40 ஆயிரத்து 493 பேர் வேலை வாய்ப்புக்கோரி மாவட்டச் செயலகங்களில் பதிவினை மேற்கொண்டுள்ளனர் என்று மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் வேலை வாய்ப்பின்றி உள்ள இளைஞர்களில் குறிப்பிட்டளவானோரே மாவட்டச் செயலகங்களில் தமது பதிவை மேற்கொண்டுள்ளனர்.

இதன் பிரகாரம் அதி உச்சமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 ஆயிரத்து 632 பேரும், வவுனியா மாவட்டத்தில் 4 ஆயிரத்து 840 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 635 பேரும், மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 282 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 94 பேரும் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இவ்வாறு குறித்த எண்ணிக்கையானோர் வேலை வாய்ப்புக்கோரி பதிவுகளை மேற்கொண்டுள்ள போதிலும் பதிவுகளை மேற்கொள்ளாது பலர் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (எ.101)

## சிறுவர் விளையாட்டு திடல்கள்

யாழ்ப்பாணம்.நவ.25
வடக்கு மாகாணத்தில் சிறுவர்களின் ஒய்வு நேரத்தை பயனுள்ளதாக்குவதற்கு பொது இடங்களில் விளையாட்டுத் திடல்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன என்று மாகாண சிறுவர் நன்னடத்தை பராமரிப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

வடக்கு மாகாணத்தில், ஒய்வு நேரம் பயனுள்ளதாக அமைவதற்கும் சந்தோசமான சூழல் உருவாகுவதற்கும் ஏற்ற வகையில் சிறுவர்கள் ஒன்று சேர்ந்து இருப்பதற்கான விளையாட்டுடன் கூடிய சுற்றாடல் அமைப்புகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் புங்குடுதீவு, காரைநகர், நீர்வேலி, கரவெட்டி ஆகிய பிரதேசங்களில் இவை அமைக்கப்பட்டு வருகின்றன. 'சிறுவர்களின் உடல், உளரீதியான ஆரோக்கியத்தைப் பேணவும், விளையாட்டுடன்கூடிய உடல்ஆரோக்கியத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் இந்தச் சூழல் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதற்காக நடப்பு வருடத்தில் ரூ. 2.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. சிறுவர்கள் விளையாடக்கூடிய விளையாட்டு உபகரணத் தொகுதிகள் பொருத்தும் நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ.ரி)

## உடற்கல்வியினரை தரம் 3 க்குள் உள்வாங்கவும்

யாழ்ப்பாணம், நவ. 25
உடற்கல்வி டிப்ளோமா நியமனம் பெற்று பின்னர் தொண்டர் ஆசிரியர்களாக இணைந்து நிரந்தர நியமனம் பெற்றவர்களை வகுப்பு 3 இல் தரம் 1 (இ) க்குள் உள்வாங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரிய சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் தெரிவித்ததாவது:

உடற்கல்வி டிப்ளோமாப் பட்டத்தைப் பெற்றவர்களைப் புதிய சுற்றறிக்கையின்படி வகுப்பு 3 தரம் 1(இ)க்குள் உள்வாங்க வேண்டும். 'அவர்களை உள்வாங்க கொழும்பு அரசின் சுற்றறிக்கை கிடைக்கவில்லை' என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக் கூறுகிறது. கொழும்பு கல்வி அமைச்சிடம் சென்றால் 'அதனை மாகாண சபை செய்ய முடியும்' என்று கூறுகிறது. அதனால் இது தொடர்பில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு கடிதம் மூலமாக அறிவிக்கப்படவுள்ளது-என்றார். (எ.4.50)

# தேசியக்கொடி விவகாரத்தில் மக்களே எமது எஜமானர்கள்

### வடக்கு கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன்

யாழ்ப்பாணம், நவ.25
தேசியக் கொடியைச் சேதப்படுத்துவதும் அதனை ஏற்றவிடாமல் தடுப்பதும் தான் கொடியை அவமதிப்பதாகும். தேசியக் கொடியை ஏற்றாமல் அமைச்சுக்குட்பட்ட உயரதிகாரியை ஏற்றுமாறு பணிப்பது அவமதிப்பல்ல மக்களே எமது எஜமானர்கள். ஆகவே இதனையும் மக்களிடமே விட்டுவிடுகிறோம் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வடக்கு கல்வி அமைச்சர் தேசியக் கொடியை ஏற்ற மறுத்திருந்தார். இந்த விடயம் தெற்கிலுள்ள அரசியல் வாதிகளிடையே விசனத்தையும், ஆத்திரத்தையும் உண்டு பண்ணியிருந்தது. அங்கிருந்து எதிர்ப்புகள் கிழம்பின. வடக்கிலும் இதுவே பேசுபொருளானது.

இந்த விடயம் தொடர்பாக கல்வி அமைச்சர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த சில நாள்களாகத் தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் சிலரும், ஊடகங்களும் தேசியக் கொடி விவகாரம் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். மேலும், இந்த விடயத்தை அதற்கான காரணங்களையும் தீர்வுகளையும் பற்றிப் பேசுவதை விட, என்மீது சட்ட நடவடிக்கையை முதன்மைப்படுத்துவதானது விடயத்தைக் குறுகிய அரசியல் இலாபங்களுக்காகத் திசைதிருப்பி பூதாகாரப்ப டுத்துகின்ற போக்காகவே நோக்கமுடிகின்றது. எனவே இந்த விடயத்தில் வெளிவருகின்ற பல்வேறு கருத்துக்கள் குறித்து எனது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

வவுனியா பரக்கும்ப மகாவித்தியாலயத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஜெயதிலகவின் நிதியொதுக்கீட்டில் மூவின மாணவர்களுக்கும் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வுக்கு என்னையும் அழைத்திருந்தனர். இத்தகைய நிகழ்வுகளில் கொடியேற்றுவது ஒரு மரபல்ல. எனினும், கொடியேற்றும் நிகழ்வில் மாகாணக் கொடியை நான் ஏற்றுவதாகவும் அந்த வலயப் பணிப்பாளர் தேசியக் கொடியை ஏற்றுவார் எனவும் அதிபர் வழக்கம்போல் பாடசாலைக் கொடியை ஏற்றுவார் எனவும் குறிப்பிட்டேன். எனினும், மாகாணக் கொடி அங்கிருக்கவில்லை. பதிலாக பௌத்தக் கொடியே காணப்பட்டது. ஜெயதிலக பௌத்தக் கொடியை ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து அடுத்த நிகழ்வான பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த கோவிலில் வணங்குவதற்கு அழைக்கப்பட்டோம். புத்தபெருமானை வணங்கி மலர்தூவி அர்ச்சனை செய்தேன். நிகழ்வுகள் அனைத்தும் சிறப்பாகவே நடைபெற்றன. எனவே, இந்த விடயம் அந்தப் பாடசாலை நிகழ்வில் ஒரு பிரச்சினையாக எழவில்லை.

எனினும் சில ஊடகங்கள் அங்கு சலசலப்பு ஏற்பட்டதாகக் குறிப்பிடுவது உண்மைக்கு முற்றிலும் புறம்பானதாகும். விடயம் தவறாகத் திரிபுபடுத்தப்பட்டு நான் தேசியக் கொடியை் அவமதித்ததாகவும் செய்திகள் வெளிவந்தன. இது முற்றிலும் தவறானதாகும்.

இந்த விடயம் தொடர்பாக என்னை ஒரு போலித் தேசியவாதி என விமர்சனம் செய்யவும் தயங்கவில்லை. என்னை விமர்சிப்பதாக நினைத்து தமிழரசுக் கட்சியினர் தங்கள் கொள்கையையே மாற்றிக்கொண்டதை நினைக்கையில் எம்மால் அவர்கள் மீது இரக்கப்பட மட்டுமே முடிகிறது. என்றுள்ளது. (எ.21)

# இளைஞனின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ.25



மகியங்கனை வியானா நீரோடையிலிருந்து இளைஞனின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது. இந்த நீரோடையில் நேற்று முன்தினம் மகிழுந்து (கார்) விழுந்ததில் இரண்டு பேர் உயிரிழந்ததோடு, ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயிருந்தார். காணாமற்போன இளைஞனின் சடலமே நேற்று மீட்கப்பட்டுள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் அவர்களின் இரட்டைப் பிள்ளைகளான இளைஞர்கள் இருவர் அந்த மகிழுந்தில் பயணம் செய்திருந்தனர். இரட்டையர்களில் ஒருவர் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
தொடர்பு - 077 2626 944

## வாடகைக்கு

குறைந்த விலையில் அறைகள் நாள் வாடகைக்கு 600/- முதல் 3900/- வரை.
A/C, T/V இணைந்த குளியலறையுடன்
**Hotel Villa City**
422/1, Galle Road, Wellawatte.
(ராம கிருஷ்ண ஷெட் அருகில்)
072 255 2222

## புளியங்குளம் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்(வ.து)
## பதவிவெற்றிடங்கள்

**இதன் கீழ் காணப்படும் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.**

1. விண்ணப்பமுடிவுத் திகதி:- 22.12.2017.
2. விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பத்தாரியால் சுயமாகதயாரிக்கப்படல் வேண்டும்
3. விண்ணப்பம் அனுப்பவேண்டியமுகவரி:- தலைவர்,புளியங்குளம் பனை தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவுச் சங்ககம்,A9 வீதி,பரசங்குளம் புளியங்குளம்.
4. விண்ணப்பங்கள் அனுப்பும் போதுதபால் உறையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும் அத்தோடு விண்ணப்பப் படிவத்திலும் குறிப்பிடப்படவேண்டும்.
5. விண்ணப்பத்துடன் சான்றிதழ் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.

01. **கணக்காளர்**:- 104/12 14590-130X10-140X10-17290
175080-1560X10-1680X10-207480

அ. கூட்டுறவு ஊழியர் 13ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான எழுதுவினைஞர் பதவி ஒன்றில் 2ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 14ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்கு அல்லது கணக்கு பரிசோதனை அலுவல்கள் சம்பந்தமான பதவி ஒன்றில் 4 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்கு பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப்பரீட்சையிலான சித்தி அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரம் சித்தி/ கூட்டுறவுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி அல்லது க.பொ.த.உயர் தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகாரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல் /கணக்காய்வுத்துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்

2. **களஞ்சிய முகாமையாளர்**:- 208/14 13875-115X10-125X10-16275
166500-1380X10-1500X10-195300

அ. கூட்டுறவுஊழியர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் ஆகக் குறைந்தது இரண்டு (2)ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் நான்கு(4)ஆண்டுகால அனுபவம்

அல்லது

ஆ. கூட்டுறவு ஊழியர் சாதாரணதராதரப் பத்திரம் /க.பொ.த.சாதாரண தரம்/ தே.க.பொ.த பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது எண் கணிதம் /வர்த்தக எண் கணிதம்/தூய கணிதம் / கணிதம் உடன் சிங்களம்/ தமிழ்மொழி உள்ளடக்கி 6 பாடங்களுடனான சித்தி

3. **களஞ்சிய முகாமையாளர்**:- 208/15 13515-115X10-120X10-15815
162180-1320X10-1440X10-189780

அ. கூட்டுறவுஊழியர் 16ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்டதுறை பதவி ஒன்றில் இரண்டு(2) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 17ஆவது சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட துறைப்பதவி ஒன்றில் நான்கு (4)வருடங்களுக்கு குறையாத அனுபவம்

அல்லது

இ. கூட்டுறவு ஊழியர் சாதாரண சான்றிதழ் அல்லது க.பொ.த.சாதாரண தரம் கணிதம்/ வர்த்தக எண் கணிதம் /எண்கணிதம் மற்றும் சிங்களம்/ தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியும் தொடரபுப்பட்ட துறையில் அனுபவம்.

4. **காவலாளி** :- 315/17 12800-100X10-110X10-14900
153600-1200X10-1320X10-178800

அ.5 ஆம் வகுப்புச் சித்தியும் நல்ல தேகாரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு**

- பதவிக்கேற்பபிணைப்பணம் அறவிடப்படும்.
- வயதெல்லை 18-45 சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல
- சங்கங்களில் பணிபுரிபவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்
- பதவி நிரந்தரமானது
- இலாபகரமாக இயங்கும் மாதங்களுக்கு சம்பளத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் சுற்று நிருபம் 4/207க்கு அமைவாக வாழ்க்கை செலவுப் படிவழங்கப்படும்.
- வவுனியா மாவட்டத்தை சொந்த முகவரியாக கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தலைவர்,**
**புளியங்குளம் பனை தென்னை வளஅபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்,**
**A9 வீதி,பரசங்குளம்,**
**புளியங்குளம்.**
T.P: **024-3200079**

## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## வழங்குனர்களைப் பதிவு செய்தல் - 2018

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றிற்கு 2018ஆம் ஆண்டிற்கு கீழ் குறிப்பிடப்படும் பொருள்கள், சேவைகள் வழங்குனர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவுசெய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவங்களை மாவட்டச் செயலக நிதிக்கிளை மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகியவற்றில் அலுவலக நேரத்திலும் www.kilinochchi.dist.gov. lk எனும் இணையத்தளத்தின் மூலமும்பெற்றுக்கொள்ளமுடியும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 20.12.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9"x4") இடதுபக்க மேல் மூலையில் **"வழங்குனர்களைப் பதிவுசெய்தல் - 2018"** எனக் குறிப்பிட்டு **"அரசாங்க அதிபர், நிதிக்கிளை, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி"** எனும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் நிதிக் கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிக்கவிரும்புபவர்கள் கட்டிட நிர்மாணவேலைகளுக்கு கீழே உள்ள கட்டண விபரத்திற்கு ஏற்றவாறும் ஏனைய வழங்குனர்கள் ரூபா 500/= இனையும் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக "மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி என்னும் பெயரில் உள்ள இலங்கை வங்கி கணக்கிலக்கம் 7041986 இற்கு பணமாக வைப்பிலிடலாம் அல்லது நேரடியாக மாவட்ட செயலக நிதிக்கிளையில் சிறாப்பரிடம் செலுத்தலாம். வைப்பிலிட்ட பணத்திற்கான வங்கி வைப்புச்சீட்டை / சிறாப்பரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை (பொது 172) விண்ணப்ப படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். அவ்வாறு இணைத்து அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

| ஒப்பந்தத் தொகை | பதிவுக் கட்டணம் |
|---|---|
| ரூபா 2,000,000இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 2000.00 |
| ரூபா 2,000,000 இற்கு அதிகமானதும் 5,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 3000.00 |
| ரூபா 5,000,000 இற்கு அதிகமானதும் 10,000,000 இற்குச் சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத் தொகை | ரூபா 5000.00 |

வேலைகள்
1. கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள்
2. பெருந்தெருக்கள், பாலங்கள், மதகுகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள்
3. குளங்கள், கால்வாய்கள் மற்றும் விவசாய கிணறுகளின் நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள்
4. அனைத்து வகையான வெல்டிங் வேலைகள் மற்றும் அலுமினிய வேலைகள்
5. கட்டிட மின்சார கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்தவேலைகள்
6. நீர்க்குழாய் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் திருத்தவேலைகள்

நிபந்தனைகள்
- ❖ மேற்படி 01 மற்றும் 02 விடயங்களுக்கு(ICTAD)பதிவுகட்டாயமாகும் என்பதுடன் அதற்குரித்தான பதிவுச் சான்றிதழ்களின் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
- ❖ இந்த மாவட்டத்தின் கட்டிடங்கள் உட்பட ஏனைய நிர்மாண வேலைகள், திருத்த வேலைகள், பராமரிப்பு வேலைகள் தொடர்பான ஒப்பந்தங்களைக் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அங்கீகாரம் பெற்றசங்கங்கள் ரூபா 2,000,000 (இரண்டு மில்லியன்) க்குமிஞ்சாத வகையில் பொது நிதிதிணைக்கள சுற்றுநிருப இல - 01/2012இற்கு அமைவாக செய்வதற்குத் தங்களைப் பதிவுசெய்துகொள்ளமுடியும்.

**பொருள்கள் வழங்கல்**

7. அனைத்துவகை ,காகிதாதிகள், எழுது பொருள்கள்
8. நுகர்வுப் பொருள்கள் (தும்புத்தடி, விளக்குமாறு, சவர்க்காரங்கள், காப்பிக், பைனோல், பற்றறிகள், துடைப்பான், ஏனையவை)
9. மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டி.எப் தளபாடங்கள்
10. புகைப்படபிரதி இயந்திரங்கள், கணனி இயந்திரங்கள், கணனி அச்சியந்திரங்கள், ரோணியோ, தட்டச்சு இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், மல்டிமீடியா புரெஜெக்டர்
11. இலத்திரனியல், மின்சாரப் பொருள்கள் (மின்விசிறி, தொலைக்காட்சிப் பெட்டி, டிஜிரல் புகைப்படக் கருவி, வீடியோபதிவுக் கருவி, CCTV புகைப்படக் கருவி போன்றன) உதிரிப்பாகங்கள்
12. வாகனரயர், ரியூப், பற்றறிகள், உதிரிப்பாகங்கள்
13. உணவு வகைகள், குடிநீர் வகைகள், பால்மாவகைகள், மென்பானம், உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்
14. அனைத்து வகையான பலசரக்குப் பொருள்கள், சமையல் எரிவாயு
15. திரைச்சீலைகள் சீருடைகள், மேசை விரிப்புக்கள், நிலவிரிப்புக்கள், பொன்னாடைகள், மேசைக் கண்ணாடிகள், மழை அங்கிகள், கால்மிதிகள், பெற்சீற், தலையணை உறைகள்
16. அனைத்து வகையான கட்டிடப் பொருள்கள், நீர்க் குழாய்கள் மற்றும் நீர்வழங்கல் உபகரணங்கள், காற்றுச் சீராக்கிகள், மின்சார உபகரணங்கள், நிறப்பூச்சுக்கள்
17. தோல் வகை உற்பத்திப் பொருள்களும் விளையாட்டுப் பொருள்களும்
18. சுய தொழிலுக்காக வளர்க்கப்படும் விலங்குகள் (கோழிக் குஞ்சுகள், பாற் பசுக்கள், ஆடுகள்)

**சேவைகள்**

19. புகைப்படபிரதி இயந்திரங்கள், கணனி இயந்திரங்கள், அச்சியந்திரங்கள், ரோணியோ, தட்டச்சு இயந்திரங்கள் மற்றும் கணினி வலையமைப்பு முறைமை திருத்த வேலைகள் மற்றும் பராமரித்தல்.
20. அலுவலகத் தளபாடங்கள் (மரம், உருக்கு, பிளாஸ்ரிக், பைபர்கிளாஸ், எம்.டி.எப்) திருத்தலும் பராமரித்தலும் கதிரை இழைத்தல்
21. இலத்திரனியல், மின்சாரப் பொருள்கள், உதிரிப்பாகங்கள், புல்லுவெட்டி இயந்திரங்கள் திருத்தலும் பராமரித்தலும்
22. மலசலக்கூடங்கள் மற்றும் அலுவலக சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்புப் பொருள்கள்
23. மோட்டார் வாகனங்கள் திருத்தவேலை, துணைப்பாகங்கள் மற்றும் பொறிமுறை சேவைகள்.
24. மேடை மற்றும் ஒலிபெருக்கி சேவைகள்
25. அச்சிடுதல் (offset, digitalஉட்பட), புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள், அலுவலக அடையாள அட்டைகள் செய்தல், சீற் மற்றும் குஷன் கவரிடுதல்
26. பாதுகாப்பு சேவை வழங்கல்
27. சலவை செய்தல், மேசை விரிப்புக்கள் தைத்தல்.
28. உள்ளக தொலைபேசி, வளிபதனாக்கிகள், குளிர்சாதனப் பெட்டிபோன்றன திருத்தலும், பராமரித்தலும்.

**பொதுவான நிபந்தனைகள்**

வழங்குனர்களைப் பதிவுசெய்தலுக்குரிய பொதுவான நிபந்தனைகள்

1) விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   a) வியாபார பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்டபிரதி (பிரதேச சபை, மாணகர சபையினால் வழங்கப்படும் சான்றிதழ்)
   b) நிறுவனப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி
   c) உணவு வழங்கல் சேவையாயின் குறித்த பகுதிக்குரிய PHI / MOH அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட சான்றிதழின் பிரதி
   d) சம்பந்தப்பட்ட வியாபார அனுபவம் மற்றும் பிரதான வாடிக்கையாளர்களின் விவரம்.
2) இவ் வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தலானது 2018ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியாகும். பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்கள் /ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனு கோரப்படும். எனினும் ஏனையவர்களிடமும் விலைமனு கோரும் உரிமை கொள்வனவுதாரருக்கு உண்டு.
3) விண்ணப் படிவத்துடன் வழங்கப்பட்ட தகவல்களில் பிழைகள் ஏதும்காணப்படுமாயின் அத்தகையவிண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.
4) பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்படிவத்தினை காரணம் எதனையும் முன்வைக்காது ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ அரசாங்க அதிபர் அவர்களுக்கு உரிமைஉண்டு.
5) பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் /ஒப்பந்தக்காரர்கள் விலைமனு கோரப்படும் போது அதனை கருத்தில் கொள்ளாது விட்டாலோ அல்லது உரிய காலத்தினுள் பொருளினை வழங்க அல்லது வேலையினை நிறைவு செய்யாது விட்டாலோ அல்லது வழங்கப்பட்ட மாதிரி அல்லது நிபந்தனைகள் ஒத்துப் போகாமல் விட்டாலோ அத்தகைய வழங்குனர்கள் / ஒப்பந்தகாரர்கள் எதிர்காலத்தில் விலைமனு கோரப்படும் போது கவனத்தில் கொள்ளப்படமாட்டார்கள்.
6) வியாபார பதிவு செய்யப்பட்ட தன்மை அல்லது அதனுடன் தொடர்புள்ள பொருள்கள் சேவைகளுக்கே வழங்குனர்கள் பதிவு செய்து கொள்ளமுடியும்.
7) வாகன சுத்திகரிப்பு, பராமரிப்புக்காக பதிவுசெய்யும் வழங்குனர்கள் தேவையான அடிப்படை உபகரணங்கள் மற்றும் வசதிகளை உறுதிப்படுத்தும் விவரங்களை விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
8) வழங்குனர்களுக்கு முற்பணங்கள் எதுவும் வழங்கப்படமாட்டாது.
9) முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
10) மேலதிக விவரங்களிற்கு **"பிரதம கணக்காளர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி"** எனும் செயலக தொலைபேசி இல **0212285309, 0212285352** மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

திரு.சுந்தரம் அருமைநாயகம்
மாவட்டசெயலாளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.



## துயர்பகிர்கின்றோம்

யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
திருமதி நளாயினி நந்தகுமார் அவர்களின்
பாசமிகு தந்தை

**இளையதம்பி நடராசா**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்



**வைத்திலிங்கம் இராசேந்திரம்**

திதி : சப்தமி

தோற்றம்
1938.06.05

மறைவு
2016.12.06

கண்ணிமைத்து விழிக்கவில்லை ஈராறு
மாதங்கள் கடந்ததுவே ஒரு நொடிப் பொழுதும்
மறக்கவில்லை - உங்கள் அன்பான
நினைவுகளும், வழிகாட்டல்களும்
காலமெல்லாம் எம்முடன் வாழ்ந்து காத்திரமாய் வாழ வழி செய்யுங்கள் - அப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

செல்லமுத்து வீதி,
அச்சுவேலி வடக்கு.

குடும்பத்தினர்.




# ராகுல், மன்மோகனுடன் இணைந்து ரணிலைச் சந்தித்தார் சோனியா

கொழும்பு, நவ. 25
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை, காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
புதுடில்லியில் தலைமை அமைச்சர் தங்கியிருந்த விடுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.
சோனியா காந்தியுடன், ராகுல் காந்தி, முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங், காங்கிரஸ் கட்சியின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான ஆனந்த் சர்மா ஆகியோரும் தலைமை அமைச்சருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக எந்தத் தகவல்களும் கசிய விடப்படவில்லை. (5)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கிரேஸ்ரட்ணம்மா வைரவநாதன்



ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிரேஸ்ரட்ணம்மா வைரவநாதன் 22.11.2017 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா சாமுவேல் வைரவநாதனின் பாசமிகு மனைவியும், Dr. டேவிட் ரத்தினநாதன், ஜோசப் ரத்தினராஜா, திருமதி ரெஜினா, காலஞ்சென்ற கிறிஸ்ரி மற்றும் டேனியல் ரத்தினசேயன், ஜோசியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருபாமலர், தயாளினி, காலஞ்சென்ற எரிக் ஸ் ரீபன் மற்றும் ராணி, ஜெயசிறி ரத்தினவேந்தன் ஆகியோரின் மாமியாரும், அனா, சபாதினி, லியோனி ஜொனதன், மனோகரன், கிறிஸ்ரெபல், ஜயந்தினி, ப்ரியங்கா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இலக்கம் 27, Castle lane, பம்பலப்பிட்டியவில் இன்று (25.11.2017) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின் பூதவுடல் ஏழாலை வடக்கில் உள்ள அவரது இல்லத்துக்கு கொண்டுவரப்பட்டு நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது நல்லடக்க ஆராதனை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கிறிஸ்து அரசர் ஆலய கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

077 548 7178

## OBITUARY



**The late
Mrs.Grace Ratnammah Vairavanathan**

Beloved wife of the late Mr.Sellappah Samuel Vairavanathan loving Mother of Dr.David Retnanathan, Mr.Joseph Ratnaraja, Mrs.Regina Stephens, the late Mr.Christy Ratnaruban, Mr. Daniel Ratnaseyan and Mr. Joshua Ratnaven than, Mother - in - law of Kirubamalar David, Thayalini Ratnaraja, the late Mr.Eric Stephens, Rani Ratnaruban, Jeyasiri Ratnaventhan, grand children of Ana Sabatini, Mrs.Leoni Jonathan Manoharan, Christable Jayanthi and Priyanka. Remains will lie at no.27, Castle Lane, Bambalapitiya from 10.00 a.m to 6.00 p.m on 25th November, 2017 (Saturday) for viewing and will be taken to our ancestral house, Erlalai North for funeral at 3.00 p.m on 26th November, 2017 (Sunday).

Informant:
Family Members





## ரணிலை முன்னாள் தலைமை அமைச்சர் என்று பதிவிட்ட ராகுல் காந்தி

கொழும்பு, நவ. 25
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இந்தியாவின் எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்திக் குழுவினருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு நடைபெற்றது. சந்திப்பில் சோனியா காந்தியுடன் ராகுல் காந்தியும் பங்கேற்றிருந்தார். சந்திப்பு முடிவடைந்த பின்னர் ராகுல் காந்தி தனது முகநூலில் சந்திப்புத் தொடர்பான ஒளிப்படங்களைத் தரவேற்றினார்.
அதில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை, முன்னாள் தலைமை அமைச்சர் என்று குறிப்பிட்டிருந்தார். சிறிது நேரத்தில் தவறை உணர்ந்து தலைமை அமைச்சர் ரணில் என்று மாற்றிப் பதிவிட்டுள்ளார். (5)


## கந்தப்பிள்ளை முத்துலிங்கம்
**(ஓய்வுபெற்ற மண் பரிசோதகர், நீர்ப்பாசனத் திணைக்களம்)**



யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை (நாச்சிமார் கோயிலடி) பிறப்பிடமாகவும், உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பிள்ளை முத்துலிங்கம் (ஓய்வுபெற்ற மண் பரிசோதகர், நீர்ப்பாசனத் திணைக்களம்) நேற்று (24.11.2017) வெள்ளிக்கிழமை கொழும்பில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் சிவநேசம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சாந்தியின் அன்புக் கணவரும், Dr. ஞானரூபன், Dr. ஆதவன், Dr. வாகீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. காயத்திரி, Dr. தாட்சாயினி, Dr. பிருந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜேஸ்வரி, பாக்கியம், பஞ்சாட்சரம் (ஜேர்மனி), வேலாயுதம் ஆகியோரின் அன்பு சகோதரரும், பேரின்பநாயகம், செல்வரட்ணம், இராஜேஸ்வரி, ரவீந்திராதேவி, சிறிதரன், வசந்தினி, பாலசுப்பிரமணியம், அருட்செல்வி ஆகியோரின் மைத்துனரும், மகிதனா, ஆத்மிகா, பார்கவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (25.11.2017) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை ஜெயரட்ண மலர்ச்சாலை (பொரல்ல) யில் வைக்கப்பட்டு நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சமயக்கிரியைகள் நடைபெற்று, முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 6991698, 077 200 4857

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**தெய்வேந்திரம் சாந்தராசா**
**(சாந்தன்)**

*(மானிப்பாய் ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளரும், மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க நிர்வாக சபை உறுப்பினரும்)*

பிறப்பு
25 . 05 . 1973

இறப்பு
27 . 10 . 2017

எமது குடும்பத்தீபம் அணைந்த செய்தி கேட்டு உடனே ஓடி வந்து எமக்கு பலவழிகளிலும் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் ஆகியவை மூலம் துயரினை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் உள்நாட்டு, வெளிநாட்டில் இருந்து தொலைத்தொடர்பு மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.109, சுதுமலை தெற்கு,
சாவற்கட்டு, மானிப்பாய்.

குடும்பத்தினர்.




## கொள்ளையன் கைது

கொழும்பு,நவ.25 அரச தலைவரின் உறவினர் ஒருவரின் வீடு உள்ளிட்ட 40 வீடுகளில் கொள்ளையடித்த சந்தேகநபர் ஒருவர் நேற்று தம்புத்தேகம, கொன்வேவ பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இந்தச் சந்தேக நபருக்கு எதிராகக் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் சுமார் 40க்கும் அதிகமான வழக்குகள் காணப்படுவதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
இவரிடமிருந்து 20 பவுண் நகை மற்றும் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

(ற-ரி5)



## மரண அறிவித்தல்



### ஞானமுத்து ஜோன்சன் (ஆரூர்தாஸ்)

(A/O Northsea ltd Gurunagar, Jaffna.)

யாழ் நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமுத்து ஜோண்சன் 24.11.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - ராசமணி தம்பதிகளின் அன்பு மகனும் லொயலாவின்(ராஜி) அன்புக் கணவரும் எல்மார் (Optometrist தேசிய கண் வைத்தியசாலை கொழும்பு), மல்கம்(யாழ்.இந்துக்கல்லூரி உயிரியல் பிரிவு -2019) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருமை, காலஞ்சென்ற கற்கண்டு மற்றும் செல்லமணி ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற யமுனா மற்றும் சித்திரா, கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்ரன் விஜயகுமார் (ஓய்வு பெற்ற யாழ் மாநகரசபை), கார்மேல் மேகலா(ஓய்வு பெற்ற மருத்துவமாது - யாழ் போதனா வைத்தியசாலை), அனஸ்ரா(ஆசிரியை - விஜயரத்தினம் இ.ம.கல்லூரி நீர்கொழும்பு), சியாமா, பாப்பா(பிரான்ஸ்), சுபோ, ஜோசப்(யாழ் மாநகரசபை), அலெக்ஸ், நீல்பிரான், குயின்ரா(போதனாசிரியை - யாழ் பல்கலைக்கழக கல்லூரி), காலஞ்சென்ற குரேதாஸ் மற்றும் அன்ரன் போல், வின்சன், அருட்சகோதரி மேகலா(சல்வற்டோரியன் கன்னியர் மடம், குருநாகல்) ஆகியோரின் மைத்துனரும் விஜய்(கனடா), தீபா(கனடா), யோகா, ஞானராஜ், அன்புராஜ், நீருஜன், நீருஜா, வினுசா, விதுசா ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.11.2017) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாவாந்துறை பரலோகமாதா ஆலயத்தில் நடைபெற்று பூதவுடல் நாவாந்துறை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மேரியோசப் வீதி,**
**நாவாந்துறை.**

**தகவல்:**
**மனைவி, மகன்மார்**

**077 959 6839**

## மரண அறிவித்தல்கள்



### இராசேந்திரம் லோகேந்திரராஜா

**( J.P. Island, ஓய்வுபெற்ற பொலிஸ் உப பரிசோதகர்)**

சங்குவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும், பொன்னாலை வீதி, கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் லோகேந்திரராஜா நேற்றுமுன்தினம் (23.11.2017) வியாழக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் சந்திரகலாரஞ்சினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - குலமணி தம்பதிகளின் மருமகனும், அருள்ராஜ் (G.S பெரியவிளான்), விஜயகலா, உதயகலா, அனந்தபாலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கவிதா, ஜெகநாதன், சஸ்னா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்யன், ஜதுர்சன், டிலானி, ஜிவிஷன், அக்ஷயன், டிலக்சன், அக்ஷா, ஜஷான் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜெயராஜா, லோகநாயகி, சிறிராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கிறிஸ்டோபர், குலச்சந்திரன்- அங்கிஸ், தவரஞ்சனி - கதிர்காமநாதன், குலரஞ்சனி - காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பாலரஞ்சனி - பூமிநாதன், தயாளரஞ்சனி - சுரேந்திரன், தயாளச்சந்திரன் - எக்னஸ், அற்புதரஞ்சனி - மஹிந்த, கருணைச்சந்திரன் - பிரபா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் பொன்னாலை வீதி, கட்டுடையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 615 3867 (அருள்றாஜ் G.S)**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

### ஆறுமுகம் திரிலோகஈஸ்வரா

(இளைப்பாறிய நீர்ப்பாசனத் திணைக்கள பட்வரைகூட உதவியாளர் - D.O.A)

தோற்றம் 13 . 01 . 1945



மறைவு 06 . 12 . 2016




திதி: 25.11.2017

முதலாம் ஆண்டு நினைவுதான் வந்ததுவோ
நித்தம் உன் நினைவுதான் அப்பா !
பாசமாய் வளர்த்து
பாரினில் போற்ற
வழிகாட்டினீர்கள்
நண்பராய் நல்லாசானாய்
தீராத் துயரில்
நாம் வாடுகின்றோம்
நீங்களும் அம்மாவும் இன்றி !

உங்கள் ஆத்மா சாந்தி அடைய
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**மகன், மருமகள், பேரப்பிள்ளை**
**குடும்பத்தினர்.**



### இளையதம்பி நடராசா

**(ஐக்கிய வியாபாரசங்க முன்னைநாள் முகாமையாளர்)**

ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நடராசா நேற்று (24.11.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி – நாகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட அன்பு மகனும், காரைநகர் ஆயிலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, சாந்தலிங்கம், யோகம்மா ஆகியோரின் சகோதரரும், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), நாளினி (ஆசிரியர், யா/செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை), நந்தினி, நளாயினி (ஆசிரியர் – யா/ இந்து ஆரம்பபாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜிகலா (பிரான்ஸ்), அருள்லிங்கம் (லிங்கஜன் றேடர்ஸ் – யாழ்ப்பாணம்), உமாகாந்தன் (சவுதி), நந்தகுமார் (உதவித் தபாலதிபர்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஜந்தா, ஆர்த்திகா, அஸ்வினி (பிரான்ஸ்), அனுசிகா, தனுஷயன், ஆதித்யா, நவகாந்தன், திலோஜன், சிவாஞ்சலி, நிஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனும், நாகேஸ்வரி (கொழும்பு), அன்னலட்சுமி (பிரான்ஸ்), சிவலிங்கம் (லண்டன்), கனகேஸ்வரி (பிரான்ஸ்), அம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சாந்தகுமாரியின் சிறிய தகப்பனாரும், சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான சண்முகசுந்தரம், லீலாவதி மற்றும் விஜயரட்ணம், பஞ்சலிங்கம்.அருமைநாயகம், செல்வரட்ணம், குணரட்ணம், முருகதாஸ், விக்கினேஸ்வரதாஸ், ஹரிதாஸ், ரமணதாஸ் ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**15/7, சேர்ச் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

**021 222 8807, 077 618 9071**

# சுதந்திரக் கட்சியின் சூழ்ச்சியை அறிந்து தேர்தலை நடத்துங்கள்

## தேர்தல் ஆணையாளரைச் சந்தித்து மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

கொழும்பு, நவ. 25
சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது உள்ளூராட்சி சபைத் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இவற்றை அறிந்து கொண்டு விரைவில் தேர்தலை நடத்த ஆவண செய்யுங்கள். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கட்சியின் பொதுச்செயலர் ரில்வின் சில்வா, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவை நேற்று நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ரில்வின் சில்வா ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,
சிறிலங்கா சுதந்திரக் கட்சி தேர்தல் முடிவுகளுக்கு அஞ்சியே உள்ளூராட்சி சபைத் தேர்தலைப் பிற்போடுவதற்கான சூட்சும முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இறுதி வழியாக தற்போது நீதிமன்றச் செயற்பாடுகளை முன்னெடுக்கத் தீர்மானித் துள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் நீதிமன்ற வழங்கும் தீர்ப்பு சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு சாதகமாக அமையும் பட்சத்தில் நாட்டு மக்களின் தேர்தல் உரிமைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடவும் நாங்கள் தயாராகவுள்ளோம். தேர்தலைக் காலம் தாழ்த்துவது மக்களாட்சிக்கு விரோதமானது; இது மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயற்பாடாகும். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல்கள் காரணமாக அந்தக் கட்சி பிளவுபடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் தேர்தல் முடிவுகள் தமக்குச் சாதகமாக அமையாது என்பதை அந்தக் கட்சியினர் அறிந்து கொண்டுள்ளனர். அதனால்தான் அந்தக் கட்சியினர் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக் கின்றனர்.

இந்தச் சூழ்ச்சி செயற்பாடுகளைப் புரிந்துகொண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஆவண செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடத்தில் கோரிக்கைவிடுத்துள்ளோம் என்றார். (5)

# மணல் அகழ்வுக்கு எதிராக கையெழுத்துச் சேகரிப்பு



கொழும்பு.நவ.25
கொழும்பு துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டத்துக்கு மணல் அகழ்ந்தெடுக்கப்படுவதற்கு எதிராகத் துண்டறிக்கைகள் வழங்கப்பட்டன. கையெழுத்துச்சேகரிக்கும் நடவடிக்கையும் நேற்று நடைபெற்றது.

நீர்கொழும்பு பிட்டிபனை பிரதேசத்தில் முழு நாட்டையும் அழிக்கும் "போர்ட்சிற்றி வேண்டாம்" என்ற தொனிப்பொருளில் துண்டறிக்கைகள் விநியோகிக் கப்பட்டது.

போர்ட்சிற்றிக்கான மணல் அகழ்வு கரையோரத்திலிருந்து 10 கிலோ மீற்றருக்கு அப்பால் இடம்பெறும் என இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. தற்போது கரையோரத்துக்கு அருகிலேயே மணல் அகழ்வு இடம்பெறுகின்றது.

நீர்கொழும்பில் தற்போது கடலரிப்பானது மிக வேகமாக நடக்கின்றது. பசியவத்தை பிரதேசத்துக்கு அப்பால் கடற்கரை வீதியை அண்மித்த பிரதேசங்கள், தலாஹேன பேருவ கரையோர பிரதேசங்களும் மிக வேகமாக கடலறிப்புக்கு உள்ளாகின்றமையை வரைபடங்கள் காட்டுகின்றன என்று அந்த துண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

கடந்த மாதம் 31ஆம் திகதி இந்த விடயம் தொடர்பாக மக்களை விழிப்பூட்டும் வேலைத்தட்டம் ஆரம்பமானது. ஒரு இலட்சம் கையெழுத்து பெறும் வேலையும் நடைபெறுகிறது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# தற்காலிகமாக மூடப்பட்டது வீதி

கொழும்பு, நவ.25
கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தையில் கெட்டியாவத்தை சந்தியிலிருந்து இப்பாவத்த சந்தி வரையிலான வீதி நேற்று முதல் மூடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புதிதாக நீர்க் குழாய் பொருத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையால் வீதிப்போக்குவரத்து மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நேற்று இரவு 9 மணி முதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5 மணி வரை வீதி முழுமையாக மூடப்படவுள்ளது. சாரதிகள் மாற்று வழிகளை பயன்படுத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற)

# உரமானியக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை

## காரைதீவு கமநல உத்தியோகத்தர் தெரிவிப்பு



அம்பாறை,நவ.25
அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக விவசாயச்செய்கைக்கான அரச உரமானியக் கொடுப் பனவை வழங்குவதற்கான நடவடிக்கைகளை விவசாய அமைச்சு மேற்கொண்டுவருகிறது என்று காரைதீவுப் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மார்க்கண்டு சிதம்பரநாதன் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது
காரைதீவு கமநல கேந்திர நிலையத்துக்குட்பட்ட நான்கு கண்டங்களிலுள்ள 1 ஆயிரத்து 79 ஏக்கர் விவசாயக் காணிகளுக்கான உரமானியக் கொடுப்பனவாக 54 இலட்சத்து 13 ஆயிரம் ரூபா வழங்கப்பட உள்ளது.

உரமானியக் கொடுப்பனவு மக்கள் வங்கி, இலங்கை வங்கி, பிரதேச அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி ஆகிய வங்கிகளினூடாக விவசாயிகளுக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது.என்றார். (ற-ரி5)

# ஹிருணிகா ஆதரவாளர் 6 பேருக்கு கடூழிய சிறை

கொழும்பு.நவ.25
ஹிருணிகா பிரேமசந்திரவின் ஆதரவாளர்களுக்கு நேற்று கடூழியச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப் பட்டது.

தெமடக்கொடை பகுதியில் இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கி அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டி ருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திரவின் 6 ஆதரவாளர்கள் நேற்று குற்றத்தை ஒப்புக் கொண்டனர்.

அவர்களுக்குகொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.குருசிங்க 12 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்த 2 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்தார். ஆறு பேருக்கும் தலா 32 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப் பட்டது.

தெமட்டகொடை மேம்பாலத்துக்கு அருகிலுள்ள தனியார் ஆடையகத்தில் வைத்து கொத்தட்டுவ பகுதியைச் சேர்ந்த இளைஞனை, 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கடத்திச் சென்று தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமசந்திரவுக்கும் அவரது தனிப்பட்ட பாதுகாவலர்கள் எட்டு பேருக்கும் எதிராக சட்டமா அதிபர் கொழும்பு மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார். (ற-ரி4)



பதவி வெற்றிடங்கள்

யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையில் ஆயுட் காப்புறுதிகளை 30 வருடங்களாக வழங்கிவரும் முதன்மை நிறுவனமாகும். 140க்கும் மேற்பட்ட கிளைகளுடன், ஆண்டின் சிறந்த சேவை வழங்குநர் விருது, புதிய தொழில்நுட்பத்திற்கான விருது மற்றும் இலங்கையில் வேலை செய்வதற்கு சிறந்த நிறுவனத்திற்கான விருதுகளையும் தொடர்ச்சியாக ஐந்து முறை பெற்ற நிறுவனமாகும். சர்வதேச தரத்தில் பல காப்புறுதி வசதிகளையும் சேவைகளையும் வழங்குவதுடன், யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையிலுள்ள முதற்தர குழுமமாகிய ஜோன் கீல்ஸ் குழுமத்தின் ஒரு அங்கத்துவ நிறுவனமாகும்.

யாழ்ப்பாணம் - 10

I நிதி ஆலோசகர்கள் (Insurance Advisor)

தகைமைகள்
1 கல்விப்பொதுத்தராதர சாதாரணதர (O/L) பரீட்சையில் 06 பாடங்களில் சித்தி (கணிதம் உட்பட)
2 அர்ப்பணிப்பு மற்றும் குழுவாக இணைந்து செயற்படும் திறன்
3 வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப்பேணும் திறன்

யாழ்ப்பாணம் - 5

II முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (Agency Development Officer)

தகைமைகள்
1 குறைந்தபட்சம் க.பொ.த. உயர்தர (A/L) பரீட்சையின் சித்தி
2 காப்புறுதி, சந்தைப்படுத்தல் அல்லது ஏதேனும் தொழில்துறையில் 2 வருட அனுபவம்
3 அர்ப்பணிப்பு மற்றும் குழுவை வழிநடத்தும் திறன்
4 வாடிக்கையாளர் மீதான அக்கறை, நம்பிக்கை மற்றும் சிறந்த தொடர்பைப்பேணும் திறன்

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்றுவதனால் நீங்கள் பெற்றுக்கொள்ளும் அனுகூலங்கள்

1 வேதனம் மற்றும் இதர கொடுப்பனவுகள்
2 உள்நாட்டு மற்றும் சர்வதேச பயிற்சிகள்
3 வருடாந்த இலவச வெளிநாட்டுச் சுற்றுலாக்கள்
4 சர்வதேச விருதுகள்
5 விரைவான பதவி உயர்வுகள்
6 இலவச காப்புறுதி அனுகூலம்
7 Tab, Laptop வசதிகள்
8 கடன் வசதிகள் (மோ.சைக்கிள், கார் மற்றும் வீடு)

நீங்கள் எம்முடன் இணைந்து சேவையாற்ற விரும்பினால், தங்களது விண்ணப்பப்படிவங்களை sellaiyakiritharan@gmail.com என்ற முகவரிக்கு அல்லது எமது அலுவலக முகவரிக்கு 14 நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

செ. கிரிதரன்,
அபிவிருத்தி முகாமையாளர்,
இல. 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

மேலதிக தொடர்புகளுக்கு 0772 425 414

GREAT PLACE TO WORK Best companies to work for 2013 - 2017 Sri Lanka

யூனியன் அஷ்யூரன்ஸ்

## மரண அறிவித்தல்

### திருமதி சிரோன்மணி கணேசலிங்கம்



நெடுந்தீவு மத்தியை பிறப்பிடமாகவும், கொழும்பு மாளிகாவத்தையை வதிவிடமாகவும், தற்போது திருநெல்வேலியில் வசித்தவருமான திருமதி சிரோன்மணி கணேசலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வைத்தியநாதர் (உடையார் ) - வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற கணேசலிங்கத்தின் (C.T.B) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, மங்களேஸ்வரி மற்றும் இராசமணி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தணிகாசலம் மற்றும் பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் சந்திரா, சந்தியா, இந்திரா, நிர்மலா, ராசன், சிறி, பாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், அழகேந்திரன், உதயகுமரன், நகுலேஸ்வரன், தனுஷா, ரமணி, ஜியோவானி ஆகியோரின் மாமியாரும், றெசான், தீபிகா, நிசான், நிவேதா, ஹறிஸ், அஸ்வின், அபிஷா, அஸ்வினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.11.2017) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**No.27, கலாசாலை வீதி,**
**பழங்கிணற்று பிள்ளையார் லேன்,**
**திருநெல்வேலி**

**தகவல்: சந்திரா**
**077 431 8711,**
**075 341 9458**

# கல்வி அமைச்சர் அகிலவிராஜுடன் சிறிதரன் எம்.பி. சபையில் மோதல்

கொழும்பு, நவ. 25

கொழும்பு அரசின் கல்வி அமைச்சு மீது அடுக்கடுக்காக, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் குற்றம் சுமத்தியபோது, கல்வி அமைச்சர் அகிலவிராஜ், யாரோ வழங்கிய தகவல்களைக் கேட்டு சபையில் தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார் என்று பதிலளித்தார். நான் சொல்வது புரியாமல் கல்வி அமைச்சர் கூறுகின்றார் என்று சிறீதரனும் பதிலுக்குச் சொல்ல இருவருக்கும் இடையில் மோதல் மூண்டது.

கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வட்க்கில் குறிப்பாக கிளிநொச்சியில் சிவில் பாதுகாப்புப் பிரிவினரே முன்பள்ளிகளை நடத்துகின்றனர். பாலகர்களின் உடைகளில், பைகளில் இராணுவச்சின்னங்களைப் பொறித்து அவர்களை முழுமையாக இராணுவச் சூழலுக்குள் வைத்திருக்க பார்க்கின்றார்கள். முன்பள்ளிகளைப் பாதுகாப்புத் தரப்பினர் நடத்துவதற்கு யார் அதிகாரம் வழங்கியது. சிங்கள மொழிபேசும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வடக்குப் பாடசாலைகளில் சிற்றூழியர்களாக நியமனம் வழுங்கப்பட்டது. இதனைக் கண்டிக்கின்றேன் என்று உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன்போது கல்வி அமைச்சர் அகிலவிராஜ் ஒழுங்குப் பிரச்சினையை சபையில் எழுப்பினார். கல்வி அமைச்சு மீதான விவாதமே தற்போது நடக்கின்றது. இதைத்தெரிந்து கொள்ளாமல் நாடாளுமன்ற உறுப்பினர் தவறான விடயங்களை முன்வைக்கின்றார். சபையின் பெறுமதியான நேரத்தை வீணடிக்கின்றார். யாரோ கொடுத்த தகவல்களை இங்கு வந்து சொல்கின்றார். முன்பள்ளிகள் எந்த அமைச்சுக்களுள் வருகின்றன என்பது தொடர்பில் அவதானம் செலுத்துங்கள் என்றார் அகிலவிராஜ்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனது உரையை அமைச்சரின் கருத்துக்களையும் பொருட்படுத்தாது தொடர்ந்தார். வடக்குப் பாடசாலைகளில் சிற்றூழியர்களாகப் பெரும்பான்மையினத்தவர்கள் நியமிக்கப்படுவது தொடர்பில் பேசும்போது கல்வி அமைச்சர் மீண்டும் குறுக்கீடு செய்தார். சபாநாயகர் கரு, அமைச்சரே நீங்கள் பதிலளிக்கும்போது தெளிவுபடுத்துங்கள் என்று கூறவும், அமைச்சர் அகிலவிராஜ், இல்லை சிறீதரன் தவறான தகவல்களைச் சபைக்கு வழங்குகின்றார் என்று குறிப்பிட்டார். அத்துடன் நாங்கள் அரசியல் கலப்புடன் இந்த நியமனங்களை வழங்கினோம் என்று முடிந்தால் நிரூபியுங்கள் எனச் சவால் விடுத்தார். தகுதியானவர்களுக்கே நாங்கள் நியமனம் வழங்கியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அமைச்சரே நான் சொல்வது உங்களுக்குத் தவறாக மொழிபெயர்க்கப்படுகின்றது நான் தகுதி இல்லாதவர்கள் நியமிக்கப்படுகின்றார்கள் என்று சொல்லவே இல்லை. முதலில் கல்வி இராஜாங்க அமைச்சரிடம் அல்லது தமிழ் தெரிந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் நான் என்ன கூறினேன் என்பதைக் கேளுங்கள் - என்றார்.

வடக்கு மாகாணத் தொண்டர் ஆசிரியர்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரையாற்றிக் கொண்டிருந்தபோது, கல்வி அமைச்சர் மீண்டும் குறுக்கீடு செய்தார். நாங்கள் உதவி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கியுள்ளோம். அந்த விவரம் என்னிடம் இருக்கின்றது என்று அதனை வாசிக்க ஆரம்பித்தார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன், அமைச்சரே நான் கூறுவது உங்களுக்குத் தவறாக மொழிபெயர்க்கப்படுகின்றது. நான் தொண்டர் ஆசிரியர்கள் பற்றிப் பேசுகின்றேன். நீங்கள் உதவி ஆசிரியர்கள் பற்றிப் பேசுகின்றீர்கள்.

சபநாயகரே, நான் சோறு பற்றிப் பேசினால் அவர் ஐஸ் கிறீம் பற்றிப் பதிலளிக்கின்றார். நிலமை இப்படித்தான் இருக்கின்றது. நாங்கள் சொல்வதே உங்களுக்கு விளங்கவில்லை என்றால், எங்கள் மக்களுக்கு எப்படித் தீர்வு கிடைக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை - என்றார்.

**தேசியக் கொடி**

தேசியக் கொடி தமிழர்களை அரவணைத்துச் செல்லும் விதத்தில் இல்லை. தன்மானமுள்ள ஒரு தமிழன் வாளேந்திய சிங்கக்கொடியை எதிர் மனப்பான்மையுடன் பார்க்கின்றான். ஆனையிறவு, கேப்பாப்பிலவு, கிளிநொச்சி தட்டுவன்கொட்டியில் இராணுவ நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை வணங்குமாறு கட்டாயப்படுத்துவதுடன், தேசியக் கொடியை ஏற்றுமாறு வற்புறுத்துகின்றனர். 1960ஆம் ஆண்டுகளில் திருகோணமலையின் மணிக்கூட்டுக் கோபுரத்தில் பறக்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடியை இறக்குவதற்கு ஏறிய நடராஜன் எனப்படும் தமிழ் மகனொருவரை இராணுவம் சுட்டுக்கொன்ற வரலாற்றைத் தமிழர்கள் இன்னமும் மறக்கவில்லை.

வடக்கு மாகாண ஆளுநர் ஒரு அரசியல்வாதி. ஆளுநர் அல்ல. சட்டத்தை வைத்துக் கொண்டு மாகாண சபையை இயங்கவிடாது தடுக்கின்ற ஒரு நபர். இவர் அதற்காக முனைகிறாரே தவிர நியாயத்தைப் புரிந்துகொள்ள வில்லை.

தேசியக் கொடியை ஏற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் நீங்கள் மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் சப்பாத்துக்களுடன் நிற்கின்றனர். இவற்றைக் காணும் மாவீரரின் பெற்றோர்களுக்கு ஏற்படும் வேதனை குறித்து புரிந்து கொள்ளவில்லையே. அவ்வாறு மனவேதனை உள்ள பெற்றோர்கள் தேசியக்கொடிலய ஏற்றுவதற்கான மனநிலையை ஏற்றுக்கொள்வார்களா? இவ்வாறான சூழ்நிலையில் எமது உணர்வுகளையும் புரிந்துகொள்ள வேண்டும்.

**சுயமரியாதையை இழந்தே வாக்களித்தேன்**

நல்லிணக்கம் ஏற்படவேண்டும் என்பதற்காக எமது தலைவர் சம்பந்தன் ஐயாவின் கோரிக்கைக்கு அமைவாக எமது தன்மானத்தையும், சுயமரியாதையையும் விட்டு வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன் - என்றார். (5,31)



# பெறுமதியான இரத்தினக் கல் கண்டுபிடிப்பு

கொழும்பு, நவ. 25

இரத்தினபுரி மாவட்டத்தின் ரில்லப பிரதேசத்தைச் சேர்ந்த கருணாவன்சவிடம் 15 கிலோ எடையுள்ள விலை மதிப்புக் கூடிய இரத்தினக் கல் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகின.

15ஆண்டுகளுக்கு முன்னர் இரத்தினபுரிப் பிரதேசத்தில் இந்தக் கல் தனக்குக் கிடைத்ததாக அதன் உரிமையாளர் தெரிவித்தார்.

இரத்தினக்கல் கிடைத்தவுடன் வாழ்க்கை முழுமையாக மாற்றமடைந்ததாகவும், அதற்குப் பூசைகள் நடாத்தித் தன் உயிர் போன்று பாதுகாத்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இரத்தினக் கல்லைச் சோதனையிட்ட பல துறைசார் வர்த்தகர்கள், இது பல அற்புதங்கள் நிறைந்தது எனவும் இதன் பெறுமதி மதிப்பிட முடியாதவை எனவும் குறிப்பிட்டனர். இவ்வாறான இரத்தினக் கல் உருவாகக் குறைந்தது 20 லட்ச வருடங்கள் தேவைப்படும் என விஞ்ஞான ரீதியான ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. விலை மதிப்பில்லா இரத்தினக்கல்லை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கவுள்ளதாகக் கருணாவன்ச தெரிவித்தார். (5)

# உள்வீட்டுப் பிரச்சினை பேசித் தீராவிட்டால் விவாகரத்துத்தான் வழி!

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 25

உள்வீட்டுப் பிரச்சினைகளைப் பேச்சுக்கள் ஊடாகத் தீர்த்துக்கொள்ள முயற்சிக்கின்றேன். வேறுவழி இல்லாதுவிட்டால் விவாகரத்துச் செய்வதற்கும் தயாராக இருக்கின்றேன்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டு வடக்கு மாகாணத்தில் 27 பாடசாலைகள் மறுசீரமைப்பதற்கு 170 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

கடந்த ஆண்டைவிட இந்த வருடம் பெருந்தோட்டத் துறைப் பாடசாலைகளுக்கு 200 மில்லியன் மேலதிகமாக ஒதுக்கப்பட்டது.

சைவ சமய பாடப் புத்தகங்களில் உள்ள சொற்பிழைகளை நிவர்த்தி செய்வதற்கு அத்துறைசார் குழுக்கள் அமைத்து நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

புதிதாக ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கான அமைச்சரவைப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. தமிழ் மொழி மூலமாக ஆயிரத்து 283 பேரும், சிங்கள மொழி மூலமாக 3ஆயிரத்து 188 பேரும் நியமனம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் 6 ஆயிரத்து 368 சிங்களமொழிப் பாடசாலைகளும், 828 முஸ்லிம் பாடசாலைகளும், ஆயிரத்து 543 தமிழ் மொழிப் பாடசாலைகளும், 844 தோட்டப்புறப் பாடசலைகளும் இருக்கின்றன. நாட்டில் மூன்றில் ஒரு பங்கு பாடசாலைகள் தமிழ் மொழியிலான பாடசாலைகளாகவே இருக்கின்றன. அவற்றை அபிவிருத்தி செய்வது எனது பொறுப்பு. தமிழ் அமைச்சர் என்ற வகையில் அந்தக் கடமையை முன்னெடுத்தபோது சில பிரச்சினைகளை எதிர்கொண்டேன். இவ்வாறான பிரச்சினைகள் குறித்து எனது ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தேன்.

அரச தலைவர், தலைமை அமைச்சர் ஆகியோருடனும் கலந்துரையாடிய பின்னர் நல்லதொரு தீர்வு கிடைத்திருக்கின்றது. இந்த உள்வீட்டுப்பிரச்சினையைப் பேச்சு மூலமே தீர்த்துக் கொள்ள விரும்புகின்றோம். பிரச்சினைக்காக நாம் விவாகரத்துச் செய்ய விரும்பவில்லை. எதிர்கால சந்ததியின் நன்மை கருதி ஒன்றாகவிருக்கவே நாம் விரும்புகின்றோம். இருப்பினும் பிரச்சினைகள் தொடர்ந்தால் நாம் விவாகரத்துச் செய்வதை விடவும் வேறு வழியில்லை - என்றார். (5,31)

# வடக்கு - கிழக்கில்

## சிங்களவர்கள் பாடசாலைச் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டமைக்குச் சபையில் எதிர்ப்பு

கொழும்பு, நவ. 25

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகளில் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் சிற்றூழியர்களாக நியமிக்கப்பட்டமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் கடும் கண்டனம் வெளியிட்டார். அத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர் 25 வருடங்களாக இடமாற்றப்படாமை குறித்தும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லாட்சியிலும் நல்லிணக்கம் செயற்பாட்டு ரீதியில் இல்லை. கல்வித்துறையில் நூறு நாள் வேலைத்திட்டம் முதல் தற்போது வரையில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் நியமனங்களில் இதனைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதியில் பாடசாலைச் சிற்றூழியர்களாகச் சிங்களவர்களே நியமிக்கப்பட்டுள்ளனர். எமது இளைஞர்கள் சிற்றூழியர்களுக்குக் கூடத் தகுதி இல்லாதவர்களா என்று எம்மிடம் கேள்வி எழுப்புகின்றார்கள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபராக இருப்பவர் தொடர்ச்சியாக 25 ஆண்டுகள் அந்தப் பாடசாலையிலேயே இருக்கின்றார். அவரை இடமாற்றம் செய்யவேண்டும் என்று பரிந்துரை வழங்கப்பட்டும் அவர் இடமாற்றப்படவில்லை. இந்தப் பாடசாலையில் கொழும்பு மாவட்ட பழைய மாணவர் சங்கம் இந்த விடயத்தை எமது கவனத்திற்கு கொண்டுவந்துள்ளது. இதே நிலமைதான் வேறு சில தேசியப் பாடசாலைகளிலும் உள்ளது. பொருத்தமான இடமாற்றக் கொள்கை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (5.31)

# பசிலுக்குத் தலைவலியாகும் சொகுசு மாளிகை!



கொழும்பு, நவ. 25

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவுக்குச் சொந்தமானதாகக் கருதப்படும் மல்வானையில் அமைந்துள்ள ஆடம்பர மாளிகை தொடர்பான வழக்கு 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

தொம்பே, மல்வானைப் பிரதேசத்தில் 16 ஏக்கர் காணியொன்றைக் கொள்வனவு செய்து அதில் சொகுசு பங்களா நிர்மாணித்து சுமார் 28 கோடி 80 லட்சம் ரூபா அரச நிதியை மோசடி செய்துள்ளதாகப் பசில் ராஜபக்ச மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் அவரது மைத்துனர் திருக்குமரன் நடேசன் ஆகியோருக்கு எதிராக மேல்நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் தொடுத்துள்ள வழக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகளை எதிர்வரும் 2018ஆம் ஆண்டின் மார்ச் மாதம் எடுத்துக் கொள்ளவுள்ளதாக மேல்நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்ணான்டோ உத்தரவிட்டுள்ளார். (5)



## ஆர்ஜென்ரீனாவின் கப்பலை தேடும் பணியில் ரஷ்யா இணைவு

பியூனஸ் ஏர்ஸ், நவ. 25
ஆர்ஜென்ரீனா நாட்டுக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பலொன்று கடந்த 18ஆம் திகதியில் இருந்து மாயமாகியுள்ளதை அடுத்து அதைத் தேடும் பணிகள் துரிதப் படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பணியில் தற்போது ரஷ்யாவும் இணைந்தது.
சான்ஜூ யர்னஸ் என்ற நீர் மூழ்கிக் கப்பலே அவ்வாறு காணாமல் போயுள்ளது. கப்பலைத் தேடும் பணியில் ரஷ்யாவின் சிறிய ரக நீர்மூழ்கிக் கப்பல்களும், உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)

## விலகவில்லை ஹிரிரி



மறுநாள் தொலைக்காட்சியில் தோன்றிப் பேசிய அவர், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார்

பாரிஸ், நவ. 25
சவூதி அரேபியாவுக்கு சென்று, அங்கிருந்தவாறே தனது பதவியில் இருந்து விலகுவாத அறிவித்த லெபனான் தலைமை அமைச்சர் ஹிரிரி, லெபனானுக்குச் சென்ற பின்னர் தனது முடிவை திரும்பப் பெற்றார்.
லெபனான் தலைமை அமைச்சர் சாட் அல் ஹரிரி கடந்த 3ஆம் திகதி சவூதி அரேபியாவுக்குச் சென்றார். மறுநாள் தொலைக்காட்சியில் தோன்றிப் பேசிய அவர், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதால் தலைமை அமைச்சர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்தார். தொடர்ந்தும் சவூதி அரேபியாவிலேயே தங்கியிருந்த அவர், கடந்த திங்கட்கிழமை லெபனான் திரும்பினார். லெபனான் திரும்பிய பின்னர் தனது பதவி விலகல் முடிவை திரும்பப் பெற்றார் ஹிரிரி. (ம)

# ஏமன் எல்லை திறக்கப்பட்டது

### ஐ.நா. எதிர்ப்பை அடுத்து பணிந்தது கூட்டுப்படை



கூட்டுப்படைக்கு எதிராக அண்மையில் போராட்டம் நடத்திய ஏமன் சிறுவர்கள்

ரியாத், நவ. 25
ஏமன் எல்லையை மூடியதற்கு ஐக்கிய நாடுகள் சபை கடும் எதிர்ப்பை வெளியிட்டதை அடுத்து, எல்லையைத் திறக்க அனுமதி வழங்கியது சவூதி கூட்டுப்படை.
ஏமன் நாட்டில் சன்னி பிரிவைச் சேர்ந்த அதிபர் மன்சூர் ஹைதிக்கும் ஷியா பிரிவைச் சேர்ந்த ஹௌதி ஆயுதக் குழுவுக்கும் இடையே கடந்த 2015ஆம் ஆண்டு மார்ச் முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இதில் அதிபர் மன்சூர் ஹைதிக்கு ஆதரவாக சவூதி அரேபியா செயல்படுகிறது. ஹௌதி ஆயுதக் குழுவுக்கு ஈரான் ஆதரவு வழங்குகிறது.
ஹௌதி ஆயுதக் குழுவின் பகுதிகளுக்குள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது சவூதி அரேபியா. சவூதி அரேபியாவின் ரியாத் வானூர்தி நிலையத்தைக் குறிவைத்து அண்மையில் ஏவுகணை வீசப்பட்டது. ஹௌதியிடம் தொலை தூரத்துக்குச் செல்லவல்ல ஏவுகணைகள் இல்லை. எனவே இந்த ஏவுகணைத் தாக்குதல் ஈரானால் நடத்தப்பட்டிருக்கலாம் அல்லது ஈரானால் ஹௌதி ஆயுதக் குழுவுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என்று சவூதி தலைமையிலான கூட்டுப்படை சந்தேகம் தெரிவித்தது. எனவே, ஈரானில் இருந்து ஹௌதி ஆயுதக் குழுவுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமாயின் ஏமன் தனது எல்லைகளை மூட வேண்டும் என்றும் கூட்டுப்படை உத்தரவிட்டது. இதையடுத்து ஏமனும் எல்லையை மூடியது.
கூட்டுப்படைகளின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா. சபை கடும் கண்டனம் தெரிவித்தது. 'ஏமனில் 70 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். உள் நாட்டுப் போர் நடைபெற்றுகொண்டிருக்கும் ஏமனில் எல்லைகளை மூடுவது பேரழிவை ஏற்படுத்தும். உணவு, மருந்து இல்லாமல் மக்கள் துன்பப்பட நேரிடும்' என்று ஐ.நா. சபை தனது எச்சரிக்கைக் குறிப்பில் குறிப்பிட்டது. இதை ஏற்றுக்கொண்ட கூட்டுப்படை எல்லையைத் திறக்க சம்மதம் தெரிவித்தது. (ம)

## ஐ.எஸ்.ஐ.எஸ். – ஈராக் இடையே மேற்குப் பாலைவனத்தில் போர்

பக்தாத், நவ. 25
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் ஈராக் அரச படைக்கும் இடையே ஈராக்கின் மேற்குப் பாலைவனத்தில் கடும் போர் நடைபெற்று வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்புக்கு எதிராக ஈராக் கடும் போரை முன்னெடுத்தது. இதன் பயனாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கத்திலிருந்து ஈராக் நகரங்கள் முழுவதுமாக விடுபட்டுள்ளன. ஈராக்கின் பாலைவனத்தில் நிலைகொண்டிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் தற்போது கடும் முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. நேற்றுமுன்தினம் மட்டும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் சுமார் 20 நிலைகள் அழிக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





நத்தார் கொண்டாட்டத்துக்காக அமெரிக்க அதிபரின் உத்திபே
தற்போது அங்கு துரித கதியில் இடம்பெற்று வருகின்றன என்

## கொள்ளையடிக்கச் சென்ற

### ஸ்கொட்லாந்தில் சுவாரஸ்யம்

எடின்பேர்க், நவ. 25
கொள்ளையடிக்கச் சென்ற வீட்டில் இருந்த தின்பண்டங்களைச் சாப்பிட்டுவிட்டு தூங்கிய திருடனை பொலிஸார் கைது செய்தனர். இந்தச் சம்பவம் ஸ்கொட்லாந்தில் இடம்பெற்றது.
ஸ்கொட்
பகுதியி
றது.
திருடன்
வீட்டின்

## வடகொரியாவுடனான தனது வானூர்திப் போக்குவரத்தை திடீரென துண்டித்தது சீனா

பீஜிங், நவ. 25

வடகொரியாவுடனான வானூர்திப் போக்குவரத்தை திடீரென சீனா நேற்றுமுன்தினம் துண்டித்துள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.
வடகொரியாவும், தென் கொரியாவும் நிரந்தர பகை நாடுகளாக இருந்து வருகின்றன. தென் கொரியாவுக்கு ஆதரவாக அமெரிக்கா செ
பட்டு வருகிறது. இதனால் அமெரிக்காவுடன் வடகொரியா மோ
போக்கில் ஈடுபட்டுள்ளது. மேலும் அமெரிக்காவுக்கு எதிராக அ
குண்டுகளைப் பயன்படுத்துவோம் என்றும் வடகொரியா மி
வருகிறது.
அண்மையில் ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொ
டிருந்த அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தனது பயணத்தின் ஒரு பகுதி
சீனாவுக்கும் சென்றிருந்தார். அங்கு சீன அதிபர் ஜின் பிங்
சந்தித்த அவர் வடகொரியாவுக்கு எதிராக கடும் நடவடிக்கைக
எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். இந்தப் பின்ன
யில் வானூர்திப் போக்குவரத்தை துண்டித்தமை பரபரப்பை
டுத்தியிருந்தது. எனினும், 'வடகொரியாவுக்குச் செல்லும் விமா
தில் போதிய பயணிகள் வரவில்லை. எனவே, வர்த்தக ரீதி
பாதிப்பு ஏற்படுவதால் போக்குவரத்தை நிறுத்தி விட்டோம். இதில்
சியல் காரணங்கள் இல்லை' என்று சீனா தெரிவித்துள்ளது.



ந்தியோகபூர்வ இல்லாமான வெள்ளை மளிகை தயாராகியுள்ளது. பண்டிகைக்கான ஏற்பாடுகள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)


# ரொஹிங்ய அகதிகள் விடயத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து

டாக்கா, நவ. 25

மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்கு அடைக்கலம் கேட்டுச் சென்றுள்ள ரொஹிங்யர்களை திரும்பி அழைக்கும் விதத்திலான ஒப்பந்தமொன்று மியன்மார் மற்றும் பங்களாதேஷ் நாடுகளுக்கு இடையில் கைச்சாத்தாகியுள்ளது.

இவர்கள் ரக்கினே மாகாணத்தில் வாழ்கின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியர்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். தற்போதும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மார் நோக்கிச் சென்றவண்ணம் உள்ளனர். இந்த விவகாரத்தில் மியன்மார் அரசுக்கு எதிரான நகர்வுகளை உலக தொண்டு நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகின்றன. அளவுக்கு அதிகமான அகதிகளின் வருகையால் அவர்களுக்கு உணவளிக்க முடியாமல் பங்களாதேஷ் திண்டாடுகிறது. இந்த நிலையில் ரொஹிங்ய முஸ்லிம்களை திரும்பி அழைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்திருந்தார் சூகி.

இந்த நிலையில், பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள அகதிகளை நாடு திருப்புவது தொடர்பான ஒப்பந்தம் மியான்மர் அரசுடன் கையெழுத்தாகியுள்ளதாக அந்த நாட்டின் அயலுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இரண்டு மாதங்களில் அகதிகள் மியான்மருக்குத் திரும்பும் வகையில் ஒப்பந்தம் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## ற வீட்டில் சாப்பிட்டுவிட்டு உறங்கிய திருடன்

கொட்லாந்து நாட்டின் வடக்கு லனர்க்சிரின்
தியிலேயே இந்தச் சுவாரஸ்யம் இடம்பெற்
.
டன் உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்த
டின் உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதை அடுத்து, திருடனைக் கைது செய்த பொலிஸார் அவனிடத்தில் மேற்கொண்ட மேலதிக விசாரணைகளிலேயே, திருடு வதற்காக வந்த நபர் சாப்பிட்டுவிட்டு உறங்கியமை தெரியவந்துள்ளது. (ம)

னது
தை
ா



செயற்
மோதல்
க அணு
மிரட்டி
கொண்
ததியாக
ங்கைச்
ககளை
னணி
பை ஏற்ப
மானத்
ரீதியாக
தில், அர
. (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16
சனிக்கிழமை
25 நவம்பர் 2017

தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஒற்றுமை எனும் மாயை

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் ஜனவரியில் நடக்காது என்பது உறுதியாகியும், அது எப்போது நடக்கும் என்பது தெரியாத நிலையும் நீடித்தாலும், தேர்தலுக்குத் தயார்ப்படுத்தும் கட்சிகளின் நகர்வுகள் தீவிரமாகத் தொடர்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிரிந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி வேறு சில கட்சிகளுடன் சேர்ந்து தனியே தேர்தலைச் சந்திப்பதற்குத் தீர்மானித்திருக்கிறது. இதனைத் தொடர்ந்து தமிழர்களின் ஒற்றுமை என்கிற கோசம் மீண்டும் மேலெழுவதைக் காணமுடிகின்றது.

தமிழ் அரசியல் கட்சிகள் ஒற்றுமைப்பட்டதன் மூலம் அரசியல்வாதிகள் அடைந்த நன்மையைத் தவிர மக்களுக்கு என்ன நன்மை கிடைத்தது என்ற கேள்வி மிகப் பெரிதாக எழுந்து நிற்கின்ற போதிலும் மீண்டும் ஒற்றுமைக் கோசங்கள் ஒலிக்கத்தான் செய்கின்றன. இன்னும் சொல்லப்போனால், தமிழீழ விடுதலைப் புலிகள் தனித்து அரசை எதிர்கொண்டிருந்த போது வெற்றிகளை ஈட்டினார்கள், ஆனால், அரசியல் கட்சிகளையும் சேர்த்துக்கொண்டு ஒற்றுமையாகப் பயணிக்க முற்பட்டபோது இருந்த இடம் தெரியாமல் போனார்கள் என்பதுதான் வரலாறு சொல்லும் பாடம் என்றபோதிலும் அரசியல் அரங்கில் ஒற்றுமைக்கான குரல் மீண்டும் மீண்டும் ஒலிக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலிலும் அந்த ஒற்றுமை தொடரவேண்டும் என்று குரல்கள் ஒலிக்கின்றன. அத்தோடு நின்றுவிடாமல் ஒற்றுமையைக் காட்ட உதிரிக் கட்சிகளை எல்லாம் கூட்டமைப்போடு இணைத்துவிடுவதற்கான முயற்சிகளும் நடக்கின்றன. ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாற்றுக்குழு உட்பட மேலும் சில கட்சிகளையும் இந்தத் தடவை கூட்டமைப்புக்குள் இணைப்பது குறித்துப் பேச்சு நடத்தப்படுகின்றது. ஒற்றுமையின் பெயராலேயே இவையெல்லாம் நடக்கின்றன. இந்தக் கட்சிகள் எவற்றுக்கும் மக்கள் மத்தியில் செல்வாக்குக் கிடையாது. அத்தோடு அவை பெரும்பான்மையோடு ஒத்தோடும் வழக்கத்தையும் கொண்டவையல்ல.

தமது சுயநலன்களுக்காகவும், ஒரு சிலரின் இருப்பைத் தக்கவைப்பதற்காகவும் தலைமைப் பதவி ஆசைக்காகவுமே இவையெல்லாம் தனித் தனிக் கட்சிகளாக இயங்கிவருகின்றன. ஒன்றில் ஏதாவது ஒரு முதன்மைக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவை அல்லது தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்கனவே உள்ள கட்சிகளிடம் திடீரெனச் சென்று இடம் கேட்டு அவை மறுத்ததும் கட்சிகளானவை. இவற்றையெல்லாம்தான் ஒற்றுமையின் பெயரால் கூட்டமைப்புக்குள் இணைப்பதற்கான பேச்சு நடத்தப்படுகிறது.

அதாவது தேர்தலில் வாய்ப்புக் கேட்டு கூட்டமைப்பை அணுகியபோது உங்களுக்கு வாய்ப்பு வழங்க மறுக்கப்பட்டால் நீங்கள் உடனடியாகச் செய்யவேண்டியதெல்லாம் ஒரு கட்சியைத் தொடங்குவதுதான். அப்படி நீங்கள் செய்ய முடிந்தால் ஒற்றுமையின் பெயரால் அடுத்த தேர்தலில் உங்கள் கட்சியைக் கூட்டமைப்பில் இணைத்துக்கொண்டு நீங்கள் தேர்தலில் போட்டியிடலாம். இதுதான் யதார்த்தத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

மக்களால் கணக்கில்கூட எடுக்கப்படாத கட்சிகளும் நபர்களும் கட்சி ஒன்றைப் பதிவு செய்துவிட்ட காரணத்துக்காகத் தேர்தல் கூட்டணி அமைப்பது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசுவதும் அதற்குக் கூட்டமைப்பு இடம்கொடுப்பதும் வேடிக்கைத்தனமாக இருக்கின்றது.

மழைக்கு முளைத்த காளான்களாக இப்படி உருவாகிய எல்லாக் கட்சிகளையும் ஒற்றுமையின் பெயரால் ஒன்றிணையுமாறு மக்கள் எப்போது இந்தக் கட்சிகளையும் கூட்டமைப்பையும் கேட்டார்கள் என்று தெரியவில்லை. தமிழ் மக்களின் உரிமைகளை மீட்டெடுக்கவும் அந்தப் போராட்டத்தில் சளைக்காமல் போராடவும் அரசியல் கட்சிகள் தயாராக இருக்கவேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்க்கிறார்களே தவிர, எல்லோரும் ஒரே கட்சிச் சின்னத்தின் கீழ் போட்டியிடவேண்டும் என்பதையல்ல.

எல்லாக் கட்சிகளும் அப்படி ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிடுவது என்பது ஜனநாயகத்தையம் கேலிக்கூத்தாக்கிவிடும். பன்மைத்துவம்தான் ஜனநாயகத்தின் அடிநாதமே. எனவே கூட்டமைப்பைப் பலப்படுத்துகின்றோம், “ஒற்றுமையாக” இருக்கின்றோம் என்கிற போர்வையில் உதிரிக் கட்சிகளை எல்லாம் இணைத்துக்கொண்டு கூட்டமைப்பை மேலும் மேலும் சிக்கலுக்குள் தள்ளிச் செல்லும் முயற்சிகள் நிறுத்தப்படவேண்டும்.

வேண்டுமானால் அந்தச் சிறு சிறு கட்சிகளை முதலில் கூட்டமைப்போடு இணைந்து அரசியல் பணியாற்றச் சொல்லுங்கள். உருப்படியாக அவர்கள் எதையாவது செய்தார்களானால், அதன் பின்னர் அவர்களோடு கூட்டணி அமைப்பது குறித்துச் சிந்தியுங்கள். அதைவிட்டு ஒற்றுமை என்ற மாயமானின் பின்னால் அலைந்து அல்லற்படுவது புத்திசாலித்தனம் அல்ல.

கட்டுரை

# தோல்விகளே மனிதர்களுக்கு பாடம் கற்றுத்தருகின்றன

எந்தவொரு முயற்சியிலும் தோல்வி காண்பது குறித்து அதிகம் கவலை கொள்வது கூடாது. எதிர்கால வெற்றிக்கான முயற்சியை அது வலுப்படுத்தும்; வேகப்படுத்தும். ஆனால் அந்தத் தோல்வி ஆமைக்கும் முயலுக்குமான ஓட்டப்போட்டியில், முயல் தோல்வியைத் தழுவியது போன்று அமைதல் ஆகாது. ஏனெனில் ஆமையினது வேகத்தின்படி ஆமைக்கும் முயலுக்குமான அந்தப் போட்டியில், முயல் ஒரு முழுநாளோ அல்லது இரண்டு நாள்கள் வரையில் தானோ வழியில் உறங்கியிருக்கவேண்டும் என எம்மால் அனுமானிக்கவேண்டியிருந்தது.

ஜெகான் (தேதுன்ன)
தமிழில்: வீ.எஸ்.ரி.

மனிதர்கள் வெற்றிகள் காரணமாக அல்லாது, தோல்விகளிலிருந்தே பாடம் கற்றுக்கொள்கின்றனர். தோற்பவர்களுக்கு மட்டுமே வெற்றி தேவைப்படும். ஆதலால் எந்தவொரு முயற்சியிலும் தோல்வி காண்பது குறித்து அதிகம் கவலை கொள்வது கூடாது. எதிர்கால வெற்றிக்கான முயற்சியை அது வலுப்படுத்தும்; வேகப்படுத்தும். ஆனால் அந்தத் தோல்வி ஆமைக்கும் முயலுக்குமான ஓட்டப்போட்டியில், முயல் தோல்வியைத் தழுவியது போன்று அமைதல் ஆகாது. ஏனெனில் ஆமையினது வேகத்தின்படி ஆமைக்கும் முயலுக்குமான அந்தப் போட்டியில், முயல் ஒரு முழுநாளோ அல்லது இரண்டு நாள்கள் வரையில் தானோ வழியில் உறங்கியிருக்கவேண்டும் என எம்மால் அனுமானிக்கவேண்டியிருந்தது. ஏனெனில் போட்டியில் வெற்றிபெற வேண்டுமென்ற முனைப்பு முயலிடம் இருக்கவே இல்லை.



முதலாவது சுற்றில் தோல்வியைத் தழுவ நேர்ந்ததால் முயலுக்கு அடக்க முடியாத கோபம். வெளிநாட்டுச் சதி, கணினிச் சுத்துமாத்து வேலை என்று எவரும் குற்றஞ்சாட்டாத நிலையில், இரண்டாம் சுற்றுப் போட்டி இடம்பெற்றது. அந்த இரண்டாவது சுற்றுப்போட்டியில் முயல் கண்தூங்கவே இல்லை. முடிவில் முயலுக்கே வெற்றி.

கதை அத்தோடு முடிந்து விடவில்லை. இரண்டாவது சுற்றுப்போட்டியில் தோல்வியுற்ற ஆமை, என்ன 'ஜில்மால்' செய்தாவது முயலை மீண்டும் தோற்கடிக்கத் திட்டமிட்டது. இந்தத் தடவை ஓட்டப்போட்டியின் தன்மை சற்று மாற்றி அமைக்கப்பட்டது. முதலில் நிலத்தில் ஆரம்பிக்கும் போட்டி, பாதித் தூரத்துக்கப்பால் குறிப்பிட்ட தூரத்தை ஆற்றில் பயணித்துக் கடந்து, மீதித் தூரத்தை மீண்டும் நிலத்தில் பயணித்து முடிக்கவேண்டும் என்பது இந்தத் தடவை போட்டிக்கான விதிமுறை. குறித்த இந்த மூன்றாம் சுற்றுப் போட்டியில் முயல் முன்னிலை வகித்தது. ஆனால், அதனால் ஆற்றில் இறங்கி அதனைக் கடக்க இயலாது போய்விட்டது. நீரிலும் சரி, நிலத்திலும் சரி மெது மெதுவாகப் பயணித்த ஆமை அந்த மூன்றாம் சுற்றில் முயலைத் தோற்கடித்துவிட்டிருந்தது.

இனிமேல்தான் கதையின் சுவாரஸ்யமான பகுதி வரப்போகின்றது. போட்டியின் நான்காவது சுற்றில் கலந்து கொள்ளுமுன்னர் முயலும் ஆமையும் தத்தமது எதிர்த்தரப்பைத் தோற்கடிப்பது எப்படி எனச் சிந்திப்பதற்குப் பதிலாகப் போட்டியில் இருவருமே எவ்வாறு வெற்றி ஈட்ட முடியுமெனச் சிந்திக்கத் தலைப்பட்டன. ஆமையும் முயலும் தமக்குள் கூடிப்பேசி ஏதோவொரு இறுதித் தீர்மானத்தை எட்டின.

### தமது தொழில் குறித்த மதிப்பும் கடமை உணர்வும் ஊழியர்களுக்கு அவசியம்

போட்டியின் நான்காவது சுற்றும் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் நிலப்பகுதியை முயல் ஆமையைத் தனது தோளில் காவியபடி பயணித்து முடித்தது. ஆற்றில் இறங்கிய ஆமை முயலைத் தனது முதுகில் சுமந்தபடி பயணித்துக் கரையேறியது. கடைசியில் ஆமைக்கும் முயலுக்கும் வெற்றியோ வெற்றி. சில போட்டிகளில், வெற்றி இலக்கை அடையவேண்டுமானால், சம்பந்தப்படும் சகல தரப்புக்களும் ஒன்றிணைந்து ஒரே நோக்கில் முயற்சித்தால் மட்டுமே வெற்றியை ஈட்ட முடியும். . உதாரணத்துக்குக் குறிப்பிட்டு சொல்லவேண்டுமானால், ஒரு நிறுவனத்தின் இலக்கு வெற்றிபெறவேண்டுமானால், அந்த நிறுவனத்தின் சகல பணி

யாளர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் . உயரதிகாரிமுதல்கடைநிலைஊழியர் வரைஒன்றிணைந்துசெயற்பட வேண்டும் . அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையத்தில் கூட்டிச்சுத்தம் செய்யும் பணியை மேற்கொள்ளும் ஊழியரொருவரிடம் நிறுவனத்தில்உமதுதொழில்எத்தகையது என வினவியபோது, சந்திரனுக்கு விண்கோளொன்றை அனுப்பும் முயற்சிக்கு உதவுவதேதமது தொழில்எனக்குறிப்பிட்டாராம்.அந்தவகையில்நாம் மற்றவர்கள் குறித்து எமது பார்வையைத்தான் மாற்றிக் கொள்ளவேண்டும். எவரையும் குறைத்த மதிப்பிடல் தவறு என்பது புரிகிறல்லவா? அந்த வகையில் எமது சிந்தனையை,எமது கருத்துநிலைப்பாட்டைதேவைப் படும்வேளையில்மாற்றியமைத்துக்கொள்வது தவறல்லவே?
அதேவேளை குறித்த அந்தச் சுத்திகரிப்புப் பணியை மேற்கொள்ளும்ஊழியர்மனதளவில் தமது அந்தப் பணி தரக் குறைவானதொன்று என்ற மன உணர்வுடன் அல்லாது 'நாசா' என்ற அந்த விண்வெளி ஆய்வு மையம் மேற்கொள்ளும் பெறுமதிமிக்க பணியில் தாமும் ஒரு பங்காளி என்ற உணர்வுடன் பணியாற்றுவதை எம்மால் உணர முடிகிறதல்லவா?

**தோல்விகளே வெற்றிக்கான உந்துதலை உருவாக்கி வைக்கின்றன**


ஆனால்சகலவகையானபோட்டிகளையும் மேற்கண்ட விதத்தில் ஒன்றிணைந்துவெற்றிகொள்ள இயலாது. உதாரணமாக பத்தாயிரம் மீற்றர் தூர ஓட்டப்போட்டியில் பங்கு பற்றும் சகலராலும் வெற்றியீட்ட இயலாதல்லவா? போட்டியின் முடிவில் முதலில் வருபவரே முதலிடம் பெறுவார். 1964ஆம் ஆண்டில் ஜப்பானின் டோக்கியே நகரில் இடம் பெற்ற ஒலிம்பிக்போட்டிகள்குறித்தசுவாரஸ்யமான தகவலொன்றை இந்த வேளையில் பகிர்ந்து கொள்வது பொருத்த மானது. 2020ஆம் ஆண்டில் இடம்பெறவுள்ள அடுத்த ஒலிம்பிக் போட்டிகளும்ஜப்பான்தலைநகர்டோக்கியோவிலேயே இடம் பெறவுள்ளதால், மேற்குறிப்பிட்ட தகவலை நாம் அனைவரும் தெரிந்து வைத்திருத்தல் பயன் மிக்கது. 1964ஆம் ஆண்டு ஜப்பான் டோக்கியோ நகரில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போது பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் பந்தயத்தின்தகுதிச்சுற்றுப்போட்டியில் இலங்கையின் சார்பில் இந்த நாட்டின் நீண்ட தூர ஓட்டப் பந்தய வீரரொருவரும் கலந்து கொண்டார்.

**வெற்றிகளையும் தோல்விகளையும் சமமாக ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவத்தை போட்டிகள் ஏற்படுத்த வல்லவை.**

போட்டி ஆரம்பமாகிறது. உலக நாடுகள்பலவற்றைச்சேர்ந்தபல ஓட்டப்பந்தய வீரர்கள் குறித்த தகுதிச்சுற்றுப்போட்டியில்கலந்து கொள்கின்றனர்.எமதுநாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அந்த வீரரும் அந்தப்போட்டியில் கலந்துகொள்கிறார்.குறித்தஅந்தப் போட்டியில் கலந்து கொள்வோர் சுற்றுவட்டப்பாதையைமொத்தமாக 25சுற்றுக்கள்சுற்றிவந்தே போட்டியை நிறைவு செய்ய வேண்டியிருந்தது .போட்டியின் முடிவில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைக் கைப்பற்றியோர் மத்தியில் கடும் போட்டி நிலவியது . ஒரு சில செக்கன்கள்வித்தியாசத்திலேயே அவர்களால்ஆளுக்காள்வெற்றிக் கம்பத்தை அடைய முடிந்தது. மற்றெல்லோரையும்பின்தள்ளி அமெரிக்க வீரர் வில்லியம் மிலாஸ்முதலிடத்தைதட்டிச்செல்கிறார். முதலாம், இரண்டாம், மூன்றாம்இடங்களைபெற்றோர் பெயர்களும்அவர்கள்பிரதிநிதித்துவப்படுத்திய நாடுகளின் பெயர்களும் உறுதிப்படுத்தப்பட ,பின் தங்கி ஓடி வந்து கொண்டிருந்த வீரர்களில் பலர் அத்துடன் தத்தமது முயற்சிகளைக் கைவிட்டு போட்டியிலிருந்து ஒதுங்கிக் கொள்கின்றனர்.போட்டிமுடிவுகள் பகிரங்கப்படுத்தப்பட்டன. ஏற்பபாட்டாளர்கள் அடுத்த போட்டிக் கானதயார்ப்படுத்தல்களில்ஈடுபடுகின்றனர். ஆனால்பத்தாயிரம் மீற்றர்தகுதிச்சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டு ஓட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒரேயொரு வீரர் மட்டும் தொடர்ந்தும் ஓடிக்கொண்டிருக்கின்றார். அவர் அந்தப் பத்தாயிரம்மீற்றர்தூரத்தைஓடிமுடிக்க இன்னமும் நான்கு சுற்றுக்கள் ஓடி முடிக்கவேண்டியுள்ளது. தமது 22 ஆவது சுற்றில் அவர் தனியாக ஓடிக்கொண்டிருப்பதைப்பார்த்து பார்வையாளர்கள் கேலிப்புன்னகை உதிர்க்கிறார்கள். வாய் விட்டு சத்தமிட்டுக் கேலி செய்கிறார்கள். ஆனாலும் பார்வையாளர்களது கேலி, கிண்டல், எவற்றையும் பொருட்படுத்தாதுஅந்தவீரர்தமதுமுயற்சியில் தொடர்ந்துகவனம்வைத்துமுன்னேறுகின்றார். தமது 23 ஆவது சுற்றை அவர் ஆரம்பிப்பதைக் கண்டுஅத்தனைபார்வையாளர்களும்மௌனமாகின்றனர்.

> இரண்டாம் உலகப்போரில் சுக்கு நூறாகிப் போன ஜப்பான் நாடு, போருக்குப் பின்னர் தன்னைத் தானே உலகின் பலம்மிக்க நாடொன்றாக ஆக்கிக்கொண்ட விதம் குறித்து அந்த நாட்டின் எதிர்காலசந்ததியினருக்குக் கற்றுக்கொடுக்கிறது. நாமோ போரை வெற்றி கொண்ட துட்டகைமுனு மன்னன் பற்றி வரலாற்றுப்பாடம் கற்றுக் கொடுக்கிறோம் . ஆனால் மனிதர்கள் வெற்றிகளாலல்ல ,தோல்விகளாலேயே பாடம் கற்றுக் கொள்கிறார்கள் என்பதை நாம் வசதி கருதி மறந்து விடுகிறோம் அல்லவா?

தமது 25 ஆவது சுற்றை.நூறு மீற்றர் தூரப்போட்டியில் ஓடும் வேகத்தில் அவர் மிக வேகமாக ஓடி முடிக்கின்றார் . பார்வையாளர்கள்அனைவரும்தமதுஇருக்கைகளினின்றும்எழுந்துநின்று அந்தப் பத்தாயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியை முழுமையாக ஓடி முடித்த அந்த வீரரது மன ஓர்மத்தைப் பாராட்டும் வகையில் கைகளைத் தட்டி ஒலியெழுப்பி அந்த வீரரரைப் பாராட்டுகின்றனர். அந்த வீரர் வேறு எவருமல்லர்.இலங்கையைப்பிரதிநித்துவப் படுத்திஅந்தப்போட்டியில்கலந்து கொண்டு பத்தாயிரம் மீற்றர் தூரத்தையும் முழுமையாக ஓடி முடித்து குறித்த போட்டியில் கடைசி இடத்தைப் பெற்றுக் கொண்ட ஆர்.ஜே.கே.கருணாரத்ன என்ற நீண்ட தூர ஓட்ட வீரரே அவராவார். தாம் குறித்த போட்டியில் கலந்து கொண்டது, போட்டியை ஆரம்பிப்பதற்கு மட்டுமென்றல்லாது, போட்டியை முழுமையாக ஓடி முடிக்கும் நோக்கிலுமே ஆகுமென அவர் செய்தியாளர்களுக்குபெருமையுடன் விளக்கமளிக்கின்றார்.
தமது அந்த விடாப்பிடியான, ஓர்மம்மிக்கசெயற்பாட்டால்கருணாரத்னஎன்றஅந்தநெடுந்தூர ஓட்ட வீரர் ஒரே இரவில் ஜப்பானின் வீர புருஷராக போற்றப்பட நேர்ந்தது . கருணாரத்ன என்ற அந்த வீரரது மனத்தைரியம் குறித்து ஜப்பானிய அரசு அந்த நாட்டின் ஐந்தாம் ஆண்டு வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு கற்பித்து வருகிறது. இரண்டாம்உலகப்போரில்சுக்கு நூறாகிப்போன ஜப்பான் நாடு, போருக்குப் பின்னர் தன்னைத் தானே உலகின் பலம்மிக்க நாடொன்றாக ஆக்கிக்கொண்ட விதம்குறித்துஅந்தநாட்டின்எதிர் காலசந்ததியினருக்குக் கற்றுக் கொடுக்கிறது. நாமோ போரை வெற்றி கொண்ட துட்டகைமுனு மன்னன்பற்றிவரலாற்றுப்பாடம் கற்றுக்கொடுக்கிறோம். ஆனால் மனிதர்கள் வெற்றிகளாலல்ல , தோல்விகள் மூலமே பாடம் கற்றுக் கொள்கிறார்கள் என்பதை நாம் வசதி கருதி மறந்து விடுகிறோம் அல்லவா?





## ஆசிரியருக்கான கடிதம்

### கஞ்சாவிலிருந்து யாழ்.குடாநாடு பாதுகாக்கப்படல் வேண்டும்

யாழ்ப்பாணத்தில் கைப்பற்றப்பட்ட 10கோடிரூபாபெறுமதியானகஞ்சாமேல் நீதிமன்றநீதிபதியின்உத்தரவின்பேரில் எரித்து அழிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாண் மாவட்டத்தில்கஞ்சாவியாபாரம்எந்தஅளவுக்கு உச்சத்தில் உள்ளதென்பதை எடுத்துக் காட்டுவதற்குஇந்தச்சம்பவம்ஒருசிறந்த எடுத்துக் காட்டாகும்.
பாடசாலை மாணவர்களை கண்ணுக்குப் புலப்படாத ஒரு சக்தி திட்டமிட்டு போதைப் பழக்கத்துக்கு அடிமையாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக வெளிவந்த செய்திகள் பெற்றோராகிய எம்மைக் கலக்கமடையச் செய்துவிட்டன. அதுமட்டுமல்லாது பாடசாலை மாணவர்கள் சிலர் கூட வாள்வெட்டுச் சம்பவங்களில் ஈடுபடுவதாகத் தெரிவிக்கப்படுவதும் எம்மைக் கவலையில் ஆழ்த்தியுள்ளன. போதைப்பொருளுக்கு அடிமையாகின்றவர்கள் எதையும் செய்வதற்குத் தயங்கமாட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே.
இந்த நிலையில் இந்தியாவிலிருந்து பெரும்தொகையானகஞ்சாகுடாநாட்டின் ஊடாகக் கடத்தப்படுகின்றமை பாதகமான விளைவுகளுக்கு வழிவகுக்கப் போகின்றது. இந்தியாவிலுள்ள கேரள மாநிலத்தில் பெருமளவு நிலப்பரப்பில் கஞ்சாப் பயிர் பயிரிடப்படுகின்றது. மருத்துவ தேவைகளுக்கென கஞ்சா அங்கே பயிரிடப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், பிற இடங்களுக்கு அது எடுத்துச் செல்லப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இலங்கைக்குஅருகேகேரளமாநிலம்அமைந்துள்ளதால்இலங்கைகடற்பரப்பினூடாக இலங்கைக்குள் கஞ்சா கடத்தி வரப்படுகின்றது. அதிலும் மிகக் குறுகிய கடற்பரப்பினூடாக யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப் படும்கஞ்சாஅங்கிருந்துநாட்டின்பிறஇடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.
கஞ்சாஒருமோசமானபோதைப்பொருள் என்பது அனைவருக்கும்தெரிந்த விடயமாகும். இதைப்பயன்படுத்தபவர்களின் மூளை பாதிக்கப்படுவதால் அவர்கள் நடைப்பிணங்களாகவே உலவவேண்டிய நிலை உருவாகும்.
கேரளாவிலிருந்து கஞ்சா கடத்தி வருவதைத் தடுப்பதற்கு இந்திய, இலங்கை அரசுக்கள் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தீவிரமான கடற் கண்காணிப்பில் இரண்டு நாட்டுக் கடற்படையினரும் இணைந்து ஈடுபட வேண்டும். இதைச்செய்வதற்குத்தவறினால் சில தென் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டுள்ள நிலைமை யாழ்ப்பாணத்திலும் உருவாகிவிடும்.

மா.கிருஷ்ணதாசன்,
பண்டத்தரிப்பு.

# நெல் உற்பத்தித் திறனை அதிகரித்தல்

## நெல் நாற்று நடும் இயந்திரம் மற்றும் களைகட்டும் இயந்திரங்களை பயனுறுதியாக்கும் செயல்நிலை

தங்கராஜா கமலதீபன்
கணேசலிங்கம் நிரோஜன்

**இயந்திர நாற்றுநடுகை**

பாய் நாற்றுமேடையில் (Dapog Nursery) வளர்க்கபட்ட இளம் நெல் நாற்றுக்களை விசேடமாக வடிவமைக்கப்பட்ட நெல் நாற்று நடும் இயந்திரத்தைப் பாவித்து நடுகை செய்யும் செயற்பாடே இயந்திர நாற்று நடுகை எனப் பெயர் குறிப்பிடப்படுகிறது. புராதன முறைப்படி கைகளால் நாற்றுநடும் போது ஒரு ஏக்கர் பரப்பளவில் நாற்றுகளை நடுகை செய்வதற்கு 8 தொடக்கம் 12 வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். எனினும் நாற்றுநடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நாளொன்றுக்கு 3 தொடக்கம் 4 ஏக்கர் பரப்பளவில் நாற்றுகளை நடுகை செய்வதற்கு 03 வேலையாள்கள் தேவைப்படுகின்றனர். பாரம்பரிய முறைப்படி வீசி விதைப்பதற்கு 40 தொடக்கம் 60 கிலோ விதை நெல்லை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். எனினும் நாற்று நடும் இயந்திரத்தைப் பயன்படுத்தி நாற்றுக்களை நடுகை செய்வதற்கு 12 தொடக்கம் 15 கிலோ விதை நெல் போதுமானதாக உள்ளது.

**இயந்திர நாற்றுநடுகையின் நன்மைகள்**

- நாற்றுக்களை வீசிவிதைத்தலுடன் ஒப்பிடும் போது இம்முறைமூலம் உயர் விளைச்சல் கிடைக்கும்.
- மிகக் குறைந்தளவான விதை நெல்.குறிப்பாக 12 தொடக்கம் 15 கிலோ நெல் போதுமானது.
- சீரான பயிரிடை வெளியையும்.உகந்த பயிர் அடர்த்தியையும் பேண முடியும்.குறிப்பாக 26 தொடக்கம் 28 குழி / ஒரு சதுரமீற்றர் இல் 2 தொடக்கம் 3 நாற்றுக்கள்/குழி).
- உகந்த பயிர் அடர்த்தியை பேணுவதனால் பீடைத் தாக்கம் மிகக் குறைவு. உரிய காலப்பகுதியில் நாற்றுக்களை நடுகை செய்யமுடியும்.18 தொடக்கம் 21 நாள்கள் போதுமானது.
- ஓரலகு பரப்புக்கான உற்பத்திச் செலவு மிகக்குறைவு.
- வரிசைக்கு இடையில் களை கட்டும் இயந்திரத்தை பாவித்து இலகுவாக களைகட்டலாம்.
- விவசாயின் தேறியவருமானம் அதிகரிக்கும்.

**விளைச்சல் ஒப்பீடு**

•தரவு - நெல்நாற்று நடுகை/ 2016 2017 பெரும்போகம் / கட்டுக்கரை குளம் / ஆட்காட்டிவெளி
•(இனம் Bg - 450)

| விவரம் | வீசி விதைத்தல் | நாற்றுநடல் |
|---|---|---|
| பயிரொன்றிலுள்ள கதிர்களின் எண்ணிக்கை | 40 - 50 | 90 - 95 |
| பயிரொன்றிலுள்ள பயனுள்ள கதிர்களின் எண்ணிக்கை | 30 - 40 | 80 - 90 |
| கதிரொன்றிலுள்ள மணிகளின் எண்ணிக்கை | 300 | 380 |
| விளைச்சல் | 6 Mt/ua | 10 Mt/ua |

- தரவு - நெல்நாற்று நடுகை / 2016. சிறுபோகம் /சோல மண்டலகுளம் / இலுப்பைகடவை
- (இனம் Bg -360)

| விவரம் | வீசி விதைத்தல் | நாற்றுநடல் |
|---|---|---|
| பயிரொன்றிலுள்ள கதிர்களின் எண்ணிக்கை | 20-32 | 56-65 |
| பயிரொன்றிலுள்ள பயனுள்ள கதிர்களின் எண்ணிக்கை | 14-19 | 48-58 |
| கதிரொன்றிலுள்ள மணிகளின் எண்ணிக்கை | 263 | 365 |
| விளைச்சல் | 4.75 Mt/ua | 6.75 Mt/ua |

•குறிப்பு - பயிரின் வயது. இனம். பயிர் செய்யப்படும் இடம் என்பவற்றை பொறுத்து விளைச்சல் மாறுபடும்.

**பாய் நாற்றுமேடை (Dapog Nurserஸ) அமைத்தல்**

12 தொடக்கம் 15 கிலோ அளவான சிறந்த விதை நெல்லைத் தேர்வு செய்தல் வேண்டும். விதை நெல்லை 10 தொடக்கம் 12 மணி நேரம் நீரில் அமிழ்த்தி வைப்பதுடன் தூய்மையற்ற மிதக்கும் பதார்த்தங்களை அகற்றிக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் காற்றோட்டமான குளிர்மையான இடமொன்றில் 4' தடிப்பில் விதை நெல்லை வாழையிலையில் கொட்டிப் பரவ வேண்டும். அதன் மேல் சிறிய மூடுபடையாக வைக்கோல் இட்டு நிரப்ப வேண்டும்.

நாற்றுமேடை அமைக்கவிருக்கும் பகுதியை உழுது சேறாக்கி மட்டப்படுத்தல் வேண்டும். வயலின் மண் தன்மைக்கு ஏற்ப சேறடைந்து பதமான நிலைக்கு (மகிழி) வந்ததும் நாற்று மேடையை அமைக்கலாம். ஒரு மீற்றர் அகலமானதும் 10 தொடக்கம் 15 சென்ரி மீற்றர் உயரமானதும்,தேவையான நீளமுடையதுமான உயர்பாத்தி ஒன்றை அமைக்க வேண்டும். ஒரு ஏக்கர் நாற்று நடுவதற்கு மேற்படி பாத்தி ஒன்றின் 80 தொடக்கம் 100 மீற்றர் போதுமானதாக இருக்கும்.

இதன் பிற்பாடு மேற்படி பாத்தியின் மேல்கயிறு மற்றும் தடிகளின் உதவியுடன் பொலித்தீன் தாளைப்பயன்படுத்தி 1 தொடக்கம் 1.25 சென்ரி மீற்றர் உயரமுடைய தட்டமைப்பு ஒன்றை உருவாக்கி, இடையிடையே பொலித்தீன் தாளில் சிறிய துளைகளையிட வேண்டும். இதற்காக 'டபொக்' நாற்றுமேடைத் தட்டுக்களைகளையும் பயன்படுத்தலாம்.



பின்னர் சேறு மற்றும் களை விதைகளற்ற உக்கிய மாட்டெரு என்பவற்றை முறையே 4 இற்கு 1 என்ற விகிதத்தில் கலந்து தட்டுக்களை நிரப்ப வேண்டும். அதை சீரான ஆழத்தை பேணும் வகையில் மட்டமாக்கி மேலதிக சேற்றினை வழித்து அகற்ற வேண்டும்.

சரியான முறையில் முளைக்க வைக்கப்பட்ட விதை நெல்லை தயாரிக்கப்பட்ட நாற்றுமேடையில் தூவி ஒரு நெல் இன்னொரு நெல் அருகே இருக்கத்தக்கவாறு மெதுவாகக் கைகளால் அழுத்திவிடுதல் வேண்டும். 2 தொடக்கம் 3 நாள்களுக்கு மெல்லிய மூடுபடை ஒன்றை இட வேண்டும்.மழைவீழ்ச்சி அதிகமுள்ள காலங்களில் மேடையை முதல் 5 நாள்களுக்கு பொலித்தீனால் பாதுகாத்தல் நன்று. ஆரம்பத்தில் நாற்றுமேடை காயாதவாறு பூவாளியை பயன்படுத்தி நீரால் நனைக்க வேண்டும். 3 தொடக்கம் 4 நாள்களின் பின் வயலில் நீரைப்பாய்ச்சி கட்ட வேண்டும்.

**இயந்திர நாற்று நடுகைக்கு தயாராதலும் நாற்று நடுதலும்**

முறையான பராமரிப்பின் கீழ் 8 நாள்களில் நாற்றுமேடைப் பயிர் 8 சென்ரி மீற்றர் உயரமாகவும், 12 ஆவது நாளில் 16 சென்ரிமீற்றர் உயரமாகவும் காணப்படும். எனினும் 18 தொடக்கம் 21 நாள்களில் நாற்று நட வேண்டும்.

நிலத்தை உழுது சேறடித்து மட்டமாக்கி நீர் வடிந்து சேறடைவதற்கு 12 தொடக்கம் 24 மணித்தியாலங்கள் விடவும். எனினும் இது மண்ணின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். நாற்றுநடும் போது வயலில் ஒரு சென்ரி மீற்றர் உயர நீரை வைத்திருத்தல் மிகவும் உகந்த செயல்நிலை.

ஈரம் காயாதவாறு உரிய அளவிலான 'டபொக்' நாற்றுமேடைத் துண்டுகளை நாற்றுநடும் இயந்திரத்தில் இட்டு நாற்றுநட வேண்டும். மன்னார் விவசாய திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இளம் விவசாய கழகங்களிடம் நாற்றுநடும் இயந்திரத்தை வாடகைக்குப் பெறலாம்.

**கவனத்துக்குரிய விடயங்கள்**

- தரமான விதை நெல்லை பயன்படுத்தவும் முளைதிறனைப் பரிசோதிக்கவும் வேண்டும்.
- விதை நெல்லை பங்கசு நாசினி ஒன்றினால் விதைப் பரிகரணம் செய்ய வேண்டும்.
- பொலித்தீனைப் பாதுகாப்பாக கையாள்வதுடன் மீள் பயன்படுத்தலாம்.
- முதல் 3 தொடக்கம் 4 நாள்களுக்கு நாற்றுமேடைக்கு பூவாளியால் நீர் தெளிக்க வேண்டும்.
- நாற்றுமேடைப் பயிர்களுக்கு போசணைக் குறைபாடு ஏற்படும் போது பிரதேச விவசாயப் போதனாசிரியரை அணுகவும்.
- நாற்றுமேடைப் பயிர்களுக்கு சிறந்த நீர்ப்பாசன முகாமைத்துவத்தை மேற்கொள்வதுடன், நாற்றுமேடைமேல் நீர் நிற்பதை தவிர்த்து பயிர் தகைப்பை குறைத்தல் வேண்டும்.
- தயாரான மட்டப்படுத்தப்பட்ட வயலில் மட்டுமே நாற்றுக்களை நடவும். வயல் நாற்று நட உகந்த நிலையில் இருக்கிறதா என்பதை சிறிய பரந்தளவிலான கல்லொன்றை ஒரு மீற்றர் உயரத்தில் இருந்து போடும் போது கல் அடையாளத்தை ஏற்படுத்திக் கொ்ண்டு கீழே ஆழமாக பதிய வேண்டும். கல் சேற்றிலே மூழ்கினால் வயல் சற்று ஈரமாக உள்ளது என்ற தன்மையையும்.கல் மேற்பரப்பில் தங்கிவிட்டால் வயல் சற்று காய்ந்து விட்டது என்ற தன்மையின் புரிதலையும் இயல்பாக பெற்றிருக்க வேண்டும்.
- நாற்றினை நடுகை செய்து 4 தொடக்கம் 5 நாள்களின் பின் 1 தொடக்கம் 2 செ.மீ உயரத்துக்கு நீரைப்பாய்ச்சி கட்டுதல் வேண்டும்.

“நெல் நாற்றுநடும் இயந்திரத்தை பாவிப்பதன் மூலம் நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் களை கட்டும் இயந்திரம் மூலம் களை கட்டுப்படுத்தப்படுவதனால் அசேதன இரசாயன களைநாசினிகளின் பாவனை அற்ற, சூழல் நேயமான பயிர்ச்செய்கையை மேற்கொண்டு “நஞ்சற்ற உணவு நஞ்சற்ற நாடு” எனும் இலக்கினை நோக்கிப் பயணிப்போம்.

**களை கட்டும் இயந்திரத்தைப் பயன்படுத்தல்**

நெல் நாற்றுநடும் இயந்திரத்தைப் பாவிப்பதன் மூலம் நெல்லின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதுடன் களை கட்டும் இயந்திரம் மூலம் களை கட்டுப்படுத்தப்படுவதனால் அசேதன இரசாயன களைநாசினிகளின் பாவனை அற்ற. சூழல் நேயமான பயிர்ச்செய்கையை மேற்கொண்டு "நஞ்சற்ற உணவு நஞ்சற்ற நாடு" எனும் இலக்கினை நோக்கிப் பயணிப்போம்.

*பிரதி மகாண விவசாயப் பணிப்பாளர் பணிமனை,
மன்னார்.*

# ‘இலுப்பை’

## இயற்கையின் மெருகூட்டலுடைய பெண்ணியல் நலன் காணும் அளிக்கை

சிவதாஸ்



காணும் இடமெல்லாம் தோப்பாக இருந்த காலங்களும், மங்கையரின் கூந்தலை மெருகூட்ட அரப்பாக பயன்படுத்தப்பட்ட தன்மைகளும் பாகு, பலகாரம் என சுவைத்திட்ட நினைவுகளும் இன்று கதையாகிப் போனாலும், இலுப்பையின் மகத்துவமும் இனிமையும் எக்காலத்திலும் மறந்திட முடியாத திரவியம்.

**முக்கியத்துவம்**

இலுப்பை உணவாகவும், குடி பானமாகவும்,மருந்தாகவும் மனிதருக்குப் பயன் தந்தது. தவிர பயிருக்கு உரமாகவும், காற்றுத் தடை வேலியாகவும், கால்நடைகளுக்கு நல்ல உணவாகவும் விளங்கியது. எனினும் அதிகரித்த பயன்பாடுடைய பயன்தரு மரமான இலுப்பை அழிவின் பாதையில் பயணிக்கிறது.

பழந் தமிழர்கள் இலுப்பைப் பூவையும், பழத்தின் சதைப்பகுதியையும் நொதிக்க வைத்து ‘சோமபானம்’ தாயாரித்தார்கள் என்பது வரலாறு. அது உடல் நலனுக்கு தீங்கிழைக்காத மதுசாரமாக இருந்தது.

ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை என்பார்கள்.

அந்தவகையிலே பாலைநிலத்தில் வாழும் பழங்குடியினருக்கு கோடை காலத்தில் குடி நீராகவும், உணவாகவும் இலுப்பை பயன்பட்டது. இலுப்பைப்பூ அரிசி, மக்காச்சோளம் போன்றவற்றுக்கு இணையாக காபோவைதரேற்று சத்தினை நிறைவாக கொண்டுள்ளன. இதனை ஆய்வுத் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன. பூவைப்போல விதையும் சிறப்பு வாய்ந்தது. வீடுகளில் தீபம் ஏற்றுவதற்கு ஒரு காலத்தில் இதன் எண்ணெய் பயன்படுத்தப்பட்டது.

எண்ணெயை எடுத்த பின்பு கிடைக்கும் பிண்ணாக்கு வயலுக்கு உரமாக பயன்படுத்தப்பட்டது. இலுப்பை எண்ணையில் ‘சப்போனின்’ என்ற வேதிப்பொருள் காணப்படுவதால் ‘சம்போ’ போல தலைகுளிக்க பயன்படுத்தலாம். இதன் மூலம் பொடுகு, நரை இல்லாமல் கூந்தலை பராமரிக்கலாம். பலகாரம் செய்யவும் இலுப்பைப்பூ எண்ணையைப் பயன்படுத்தியதாக மூத்தோர் இன்றும் கருத்துரைக்கின்றனர். இலுப்பை மரம் உறுதியானது. இதனால் தொடருந்து தண்டவாளத்துக்கும், கப்பல் கட்டுமானப் பணிகளுக்கும் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.


“குழந்தைப் பேறின்றி நம்பிக்கையற்ற வாழ்வை நாடி பயணிப்பது போல, மரங்களற்ற நாடும் உதவிக் கரங்களற்ற ஏதிலியின் பாடுகளையே சுமந்திருக்கும்.”

இலுப்பை மரத்தின் காய்கள் மற்றும் பழங்களை நாடி பலவகையான பறவைகளும், வண்டினாங்களும் படையெடுத்து வருவதனால், விவசாய நிலங்களில் இலுப்பை மரங்களை ஆங்காங்கு நடுவதன் ஊடே பயிரைத் தாக்கும் பூச்சிகளை உயிரின முறையில் கட்டுப்படுத்தமுடியும்.




**மருத்துவப் பயன்**

போதுமான பால் சுரக்காத தாய்மார்களுக்கு, இலுப்பை இலையை மார்பில் வைத்துக் கட்டினால் தாய்ப்பால் நன்றாகச் சுரக்கும். இலுப்பைப்பூவை தண்ணீரில் போட்டு சுடவைத்து அந்த நீரை பருகிவந்தால் வெப்பத்தினால் உண்டான சளி,ஆறா இருமல், தீராத தாகம் போன்றவை தீரும். இடுப்புவலி,பித்த வெடிப்பு,மூலநோய் போன்றவற்றுக்கும் மருந்தாகப் பயன்படும்.



**இலுப்பைக்கான நாமகரணம்**

‘மடுகா லோஞ்சி போலியா’ (Maducal ongifolia) என்னும் தாவரவியல் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. சப்போடேசியே குடும்பத்தை சார்ந்தது. ஆங்கிலத்தில் ‘இந்தியன் பட்டர்’ என்றும், சிங்க ளத்தில் ‘மீ’ என்றும் இது அழைக்கப்படுகிறது. இவற்றில் இரண்டு இனங்கள் உண்டு. அகன்ற இலையைக் கொண்ட இனமாக விளங்கு கிறது. ‘மதுகா லாட்டி போலியா’ நீண்ட இலைகளை உடைய இனம். ‘மமுகா லாஞ்சி போலியா’ எனவும் இதனை அழைப்பர்.



**பண்புகள்**

இவை உலர் வறல் வலயத்தில் வளரக்கூடியவை. பொதுவாக எல்லாவகை மண்ணிலும் வளரும். 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடிய பருத்த மரம். நாலாபுறமும் கிளை பரப்பி வளரும் தன்மையுடையது. பூக்கள் நறுமணம் வீசும். விதைகள் எண்ணெய்த் தன்மை கொண்டது.

**நடுகை**

மரங்களில் இருந்து விழும் பழங்களில் இருந்து சதையை நீக்கி விதையை அப்புறப்படுத்தி உடனேயே இதனை விதைக்க வேண்டும். எண்ணெய்த் தன்மை கொண்ட விதை என்பதால் உடனேயே விதையை நடுகை செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் முளைப்புத் திறன் குறைவடையும்.

30 அடி இடைவெளியில் 3 தொடக்கம் 4 விதைகளை நடுகை செய்ய வேண்டும். அவை முளைத்தபின் ஆரோக்கியமான ஒரு நாற்றை தெரிவு செய்து கொண்டு ஏனையவற்றறை அகற்றலாம். 6 தொடக்கம் 10 ஆண்டுகளில் அறுவடையைப் பெற்றுக்கொள்ளலாம்.

இலுப்பைமரம் தை மாத காலப்பகுதியில் இலைகளை உதிர்த்து மாசி மற்றும் பங்குனி மாதங்களில் புதுத்தளிர்களை உருவாக்கிக் கொள்ளும். பங்குனி மற்றும் சித்திரை மாதங்களில் பூக்களை உருவாக்கி வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் கனிகளைத் தரும்.

**பயன்**

இலுப்பைப்பூ பாகு தயாரித்தல், ஜாம் மற்றும் ஜெலி தயாரித்தலில் பயன்படுகிறது. இலுப்பைப் பழம் உணவாக உண்ணவும்,எண்ணெயைப் பெற்றுக்கொள்ளவும் பயனுறுதியாக்கப்படுகிறது.கால்நடைத் தீவனம் மற்றும் இன்னபிற மருத்துவ தேவைகளின் பயன்பாட்டையும் இது கொண்டுள்ளது.

**பீடைகள்**

இலுப்பைப் பழங்கள் பழுக்கும் காலத்தில் கிளி, வெளவால்,அணில் ஆகியவற்றின் நடமாட்டமும் தொல்லையும் அதிகரித்துக் காணப்படும்.

**விளைச்சல்**

நன்றாக வளர்ந்த இலுப்பை மரத்தில் ஆண்டுக்கு சராசரியாக 90 கிலோ பூக்களைப் பெறலாம். ஒரு மரத்தில் ஆண்டுக்கு 100 தொடக்கம் 150 கிலோ விதை கிடைக்கும். ஒரு கிலோவில் 450 விதைகள் இருக்கும். ஒரு கிலோ விதையை அரைத்தால் 300 மில்லி லீற்றர் எண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம்.

**இலுப்பை காணும் பாசுரம்**

**இனிமையான இலுப்பை**

இனிமையான உணவுதனை உண்டிடலாம்
உள்ளம் பொங்கும் பானத்தை பருகிடலாம்
அழகான கூந்தலுக்கு அரப்பாக வைத்திடலாம்
இவையனைத்தும் இலுப்பையாலே இயற்றிடலாம்...!

இல்லை என்ற சொல்லுக்கு இடமில்லை
இலுப்பையாலே பல நன்மை பெற்றிடலாம்
கால்நடைக்கு உணவுதனை ஆக்கிடலாம்
உழவுக்கு உரமாக இட்டிடலாம்....!

தோப்பாக இருக்க வேணும் இங்கெமக்கு
இனிதான வளம் விளையும் இலுப்பையிலே
ஈடில்லா பயன் உள்ள இலுப்பைதனை
வீட்டினிலே நாட்டி வளம் சேர்த்திடுவோமே...!

❝ இலுப்பை மரம் தை மாத காலப்பகுதியில் இலைகளை உதிர்த்து மாசி மற்றும் பங்குனி மாதங்களில் புதுத்தளிர்களை உருவாக்கிக் கொள்ளும். பங்குனி மற்றும் சித்திரை மாதங்களில் பூக்களை உருவாக்கி வைகாசி மற்றும் ஆனி மாதங்களில் கனிகளைத் தரும்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கார்த்திகை மாத ராசிபலன்

நவம்பர் 17 முதல்
டிசெம்பர் 15 வரை



## விருச்சிகம்

விருச்சிக ராசி அன்பர்களே!

ராசிநாதன் செவ்வாய் மாதப் பிற்பகுதியில் சாதகமற்ற இடத்துக்குச் சென்றாலும், சுக்கிரன் சாதகமாக சஞ்சரிக்கிறார். மற்றக் கிரகங்களும் ஓரளவுக்கு நன்மை தரும் நிலையிலேயே சஞ்சாரம் செய்கின்றனர். கேதுவும் நற்பலன்களை அள்ளி வழங்கும் இடத்தில் இருக்கிறார். மாதத் தொடக்கத்தில் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். புதிய வாகனம் வாங்கும் யோகமும் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புக்களும் ஏற்படக்கூடும். தெய்வ பக்தியும் ஆன்மிகத்தில் நாட்டமும் அதிகரிக்கும். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வரும் வாய்ப்பும் ஏற்படும்.

பெண்களால் பொருள் சேர்க்கை உண்டாகும். ஆனாலும், உறவினர்களால் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமான வரை அளவோடு பேசவும். கணவன் மனைவிக்கு இடையில் சிறுசிறு அளவில் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளதால், ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. புதன் சாதகமற்ற நிலையில் இருப்பதால், குடும்பத்தில் அடிக்கடி பிரச்சினைகள் ஏற்படக்கூடும். நண்பர்களிடம் எதிர்பார்க்கும் உதவிகள் கிடைக்கும். நண்பர்களால் வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படக்கூடும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கும். ஆனாலும், பணிச்சுமை அதிகரிக்கவே செய்யும். சக ஊழியர்கள் உங்கள் பணிகளில் உதவிகரமாக இருப்பார்கள். சிலருக்கு வேலையில் இடமாற்றமும் ஊர்மாற்றமும் ஏற்பட வாய்ப்பு உண்டாகும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாத முற்பகுதியில் விற்பனை அதிகரிப்பதுடன் இலாபமும் படிப்படியாக உயரும். ஆனால், முன்பின் தெரியாதவர்களுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டாம்.

**கலைத்துறையினருக்கு:** தடைப்பட்ட வாய்ப்புகள் கைகூடி வரும். வருமானமும் அதிகரிக்கும். பாராட்டுகள் குவியும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். சிலருக்கு திடீர் யோகம் உண்டாகும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் கூடுதல் கவனம் எடுத்துப் படிக்கவேண்டியது அவசியம். பொழுதுபோக்குகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. ஆசிரியர்கள் பாடங்கள் நடத்தும்போது கூர்ந்து கவனிப்பது அவசியம்.

**பெண்களுக்கு:** குடும்பத்தை நிர்வகிப்பதில் சற்று சிரமம் இருக் கவே செய்யும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்மணி களுக்கு வேலைச்சுமை கூடுதலாக இருக்கும். பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சிரமம் எதுவும் இருக்காது. அக்கம்பக்கத்து வீடுகளில் உள்ளவர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

## வரலாற்றில் இன்றைய தினம்
25.11.2017



2016 - இனச் சுத்திகரிப்பில் ஈடுபடுகிறது மியன்மார் என்று ஐ.நா. சபை சாடல்.

- 1750 - டமஸ்களில்ஏற்பட்டபூகம்பத்தை அடுத்து சுமார் 20ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- 1833 - சுமாத்திராக் கடலுக்கு அடியில் 9.2 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி ஏற்பட்டது.
- 1963 - அமெரிக்காவின் முன்னாள் அதிபர் கெனடியின் உடல் வொஷிங்டனில் புதைக்கப்பட்டது.
- 1966 - ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டன் இடையே தொலைக்காட்சி தொடர்பு ஏற்படுத்தப்பட்டது.
- 1975 - நெதர்லாந்திடம்இருந்துசுரினாம் சுதந்திரம் பெற்றது.
- 1988 - சோவியத் விஞ்ஞானி அன்ரி காகோராவுக்கு அமெரிக்காவின் சமாதானப் பரிசு.
- 1996 - பொலிஸார் படையினர் இணைந்து கொழும்பில் பெரும் தேடுதல். 180 தமிழ் இளைஞர்கள் கைது.
- 2016 - மாவீரர் தினத்துக்கு ஏற்பாடுகள் தீவிரம்.
- 2016 - ஐ.எஸ்ஸின் தாக்குதலில் 100 சியா இஸ்லாமியர்கள் சாவு.

## நாளை

**26.11.2017**
ஞாயிற்றுக்கிழமை

**கார்த்திகை 10**

திதி: முழுவதும் கரிநாள்
நட்சத்திரம்: அவிட்டம் மு.ப. 11.43 வரை
சுபநேரம்: 09.12–10.42 வரை
ராகுகாலம்: 04.42–06.12 வரை

## பத்தி எழுத்து

# அபிவிருத்திப்பாதையில் பயணிக்குமா குடாநாட்டு விவசாயம்?

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் விவசாயத்தைக் கைவிட்டு ஒதுங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கூறியமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவர் நாடாளுமன்றில் வைத்தே இதைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாண மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்பவர் என்ற வகையில் அவர் சரியான தகவல்க்ளைச் சேகரித்த பின்னரே இந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பாரென நம்ப முடிகின்றது. யாழ் மாவட்ட விவசாயிகள் கடுமையான உழைப்புக்குப் பெயர் பெற்றவர்கள். விவசாயத்தைத் தமது உயிராக நேசிப்பவர்கள். இங்கு வாழ்கின்ற மக்களில் கணிசமான தொகையினர் விவசாயத்தையே தமது முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்கள்.

குடாநாட்டு விவசாயம் நிலத்தடி நீரை நம்பியே இடம்பெற்று வருகின்றது. இதனால் பயிர்களுக்கு நீரைப்பாய்ச்சுவதற்கு அதிக செலவாகின்றது. ஆனால் வேறு வழியில்லாமல் விவசாயிகள் இதையே தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். தென்பகுதியைப்போன்று வடக்கிலும் நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்படுமாயின் விவசாயத் தொழிலைச் சிறப்பாக அபிவிருத்தி செய்து கொள்ள முடியும்.

உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாய உற்பத்தியில் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் யாழ்மாவட்ட விவசாயிகள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். குடாநாட்டுச் சந்தைகளில் பெரும் தொகையில் பொருள்களை விற்பனை செய்ய முடியாதுள்ளது இதனால் தம்புள்ளயை நாடவேண்டியுள்ளது. இதற்கு அதிக கட்டணத்தை வாகனங்களுக்குச் செலுத்த வேண்டியுள்ளது.

குடாநாட்டைப் பொறுத்தவரையில் நவீன முறையிலான விவசாயத்துக்கு விவசாயிகள் இன்னமும் திரும்பவில்லை என்றே சொல்ல வேண்டும். நீர்ப்பாசன வசதிகள் இல்லாததால் மழையை நம்பிய மானாவாரிப்பயிர்ச் செய்கையே நெல் வயல்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால்குறைந்தளவிலேயே விளைச்சல் கிடைக்கின்றது. இதனால் நெற்பயிர்ச்செய்கையில் அதிக இலாபத்தை ஈட்ட முடியவில்லை. தோட்டப்பயிர்ச்செய்கைகளும் பழைய முறைகளைப் பின்பற்றியே மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் இரசாயன உரங்களும், கிருமி நாசினிகளும் அளவுக்கும் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதோடு விளை நிலங்களும் பாழாகி வருகின்றன.

விவசாயத் திணைக்களத்தினர் தூங்கிக்கிடக்காது விழிப்புடன் செயற்பட்டு விவசாயிகளுக்கு நவீன விவசாய நடைமுறைகளைப் போதிக்க வேண்டும். இதன்மூலமாக அதிக விளைச்சலை விவசாயிகள் பெற்றுக் கொள்வார்கள். அத்துடன் போதிய சந்தை வாய்ப்புக்களும் இருக்குமாயின் குடாநாட்டின் விவசாயம் முன்னேற்றத்தைக் காணும் என்பதில் ஐயமில்லை.

# விஜய்யின் அடுத்த படத்தில் விவசாயிகளின் பிரச்சினை

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கவிருக்கும் புதிய படம் விவசாயிகளின் பிரச்சினையை மையமாக வைத்து உருவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய் நடிப்பில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் படம் 'மெர்சல்'. இந்தப் படத்தில் மருத்துவ முறைகேடு, பணமதிப்பிழப்பு, ஜி.எஸ்.டி. வரி போன்ற பிரச்சினைகள் இடம் பெற்றுள்ளன. இதனால் இந்தப் படத்துக்கு ஏகப்பட்ட முட்டுக்கட்டைகள் போடப்பட்டன.

எனினும், பலதடைகளைத் தாண்டி வந்த 'மெர்சல்' படத்துக்கு ரசிகர்களிடம் அமோக வரவேற்புக் கிடைத்துள்ளது. அடுத்ததாக விஜய், முருகதாஸின் இயக்கத்தில் நடிக்கவுள்ளார். இந்தப்படம் விவசாயிகளின் பிரச்சினையை மையமாக வைத்து எடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



சினிமா

பெண் : " ஹலோ ஆம்புலன்ஸ் சர்வீசா ?"

ஊழியர்: "ஆமாம் மேடம் என்னாச்சு ?"

பெண் : "கோப்பி குடிக்கும் போது கொஞ்சக் கோப்பி என் சாறியில கொட்டிடுச்சு"

ஊழியர் : "மேடம் இதுக்கெல்லாம் கண்டிப்பா ஆம்புலன்ஸ் வேணுமா ?"

பெண் : " அதில்லைங்க கோப்பி கொட்டினதும் என் புருஷன் கொஞ்சம் சத்தமா சிரிச்சுட்டாரு"

ஊழியர் : "புரியுது மேடம் உடனே வர்றோம்"



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மற்றவர் பேச்சை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். உபரி வருமானம் கிடைக்கும். குடும்ப ஒற்றுமை காப்பது நல்லது.

**இடபம்:** பிறருக்கு வாக்குறுதி அளிப்பதில் கவனம் தேவை. தொழில், வியாபார வளர்ச்சிக்கு கடின உழைப்புத் தேவை. மிதமான பணவரவு இருக்கும்.

**மிதுனம்:** குடும்பத்தினரிடம் விட்டுக் கொடுப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திக்க நேரிடலாம்.

**கடகம்:** விடாமுயற்சியால் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**சிங்கம்:** சமயோசிதமாக செயல்பட்டு பாராட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கு நிறைவேறும். பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் இருந்த குழப்பம் விலகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**துலாம்:** முன் யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் மந்தநிலை உருவாகலாம். இலாபம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:** பேச்சில் நகைச்சுவை உணர்வு வெளிப்படும். தொழில், வியாபாரம் செழிக்க கூடுதலாக உழைப்பீர்கள். தாராள பணவரவு கிடைக்கும். நிலுவை கடன் அடைபடும்.

**தனுசு:** தாமதித்த பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சீராக இருக்கும். பணியாளர்கள் அதிகாரிகளின் குறிப்பறிந்து செயல்படுவர்.

**மகரம்:** புதிய வாய்ப்பை ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்தியாக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களால் உதவி கிடைக்கப் பெறுவர்.

**கும்பம்:** மற்றவர் பரிகாச பேச்சை கண்டு கொள்ள வேண்டாம். கவலை தீர இஷ்ட தெய்வ வழிபாடு செய்யவும். தொழில் வியாபாரம் சராசரி நிலையில் இருக்கும்.

**மீனம்:** பேச்சில் தன்னம்பிக்கை வெளிப்படும். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணவரவு அதிகரிக்கும்.

உங்க மனைவியை செல்லமா எப்படிக் கூப்பிடுவீங்க...
கூகிள்னு....
ஏன்...



நான் எப்ப எங்க இருந்தாலும் கண்டுபிடிச்சிடுவா...

அவனவன் அகதியா நாடு இல்லாம திரிஞ்சிட்டிருக்காங்க. இங்க ஒருத்தன் 'நமக்குன்னு ஒரு தேசம், அதில் நீயும் நானும் மட்டும்' எண்டு பாடுறான்



உன்னையெல்லாம் ஏன்டா சுனாமி தூக்கல..



ஒரு வீட்டில் திருடன் நுழைந்து விட்டான் சத்தம் கேட்டு வீட்டுக்காரன் விழித்த போது...

**வீட்டுக்காரன்:** யாருடா அது?

**திருடன்:** மியாவ்

**வீட்டுக்காரன்:** யாருடா அது?

**திருடன்:** மியாவ் மியாவ் மியாவ்

**வீட்டுக்காரன்:** சமையல் கட்டு பக்கம் யாருடா அது?

**திருடன்:** டேய் செவுட்டு நாயே!!!பூனடா........




## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 3 | | | | | |
| 5 | 8 | 9 | | | | | | |
| 7 | | 4 | | 6 | | | 5 | |
| | | 8 | | 9 | | | | 6 |
| 6 | | | 2 | | 1 | | | 7 |
| 4 | | | | 7 | | | | |
| | 5 | | | 3 | | 6 | | 8 |
| | | | | | | 5 | 3 | 9 |
| | | | | | 9 | | 7 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 1 | 2 | | | | | | |
| | | | | | 5 | | | |
| | | 5 | | 4 | | 3 | 9 | |
| | | 3 | 5 | | 8 | 4 | | 6 |
| | | | | | | | | |
| 8 | | 1 | 3 | | 2 | 7 | | |
| | 7 | 6 | | 2 | | 8 | | |
| | | | 4 | | | | | |
| | | | | | | 9 | 2 | 3 |

# தீமைக்குள்ளும் ஒரு நன்மை உண்டு



வியாபாரி ஒருவனுக்கு ஏதாவது ஒரு அன்னிய நாட்டுக்குச் சென்று வியாபாரம் செய்து பணம் தேட வேண்டும் என்ற ஆசை நெடு நாள்களாக இருந்தது. எனவே அவன் சில நண்பர்களுடன் சரக்குகளைக் கப்பலில் ஏற்றிக்கொண்டு பயணம் செய்தான். கப்பல் நடுக்கடலுக்குச் சென்றவுடன் சுறாவளி வீச பிய்த்தெறியப்பட்டது. நண்பர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை. ஆனால் வியாபாரி உடைந்த ஒரு மரத்துண்டைப் பிடித்துக் கொண்டு உயிர்தப்பி ஆளரவமற்ற ஒரு தீவை அடைந்தான். அங்கிருந்த பழமரங்கள் அவனுக்கு பசி தீர்த்தன.

சற்று தெம்பு வந்ததும் மெல்ல மெல்ல அந்தத் தீவைச் சுற்றிப் பார்த்தான். ஆனால் அவன் துரதிருஷ்டம் அந்தத் தீவில் மனிதர்களோ, விலங்குகளோ சின்னப் பறவைகளோ எவையும் இருக்கவில்லை.

தன் விதியை நொந்து கொண்டான். அந்தத் தீவுப் பக்கமாக ஏதாவது கப்பலொன்று வந்து தன்னை மீட்டுச் செல்லாதா என நினைக்க ஆரம்பித்தான். ஒருநாள் இரண்டு நாள், மூன்று நாள் என மூன்று மாதங்கள் ஓடி மறைந்தன.தனிமை அவனை வாட்டியது. பைத்தியம் பிடித்தவன் போல ஏதேதோ பேசுவான் தன் ஆடைகளைப் பிய்த்துக் கொள்வான். இறுதியில் மெல்லத் தேறிய அவன் இனி அந்தத் தீவே தன் வீடு , வாசல், நாடு, நகர் சொத்து, சுகம் என்ற முடிவுக்கு வந்தான். தனக்கென ஒரு குடிசையை அமைக்கத் தொடங்கினான். உலர்ந்த தென்னை மட்டைகளும் காய்ந்த மரக் கட்டைகளும் அதற்கு உதவின.

"சிக்கி முக்கி கற்களால் நெருப்பை உண்டாக்கி கடற்கரையில் சிறு மீன்களைப் பிடித்தும் சுட்டும் பழங்களைப் பறித்தும் பசியாற்றினான். நாளடைவில் அந்த தனிமையை அவன் நேசிக்கத் தொடங்கினான். ஒரு சமயம் அவன் பயணம் செய்த உடைந்து போன கப்பலில் இருந்த சில மூடைகள் கரை ஒதுங்கின. அவற்றைப் பிரித்த போது தான் எடுத்து வந்த உணவுக்கான சரக்குப் பொருள்கள் அவற்றுள் பத்திரமாக இருக்கக் கண்டான். கடவுள் இந்த மட்டில் தனக்கு உதவி செய்கிறாரென மனம் மகிழ்ந்து அவற்றைச் சமைத்துச் சாப்பிடத் தொடங்கினான். அவற்றைத்தான் விற்று முடிய கப்பல் உடைந்திருந்தால் அவற்றை விற்ற பணத்தைத் தான் சாப்பிட்டிருக்க முடியுமா? என்று நினைத்துக் கொண்டான். நாள்கள் கடந்து கொண்டிருந்தன. ஒருநாள் அடுப்பைப் பற்ற வைத்து அதில் உணவு தயாரிப்புக்கான சில பொருள்களைப் போட்டு விட்டு, மீன் உணவு தேடி கடல்பக்கம் சென்றான். அவன் சென்ற சிறிது வேளையில் அவனது குடிசை எரிவதைக் கண்டான். "ஐயோ ஆண்டவனே இது என்ன சோதனை? அதில்தானே கடலில் கிடைத்த உணவுப் பொருள்கள் அத்தனையையும் வைத்திருந்தேன். எப்படி குடிசை தீப்பற்றியது?என்று பதறியவாறு ஓட்டமும் நடையுமாக குடிசைக்குத் திரும்பினான்.

அங்கே குடிசை நன்றாக கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது. அதனை அணைக்க வேண்டும் என்பதையும் மறந்து வியாபாரி செயலிழந்து நின்றான். இவ்வளவுதான் ஆண்டவன் கருணையா?" இன்று பட்டினிதான்! அன்றல்ல இனி தொடர்ந்து பட்டினிதான் என நினைக்கையில் அவனுக்கு மயக்கம் வருவது போன்றிருந்தது அப்படியே மண்ணில் சாய்ந்து தூங்கிப் போனோான்.

விடிந்தது அந்தக் கடற்கரைப் பகுதியில் ஒரு கப்பல் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய சிலர் வியாபாரியைத் தட்டி எழுப்பினர். திடுக்கிட்டு விழித்த அவன் ஒன்றும் புரியாமல் நின்றான். "சரி சரி கப்பலுக்கு வா. அங்கே எல்லாம் பேசலாம்" என்று கூறி அவனைக் கைத்தாங்கலாக அழைத்துச் சென்று கப்பலில் ஏற்றினர். வியாபாரி திக்கு முக்காடிப் போனானன். அப்போது கப்பலின் மாலுமி "நாங்கள் கடற்படையினர். எமக்கு கடலிலும் தீவுகளிலும் ஆபத்தில் மாட்டிக் கொண்டவர்களைக் காப்பாற்றும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி அனேகமாக தீவுகளில் சிக்கியவர்கள் நெருப்பு புகை என்பவற்றை சமிக்ஞைகளாக காட்டி தமக்கு உதவி வேண்டி நிற்பர். இந்தத் தீவிலிருந்து புகை மண்டலம் எழுவதைக் கவனித்தேன் இங்கே வந்து உன்னைக் காப்பாற்றினோம்" என்றார்.

இப்போது"கடவுளே என் குடிசைக்கு தீப்பிடிக்க வைத்து என்னைக் காப்பாற்றி விட்டீரே! உம்மைப் புரிந்து கொள்ளவே முடியாது. உமது கருணையே கருணை என தான் மனதுக்குள் இறைவனைப் போற்றிக் கொண்டிருந்தான் அந்த வியாபாரி.

## விளம்பரம் எழுதுதல்

விளம்பரம் எழுதும் போது கவனிக்க வேண்டியன.

1. சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுதல்.
2. கவர்ச்சியான மொழி நடையில் அமைதல்.
3. வாக்கியங்கள் நீண்டதாக அமையாதிருத்தல்
4. முக்கிய விடயங்களைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் பண்பு.

இவற்றை மனதில் கொண்டே விளம்பரம் எழுதுதல் வேண்டும்.

விளம்பரத்தை வாசிக்கும் போதே அந்த விளம்பரம் வாசிப்பவரின் உள்ளத்தில் ஆவலைத் தூண்டும் முறையில் அமைதல் வேண்டும்.

## விளம்பரம்

**விற்பனையாகின்றன!**



*சின்னச் சின்னச் சிறுவர்கள்*
*சிரிக்கும் வண்ணம் முல்லைகள்*
*ஆடிப்பாடி மகிழ்ந்திட*
*அரிய நூல்கள் இவையாகும்*

**சிரிக்கும் பூக்கள்**
ஆக்கம் - கவிஞர் .துரைசிங்கம்

**மலரும் மொட்டுக்கள்**
ஆக்கம் - யசோதா பாஸ்கரன்

**மழைப்பாடல்கள்**
ஆக்கம் - பத்மா இளங்கோவன்



விற்பனையாளர்
**லங்கா புத்தகசாலை,**
குணசிங்கபுரம்,
கொழும்பு -12.
தொலைபேசி - 2341942

## சரியான சொல்லின் கீழ் கோடிடுக

1. வீடு (உடைந்தது / உடைந்தன)
2. தோடம்பழம் (இனித்தது / இனித்தன)
3. யானைகள் (பெரியது / பெரியன)
4. கிளிகள் (அழகானவை / அழகானது)
5. குழந்தை (அழுதது / அழுதன)
6. பாடம் (இலகுவானது / இலகுவானவை)
7. அவர்கள் (பாடினான் / பாடினார்கள்)
8. பாத்திரம் (உடைந்தன / உடைந்தது)
9. மரம் (வளர்ந்தது / வளர்ந்தனர்)
10. மாடுகள் (மேய்ந்தன / மேயந்தது)

## உங்கள் அழகான கையெழுத்துக்கு

பிள்ளைகளே; உங்கள் எழுத்துக்கள் அழகாகவும் உறுப்பமைவாகவும் எழுதப்படுவதன் மூலமே நீங்கள் எழுதும் கட்டுரைகள், கவிதைகள் கதைகள் என்பவற்றை ஏனையோர் வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டலாம். பரீட்சையில் கூடிய மதிப்பெண்களைப் பெறலாம். நீங்கள் அழகானதும் உறுப்பமைவானதுமான எழுத்துக்களை எழுதவேண்டுமாயின் உங்கள் உடலும் உளமும் ஒரு மனப்பட்டு செயலாற்ற வேண்டும். எழுதும் போது கைமணிக்கட்டும், முழங்கையும் சரியான நிலையில் இருக்கத் தக்கதாக பேனா அல்லது எழுது கருவியைப் பிடித்துக் கொள்ள வேண்டும்.


கண்கள் உங்கள் கை எழுதும்போது என்ன செய்கிறது என்பதைப் பின்பற்றி நகரவேண்டும். உங்கள் கையெழுத்தை மேம்படுத்தும் பொதுவான வழிமுறைகளாவன

- சரியான முறையில் எழுதுகோலைப் பிடித்தால் எழுதும் எழுத்துக்கள் சுலபமாக நன்கு அமையும். பேனாவையோ பென்சிலையோ சுட்டு விரலுக்கும் பெருவிலருக்கு இடையிலுள்ள தளத்தில் சற்று சாய்வாக வைத்த நிலையில் பெருவிரலினாலும் சுட்டு விரல் மற்றும் ஏனைய விரல்களாலும் இறுக்கமாகப் பற்றிப் படித்துக்கொள்ள வேண்டும்.
- நேராக ஒரே கோட்டில் சீராக அமையக்கூடியதாக எழுத வேண்டும். கூடுமானவரையில் எழுத்துக்கள் யாவும் ஒரே அளவுடையனவாயிருத்தல் சிறப்புக்குரியது.
- ஓரளவு சுமாரான வேகத்தில் எழுதவேண்டும்.அதனை விடுத்து வேகமாக அவசரப்பட்டு எழுதுவீர்களேயாயின் அது பலதவறுகள் உண்டாக்கும் விதத்தில் முடிவடையும்.
- எழுதும் வேளையில் பேனாவையோ அன்றிப் பென்சிலையோ ஓரளவு இறுக்கமாகப் பற்றிப்பிடித்து எழுதும் தாளின் மேல் சாதாரண அழுத்தத்தைப் பிரயோகித்து எழுத வேண்டும் கடுமையாக அழுத்தி எழுதவேண்டாம்.
- எழுது தாளில் இடமிருந்து வலமாக உயிர்க் குறிகளை அனுசரித்து எழுதவேண்டும். இந்த வழி முறைகளைப் பின்பற்றி எழுத்தாற்றலை வளர்ப்பீர்களாயின் உங்களது எழுத்து வடிவம் அழகுறும்.உங்கள் மனமும் பரவசமடையும்.





## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



## வெந்தயத்தின் பயன்கள்

வெந்தயத்தை இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைத்து, காலையில் மையாக அரைத்து வைத்துக் கொண்டு அதனோடு சிறிது தயிர் சேர்த்து நன்கு குழைத்து தலை முடியிலும் தலையின் மேற்புறத்திலும் பூசி நன்றாக மசாஜ் செய்து விட்டு 20 நிமிடங்களுக்குப் பிறகு தலைக்கு குளிக்க பொடுகுகள் போகும்.

வெந்தயத்தை இரவு ஊற வைத்து காலையில் முகத்தில் தடவி வைத்திருந்து குளித்து வருவதால் முகத்தில் உள்ள பருக்கள், கரும் புள்ளிகள், தழும்புகள் மறைந்து போகும்.

வெந்தயத்தோடு தேன் சேர்த்து முகப்பருக்களின் மீது பூசி வைத்திருந்து இளஞ்சூடான நீரில் கழுவி வர முகப்பருக்கள் குணமாகும்.

வெந்தயம் ஒரு கைப்பிடி அளவு எடுத்து அதனோடு 4 கோப்பை நீர் ஊற்றி அடுப்பிலிட்டு 15 நிமிடங்கள் காய்ச்சி எடுத்து ஆற வைத்து வடிகட்டி வைத்துக் கொண்டு தினமும் 2 முறை முகத்தைக் கழுவுவதற்கு உபயோகித்தால் முகத்துக்கு நல்ல வனப்பையும், சுருக்கங்களை நீக்கி நல்ல மென்மையையும் பொன் வண்ணத்தையும் தரும்.

## அறிவித்தல்

2012 .01 .07 ஆம் திகதி நொத்தாரிஸ் ச. இளங்கோவன் அத்தாட்சிப்படுத்திய 7004 இலக்க நன்கொடைச் சாதனத்தால் இல.70, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த டி 514/20 காணிப்பதிவைக் கொண்ட " இடையன் தறையும் புதுப்புலமும் மேற்குக் குச்சமும்" என்ற பெயருடைய காணி எமக்கு சொந்தமானது. இதனை வேறு எவராவது மோசடியாக கை மாற்றினால் அவர்களிடம் கைமாற்றிப் பெறுபவர்களிற்கு நாங்கள் பொறுப்பல்ல.

இரத்தினராசா இராகுலன்

## யாழ்ப்பாணம் மாநகரசபை
## வானங்கள் திருத்தம் சேவிஸ் செய்தல் மற்றும் மின்னியல் வேலைகளுக்கான கூறுவிலை கோரல்


மாநகரசபையின் வாகனங்களுக்கு கீழ்க்காணும் வேலைகளை செய்வதற்குரிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இதற்கான கூறுவிலை படிவங்களை மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் 04.12.2017 ஆம் திகதி ந.ப 12மணி வரை பெற்று பூர்த்தி செய்து 05.12.2017 ஆம் திகதிக்கு முன்னதாக ஆணையாளர் மாநகரசபை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அல்லது இதற்கென மாநகர சபையிலுள்ள கூறுவிலை பெட்டியினுள் சேர்ப்பித்தல் வேண்டும். மேலதிக விவரங்களை மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

**வேலை விவரங்கள் வருமாறு**

01. மின்னியல் வேலைகள்
02. இன்ஜெக்ரர் பம் சேவிஸ் செய்தல்
03. ரேடியேற்றர் திருத்தம் செய்தல்
04. வாகனங்களை சேவிஸ் செய்தல்
05. ரயர், ரீயூப், ஒட்டும் வேலைகள் ரயர், ரீயூப் மாற்றம் செய்தல் வேலைகள்.
06. ரயர்களுக்கு காற்று அடித்தல்
07. கடைச்சல் இயந்திரவேலைகள்
08. வீல் அலைமற் வேலைகள்
09. E.C.U Scanning திருத்த வேலைகள்
10. வாகனங்களுக்கான வில்லுத்தகடு திருத்தம்
11. வாகனங்களுக்கான ரிங்கரிங் பெயின்ரிங் வேலை
12. வாகனங்களுக்காக A/C திருத்தம் செய்தல்

**இ.த.ஜெயசீலன்**
**ஆணையாளர்**
**மாநகரசபை**
**யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்



## பிலிப் மரியதாஸ்

பருத்தித்துறை வீதி, நெல்லியடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப் மரியதாஸ் 24.11.2017 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோபர் பிலிப், காலஞ்சென்ற பிலிப் அந்தோனிக்கம் ஆகியோரின் பாசமிகு மகனும் இந்திராகாந்தியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முருகேசு மகேஸ்வரன், மகேஸ்வரன் கமலாவதி ஆகியோரின் பாசமிகு மருமகனும் எட்வேட் ஜக்ஸன் (e Mobile & Lapmart), மேரி சோபியா (Technical Assistant ECB), அன்ரன் தொம்சன் (e Mobile & Lapmart) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கஜீதா எட்வேட் ஜக்ஸனின் (கிராம அலுவலர்) பாசமிகு மாமனும் எட்வினா எட்வேட் ஜதீஸனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, வில்லிமலர் , அல்பிறேட், வேதநாயகம் மற்றும் கபிரியேல் ஆகியோரின் உடன்பிறந்த சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.11.2017) சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப.2.30 மணியளவில் கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

### வான் விற்பனைக்கு

மாருதி சுசுக்கி வான் (OMINI)
விற்பனைக் கு உண்டு.
077 706 6487

### தேவை

திருநெல்வேலி பல்கலைக்கழகத்திற்கு அருகில் இயங்கும் ஒரு கல்வி நிறுவனத்திற்கு கணினி அறிவுடைய பெண் ஊழியர் தேவை.
077 386 7458

### பெண் பணியாளர்கள் தேவை

மிக்சர் கொம்பனிக்கு பெண் பணியாளர்கள் உடன்தேவை.
**தொடர்பு - 076 583 0277**
**077 469 2649**

### வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் பார்சல் சேவிஸ் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை **தொடர்பு - 071 766 7715**
**தங்குமிடம், உணவு இலவசம்**
**ஆண்கள் மட்டும்.**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**அன்னைமடியில்**
**14.04.1957**

**ஆண்டவன் அடியில்**
**25.10.2017**



**அமரர்**

## சறோஜா (சாரதா) சந்திரலிங்கம்

**திதி - ஷஷ்டி**

கடந்த 25.10.2017 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் துயர்வுச்செய்தி அறிந்து நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் இரங்கற்செய்தி தெரிவித்தவர்களுக்கும் அன்னாரது இறுதிக்கிரியையின் போதும் இறுதி யாத்திரையின் போது நேரடியாகக் கலந்து எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் எமக்கு உறுதுணையாக நின்று உதவிய உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லூர் இல 527 நாவலர் வீதியில் அமைந்துள்ள சொர்ணாம்பிகை மண்டபத்தில் (T.C.T Hall) நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 101, ஓட்டுமடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2018

**நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை / சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை நடத்துதல்**

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த. நெளுக்குளம் மாட்டிறைச்சிக் கடை, மீன் கடை, கோழி இறைச்சிக்கடை/ சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை, மீன்கடை போன்றவற்றை 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடத்துவதற்கான கேள்விகள் 2017.12.14ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2017.12.14ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **"செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி / உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி / உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2017.12.14ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடைக்கு மாதாந்தம் ரூபா 2,000/= வாடகையாகவும், சாளம்பைக் குளம் மாட்டிறைச்சிக்கடைக்கு மாதாந்தம் ரூபா 1,500/= வாடகையாகவும் செலுத்தப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகை, மாதாந்த வாடகை என்பவற்றுடன் அரசாங்கத்தால் அவ்வப்போது அறவிடப்படும் வரி என்பவற்றை செலுத்துதல் வேண்டும். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விவரம் | ஒருவருடத்திற்குரிய குறைந்த கேள்வித் தொகை 11% VAT, 2% NBT நீங்கலாக | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் படிவக் கட்டணம் 11% VAT, 2% NBT நீங்கலாக |
|---|---|---|---|
| நெளுக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 481,000.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் மீன்கடை | 36,000.00 | 25,000.00 | 1,000.00 |
| நெளுக்குளம் கோழிறைச்சிக் கடை | 36,000.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மாட்டிறைச்சிக்கடை | 371,100.00 | 25,000.00 | 1,000.00 |
| சாளம்பைக்குளம் மீன்கடை | 30,000.00 | 25,000.00 | 1,000.00 |
| தோணிக்கல் மீன்கடை( 6 கடைகள்) | 18000.00 (ஒரு கடை) | 25,000.00 | 1,000.00 |

நேரியகுளம் வீதி,
நெளுக்குளம்,
வவுனியா
25.11.2017

சுகந்தி கிஷோர்
செயலாளர்,
வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை.

வெள்ளிக்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 620 வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 24.11.2017
வெற்றி இலக்கங்கள்
19 39 43 64 F
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,855,944/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# பொதுக்கூட்டம் பிற்போடப்படுதல்

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

25.11.2017 அன்று நடைபெறவிருந்த யா / ஸ்கந்தவ ரோதயக் கல்லூரி பழைய மாணவர் தாய்ச்சங்க பொதுக் கூட்டமானது தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

கூட்டத் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**செ.பிரதாப்**
**செயலாளர், பழைய மாணவர் தாய்ச்சங்கம்**
**ஸ்கந்தவரோதயக் கல்லூரி, கந்தரோடை, சுன்னாகம்.**

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மேரிதிரேசா தாமோதரம் டானியல்



மாகியப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா தாமோதரம் டானியல் (24.11.2017) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்து சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற தாமோதரம் டானியலின் அன்புமனைவியும் ஞானரட்ணம் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, சண்டிலிப்பாய்), ஞானரஞ்சிதம் (பிரதேச வைத்தியசாலை சங்கானை), ஞானானந்தம், ஞானக்குமார், ஞானசீலன் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஸ்ரீஸ்கந்தராஜா, சகுந்தலாதேவி, அருள்நாயகி, புஸ்பலதா ஆகியோரின் அன்புமாமியும் கிறிஸ்ரிக்கிருசாந், டனிடில்சனா, தொபின்ஸ்காந், ராஜ்குமார், ரொசாந், நிற்ஷானா, அனற்பெல்சியா, ஆன்டினூசியா, கேருஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (25.11.2017) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் மாகியம்பதி புனித செபஸ்ரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித செபஸ்ரியார் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## திருமதி பாரதி (பரா) மாலசுதன்

*(ஆசிரியை, யா\பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்)*



வட்டுவடக்கு, சித்தன் கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. பாரதி(பரா) மாலசுதன் (ஆசிரியை, யா\பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்) கடந்த (23.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னபூரணம் தம்பதியரின் அன்புப் புதல்வியும், சிவபாலன் புஸ்பமாலா தம்பதியரின் மருமகளும் மாலசுதனின் (லண்டன்) பாசமிகு மனைவியும், சுருதிகா (மாணவி, யாழ்ப்பாணக்கல்லூரி), சுருஜன் (மாணவன்,யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும், ரேவதி(லண்டன்), முகுந்தன்(அதிபர், யா\சங்கானைஸ்தானஅ.மி.த.க.பாடசாலை), முகிலன்( லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தருகரன்(லண்டன்), அருந்ததி(ஆசிரியை, யா\சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), கஜேந்தினி (லண்டன்), ஜனகன் (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேசசெயலகம்), பாலசுவர்ணா (சமுர்த்தி உத்தியோகத்தர், சங்கானை பிரதேச செயலகம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டச்சுறோட், வட்டு. வடக்கு,**
**சித்தங்கேணி,**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# உடலில் குருதியின் அளவை அதிகரிக்கும் அற்புத உணவுகள்

உடலியக்கம் சீராக நடைபெறுவதற்கு குருதி மிகவும் முக்கிய மானது. ஏனெனில் குருதி தான் உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் ஒட்சிசனை கொண்டு செல்கிறது. உடலில் குருதியின் அளவு குறைந்தால், அனீமியா என்னும் குருதிச் சோகை ஏற்படும்.

குறிப்பாக குருதிச் சோகை ஆண்களை விட பெண்களுக்கு தான் (காரணம் கர்ப்பம் மற்றும் மாதவிடாய் சுழற்சி) அதிகம் ஏற்படும். குருதிச் சோகையினால் பாதிக்கப்பட்டால் நகங்கள் மற்றும் சருமம் வெளுத்துப் போய் இருப்பதோடு, அதிகப்படியான சோர்வு, குருதி அழுத்த குறைவு, தலைவலி, மூச்சுத்திணறல், கவனச்சிதறல் போன்ற பல அறிகுறிகள் தென்படும்.

குருதிச் சோகையானது இரும்புச்சத்துக் குறைபாடு, போலிக் ஆசிட் குறைபாடு, விற்றமின் 'பி'12 குறைபாடு போன்றவற்றால் ஏற்படும். மேலும் இது முதிர்வடைந்தால், நரம்பு பாதிப்பு ஏற்படும். ஆகவே உடலில் உள்ள குருதியின் அளவை பராமரிக்க வேண்டியது அவசியம். இங்கு உடலில் உள்ள குருதியின் அளவை அதிகரிக்க உதவும் உணவுப் பொருள்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

**கறுப்பு எள்ளு** : இதில் இரும்புச்சத்து அதிகம் உள்ளது, இதனை உணவின் மேல் தூர்வி சாப்பிடலாம் அல்லது எள்ளு மிட்டாய் வாங்கியும் சாப்பிடலாம். இதனால் குருதியின் அளவை அதிகரிக்க முடியும்.

**பேரிச்சம் பழம்** : பேரிச்சம் பழத்தில் இரும்புச்சத்து, விற்றமின் 'சி', விற்றமின் 'பி' காம்ப்ளக்ஸ் மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்டுகள் அதிகம் உள்ளன. எனவே தினமும் இரவில் 2/3 பேரிச்சம் பழத்தை பாலில் கலந்து சாப்பிட்டு வருவது நல்லது.

**அப்பிள்** : அப்பிளில் கூட இரும்புச்சத்து உள்ளது. அதுமட்டுமின்றி, விற்றமின்கள், கனிமச்சத்துக்கள் போன்றவையும் அதிகம் உள்ளது. அத்தகைய அப்பிளை சாப்பிட்டு வந்தால், குருதிச் சோகை நீங்கும்.

**வாழைப்பழம்** : வாழைப்பழத்தில் பொட்டாசியம் மட்டுமின்றி, இரும்புச்சத்தும் அதிகம் உள்ளது. தினமும் ஒரு வாழைப்பழத்தை சாப்பிடுவதால் குருதிச் சோகை மட்டுமின்றி, வேறு சில நன்மைகளும் கிடைக்கும்.

**உலர் திராட்சை** : உலர் திராட்சையில் இரும்புச்சத்து, கல்சியம், பொட்டாசியம் மற்றும் இதர ஊட்டச்சத்துக்கள் உள்ளன. ஆகவே இதனை தினமும் ஸ்நாக்ஸ் நேரத்தில் சாப்பிட்டு வந்தால், உடலில் குருதியின் அளவை அதிகரிக்கலாம்.

**பீற்றூட்** : பீற்றூட் சாப்பிட்டால், உடலில் குருதி ஊறும் என்று சொல்வார்கள். ஏனெனில் பீற்றூட்டில் போலிக் ஆசிட் மற்றும் பொட்டாசியம் அதிகம் உள்ளது. மேலும் நார்ச்சத்தும் இதில் உள்ளது. எனவே பீற்றூட்டை வாரம் ஒருமுறை தவறாமல் சாப்பிட்டு வந்தால், அதில் உள்ள ஊட்டச்சத்துக்கள் கிடைத்து, உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

**வெல்லம்** : வெல்லத்தில் இரும்புச்சத்து அதிகம் இருப்பதால், சக்கரைக்கு பதிலாக, தேநீர் போன்ற பானங்களில் வெல்லத்தை சேர்த்துக் கலந்து குடித்து வாருங்கள்.

**தேன்** : தேனில் இரும்புச்சத்து மற்றும் இதர விற்றமின்கள் மற்றும் கனிமச்சத்துக்கள் இருக்கிறது. உடலில் குருதி அணுக்களின் அளவை அதிகரிக்க வேண்டுமெனில், எலுமிச்சை ஜூஸில் தேன் சேர்த்து கலந்து, குடித்து வாருங்கள். இதனால் நல்ல பயன் கிடைக்கும்.

**நெல்லிக்காய்** : தினமும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால், உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேறுவதோடு, உடலில் குருதியின் அளவும் அதிகரிக்கும்.

**பார்ஸ்லி** : பார்ஸ்லியில் இரும்புச்சத்து மற்றும் போலிக் அசிட் வழமையாக நிறைந்துள்ளது. குருதிச் சோகை உள்ளவர்களுக்கு இது மிகவும் சிறப்பான உணவுப் பொருள். இதில் விற்றமின் 'சி' மற்றும் இதர விற்றமின்கள் நிறைந்திருப்பதால், இவை குருதி இரும்புச்சத்தை உறிஞ்ச உதவும்.

**சிட்ரஸ் பழங்கள்** : சிட்ரஸ் பழங்களான தோடம் பழம் , அன்னாசி, ஸ்ட்ராபெர்ரி மற்றும் எலுமிச்சையில், இரும்புச்சத்தை உறிஞ்ச உதவும் விற்றமின் 'சி' நிறைவாக உள்ளது. எனவே இவற்றை அவ்வப்போது உட்கொண்டு வந்தால், குருதியின் அளவு அதிகரித்து, குருதிச் சோகையில் இருந்து விடுபட லாம்.

**மாதுளை** : மாதுளையில் இரும்புச்சத்து, புரதம் மற்றும் கல்சியம் அதிகம் உள்ளது. மேலும் இதில் மற்ற கனிமச்சத்துக்களும், விற்றமின்களும் நிறைந்துள்ளது. ஆகவே இவற்றை அன்றாடம் உட்கொண்டு வந்தால், ஈமோகுளோபின் அளவு அதிகரித்து, குருததிச் சோகை குணமாகும்.

**தக்காளி** : தக்காளியில் விற்றமின் 'சி' மற்றும் லைகோபைன் போன்றவை அதிகம் நிறைந்துள்ளன. இரும்புச்சத்து நிறைந்த உணவை உட்கொண்டால் மட்டும் குருதியின் அளவை அதிகரிக்க முடியாது. இரும்புச்சத்தை உறிஞ்சும் விற்றமின் 'சி' நிறைந்த உணவையும் சேர்த்து வந்தால் தான் குருதியின் அளவு அதிகரிக்க முடியும்.

**பச்சை இலைக் காய்கறிகள்** : பச்சை இலைக் காய்கறிகளான பசலை கீரை, அரைக்கீரை, சிறு கீரை போன்றவற்றை உணவுக் கட்டுப்பாட்டில் சேர்த்து வருவதன் மூலம், உடலில் ஈமோகுளோபின் அளவை அதிகரித்து, குருதிச் சோகையில் இருந்து நிவாரணம் பெறலாம்.


கோடிபதி சனிதா
சீட்டிழுப்பு வாரம்: 219
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 24.11.2017
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 76,104,020/-
R 01 05 09 37
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 86
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2017.11.24
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,323,620/-
வெற்றி இலக்கங்கள்
08 44 62 73 X
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 24.11.2017
வெற்றி வாரம் 2215
வர்ணம் சிவப்பு
கும்பம்
வெற்றி இலக்கங்கள் 09 14 39 61
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,288,560/=
2017.11.26 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

# மரண அறிவித்தல்

## லயன் செல்லத்துரை மகாதேவா (J.P)



கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லயன் செல்லத்துரை மகாதேவா (J.P) நேற்று (24.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சீவநாயகம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற லயன் பூமாதேவியின் அன்புக்கணவரும் ம. பிருந்தாவன் (சுதன், லண்டன்), திருமதி வி. பிரியதர்ஷினி (லண்டன்), லயன் ம. பிரிதிவிராஜா (ராஜன், லண்டன்), ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி பி. சிவனேஸ்வரி (லண்டன்), ச.விஷ்னுகாந்தன் (லண்டன்), திருமதி பி.பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் பி.சர்விகா, பி. கோவரசன், வி. ஜஸ்வீனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற்வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தரோடை, சுன்னாகம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

## தேசியத் தலைவருக்கு...

பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. அதன் பின்னர் தாயக தேசத்தில், பாதுகாப்புத் தரப்பின் கண்ணில் மண்ணைத் தூவி இரகசியமான இடத்தில் கொண்டாடப்பட்டு வந்தது. ஆனால் புலம்பெயர் தேசங்களில் மிகப் பெரும் எடுப்பில் கொண்டாடப்பட்டு வந்தது.

இந்த ஆண்டு, தாயக மண்ணிலும், புலம்பெயர் தேசங்களிலும் பிறந்த நாள் கொண்டாடப்படவுள்ளது. நள்ளிரவு 12 மணிக்கு கேக் வெட்டி, பட்டாசு கொழுத்தி இந்தக் கொண்டாட்டம் ஆரம்பிக்கும். (5)

## கூட்டு அரசு...

டன் முறித்துக்கொள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உயர்மட்டத் தலைவர்கள் இரகசியமாகத் தீர்மானித்திருக்கின்றார்கள் என்றுகூடச் சில தகவல்கள் கூறுகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முக்கிய தலைவர்கள் பலர் அரசிலிருந்து சுதந்திரக் கட்சி வெளியேற வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்கள். இது தொடர்பில் முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும், அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

"ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மீதும் கட்சியின் தலைவரான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மீதும் கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவ்வாறானவர்களுடன் (ஐ.தே.க) இணைந்து தொடர்ந்து ஆட்சியை நடத்துவது அர்த்தமற்றது" எனச் சாட்டினார் மைத்திரிபால.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க இதற்குக் காட்டமாகப் பதிலளித்தார். "மோசடிக்கார ராஜபக்சக்களுடன் இணைந்து ஆட்சியை நடத்துவதைவிட ஐக்கிய தேசியக் கட்சி எவ்வளவோ மேலானது" எனத் தெரிவித்தார் அவர்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில், "பிணைமுறி மோசடி விசாரணைகளைகளால் ஐக்கிய தேசியக் கட்சியைப் பார்த்து நாடே சிரிக்கின்றது" என்று கடுந்தொனியில் தெரிவித்துள்ளார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா.

இந்தக் கூட்டம் முடிந்த பின்னர் நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தியுள்ள சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடனான கூட்டை எதிர்வரும் டிசெம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் நீடிக்கக்கூடாதென இறுக்கமான முடிவுக்கு வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவே இறுதி முடிவை எடுப்பவராக இருப்பார் என்பதால் முடிவு எந்த வகையில் இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பது சிரமம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-5)

## ஐ.தே.க...

ரக் கட்சியையும், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடுமையாகக் கடந்த சில தினங்களாக விமர்சித்து வந்த நிலையில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசியக் கட்சியை நேற்றுப் பகிரங்கமாக விமர்சித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி, மகிந்த அணியுடன் இணைவதற்காகத் தொடர் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. அரச தலைவரும் அதற்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளார். மறுபுறத்தில், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரச தலைவர் ஆணைக்குழுவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். இதன் அடிப்படையில் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் எதிராகவும் ஐக்கிய தேசியக் கட்சியினர் கடும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா வேண்டுமென்றே தேர்தலைத் தாமதம் செய்துள்ளதால் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்பிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே, நிக்கவரட்டியவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அரசதலைவர் ஐக்கிய தேசியக் கட்சி மீது விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

அந்த நிகழ்வில் அரசதலைவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊழல் மோசடிக்கு எதிராகத் தீர்மானங்களை மேற்கொள்கின்றபோது அதற்கெதிராக என் மீது குற்றம் சுமத்தப்படுமானால் எனது பதவிகளைத் துறந்து மக்களுடன் இணைந்து அந்தப் போராட்டத்தை முன்கொண்டு செல்லத் தயாராக இருக்கின்றேன்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசு தவறிழைத்த காரணத்தினால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர் 2015ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வியடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ளவர்களும் அரசில் இருந்து கொண்டு அதே தவறுகளைச் செய்வார்களானால் மக்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஏற்கனவே இருந்த ஊழல் ஆட்சியை மாற்றி மக்கள் புதிய அரசை அதிகாரத்துக்குக் கொண்டு வந்தது, சரியான ஆட்சியை முன்னெடுப்பதற்காகத்தான். மக்களின் இந்த எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்காகச் சரியான திசையில் பயணிக்க அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

பிரிவு இலகுவானது. இணைந்திருப்பது கடினமானது. அரசியல் குழந்தைகளாக இல்லாமல் அறிவார்ந்த, முதிர்ச்சியான அரசியல்வாதிகளாக பிளவுகளின்றி நாட்டுக்காக முன்னோக்கிச் செல்வது அனைவரினதும் பொறுப்பாகும். அரசியல் அதிகாரம் மற்றும் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படாது நாட்டையும் மக்களையும் நேசிக்கும் அரசியல்வாதிகளாக அனைவரும் இருக்க வேண்டும்.

யார் எதைச் சொன்னாலும் எனது 50 ஆண்டு கால அரசியல் வாழ்க்கையில் எப்போதும் தூய்மையான அரசியல் கலாசாரத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டேன். இந்த நீண்ட கால அரசியல் பயணத்தில் பல்வேறு அனுபவங்களுக்கு மத்தியில் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மிகவும் பொறுமையுடனும் சகிப்புத் தன்மையுடனும் செயற்பட்டேன். நான் பயில்வதற்காக அரசியலுக்கு வரவில்லை.

உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்பட்டது தொடர்பாகக் குற்றச்சாட்டுக்கள் எமது கட்சி மீது சுமத்தப்படுகின்றது. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் தேவையாக இருப்பது விரைவில் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதுதான். இதற்குத் தேவையான அனைத்து அர்ப்பணிப்புகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

19ஆம் அரசமைப்புத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் 47 ஆசனங்கள் மட்டுமே இருந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 142 வாக்குகளும் இதற்காக வழங்கப்பட்டது - என்றார். (உ-5)

## புதிய அரசமைப்பு...

கனி வாகீஸ்வர உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணல், இன நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களை மையப்படுத்தியே உள்நாட்டுத் தேவைக்கேற்ப புதிய அரசமைப்புத் தயாரிப்புப் பணி இடம்பெறுகின்றது.

அரசமைப்புச் சபையில், புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தவே புதிய அரசமைப்புத் தேவையாகவுள்ளது. அதன் அடிப்படையிலேயே செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்தில் இந்தியாவின் அழுத்தம் உள்ளது எனக் கூறப்படுவதில் எவ்வித உண்மையும் இல்லை - என்றார். (உ-5)

## கட்சித்...

வாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். அந்தக் கூட்டத்தலேயே மகிந்த தேசப்பிரிய இந்த யோசனையை முன்வைத்தார்.

கூட்டம் ஆரம்பித்த போது ஜே.வி.பி. தலைவரான அநுரகுமரா, "எந்தவிதமான தேர்தல் முடிவும் வரமுடியும். ஆனால் வெல்லவேண்டும் என்பதற்காகத் தேர்தலை தாமதப்படுத்துவது நேர்த்தியான அரசியல் செயற்பாடு அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பிலும் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மிகக் கடுமையான கருத்துக்களை முன்வைத்தார். ஒரு கட்டத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே தேர்தலைத் தாமதப்படுத்தும் செயற்பாட்டின் பின்னணியில் இருக்கின்றது என்று நேரடியாகவே குற்றஞ்சாட்டினார்.

சட்ட மா அதிபர், தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்து விளக்கங்களை வழங்கியதோடு எதிர்வரும் 4ஆம் திகதி வரையில் வழக்குகள் மீதான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு முன்னதாக அதனை எடுப்பதாயின் ஆகக் குறைந்தது எதிர்வரும் திங்கட்கிழமையாவது அந்த வழக்குகளுக்கு மாற்றாக மனுத்தாக்கல் செய்யப்படவேண்டும். அந்த வழக்கை 30ஆம் திகதிக்கு முன்னகர்த்துவது குறித்து முயற்சிக்க முடியும் என்றுள்ளார்.

"வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்குரிய முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. நீதிமன்றம் உத்தியோகபூர்வமாக எனக்கு எந்த விதமான அறிவித்தல்களையும் செய்யவில்லை. அந்தச் செயற்பாடுகளை இடைநிறுத்த வேண்டிய அவசியம் எனக்கு இல்லை" என்றார் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய.

"பிரச்சினைக்குரிய பகுதிகள் தவிர்ந்து ஏனைய இடங்களில் தேர்தலை நடத்த முடியும். குறிப்பாகப் புதிதாக எல்லையிடப்பட்ட சபைகள் உட்பட மொத்தமாக 341 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. அவற்றில் 133 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதில் எந்த விதமான பிரச்சினைகளும் இல்லையென்று கருதுகின்றேன். அவற்றுக்கான தேர்தலை நடத்தவது குறித்து தேர்தல் ஆணைக்குழு கூடி முடிவொன்றை எடுக்க முடியும்" என்றும் அவர் தெரிவித்தார்.

எனினும் துண்டுதுண்டாகத் தேர்தலை நடத்துவதா? இல்லை நீதிமன்றத்தில் மற்றுமொரு மனுத்தாக்கல்செய்து வழக்குவிசாரணைகளை முன்னகர்த்துவதா இல்லை வழக்குகளை மீளப்பெற்றுக் கொண்டு தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதா? என்பது தொடர்பில் எந்தவிதமான இணக்கப்பாடொன்றும் கட்சித் தலைவர்களிடத்தில் ஏற்பட்டிருக்காத நிலையில் கூட்டம் இரவு 7 மணிக்கு நிறைவடைந்துள்ளது. (உ-5,31)

## ஆவா...

யாழ்ப்பாணம் கொக்குவில் பொற்பதிப் பகுதியைச் சேர்ந்த அந்தோணி மேரிக்சன் ஜூட் (வயது - 18). இவர் ஆவா குழுவைச் சேர்ந்த முக்கிய நபர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

"எமக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்தநபர் நேற்றுப் பிற்பகல் கைது செய்யப்பட்டார். அவரிடம் விசாரணைகள் நடத்தப்படுகின்றன. கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கோண்டாவில் பகுதியில் உணவகம் உடைக்கப்பட்டமை, முடமாவடிப் பகுதியில் வான் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன சேதமாக்கப்பட்டு வீடு உடைக்கப்பட்டமை, கல்வியங்காட்டுப் பகுதியில் வீடொன்றின் மீது பெற்றோல் குண்டு வீசி வீட்டையும் உடைத்துச் சேதப்படுத்திமை, மற்றும் ஆவா குழுவில் இருந்து பிரிந்து சென்ற தனு ராக்ஸ் குழுவைச் சேர்ந்த மானிப்பாயில் வசிக்கும் தனுவின் வீட்டினை உடைத்தமை உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்களில் இவர் நேரடியாகப் பங்கெடுத்துள்ளார் என்பது விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது" என்றார் பொறுப்பதிகாரி.

விசாரணைகளின் பின்னர் அவர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (உ-21,37)

## பௌத்த..

கட்டமைப்பில் ஒவ்வொரு மட்டத்திலும் அதிகாரங்கள் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அதிகாரப் பகிர்வு கிட்டத்தட்ட கூட்டாட்சிக்கு ஒப்பானதாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையில், நாட்டின் கட்டமைப்பில் அதிகாரங்கள் பகிரப்படுவதை எதற்காக மகாநாயக்க தேரர்கள் எதிர்க்கவேண்டும்" - என்றார் அவர். (உ-5)

## குளத்தில்...

பானுரேகா அடுத்தாண்டு ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் தோற்றவுள்ளார்.

"நாங்கள் கரையில் நின்று நீர் எற்றி விளையாடினோம். அவர்கள் இருவரும் திடீரென ஆழமான பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டனர். அவர்களைக் கரை வருமாறு கூக்குரலிட்டோம். பயந்து போன நாங்கள் ஓடிச் சென்று அருகில் இருந்தவர்களிடம் தகவல் சொன்னோம்." என்று உயிரிழந்தவர்களுடன் குளிக்கச் சென்ற சிறுவன் ஒருவன் கூறினான்.

குளத்தில் மூழ்கியவர்கள் அயலவர்களின் உதவியுடன் மீட்கப்பட்டனர். மாமடுவ பிரதேச மருத்துவனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது மருத்துமனைக்கு மாற்றப்பட்டனர். கொண்டுசெல்லும் வழியிலேயே அவர்களின் உயிர் பிரிந்து விட்டது என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர். சடலங்கள் வவுனியா பொது மருத்துவனையில் வைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## சிங்கள...

மன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். அதற்கு உதாரணமாக குடும்பக் கதை ஒன்றையும் சிங்கள மக்களுக்குச் சிங்களத்தில் எடுத்துக் கூறினார்.

புதிய அரசமைப்புக்கு ஆதரவான பரப்புரை மாத்தறை நகரில் நேற்று நடைபெற்றது. பெருமெடுப்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் சுமார் ஆயிரம் பேர்வரையிலானோர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, நவசமசமவாயக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண உள்ளிட்ட பலர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சிங்கள மொழியில் உரையாற்றினார். கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது:

அதிகாரப் பகிர்வு தொடர்பில் இலகுவாக விளங்கப்படுத்துகின்றேன். ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, அவர்களது மூன்று மகள்கள், ஒரு மகன் இருக்கின்றனர். பாடசாலை விடுமுறை வருகின்றது. சுற்றுலா செல்லத் திட்டமிடுகின்றனர். மகன், தான் மலையேற வேண்டும். மலைநாட்டுப் பகுதிக்குச் செல்லவேண்டும் என்று சொல்கின்றான். மகள்கள், இல்லை கடற்கரைக்குச் செல்லவேண்டும் என்று கூறுகின்றனர். இரு தரப்பினரையும் பெற்றோரால் சமாதானப்படுத்த முடியவில்லை. இறுதியில் வாக்கெடுப்புக்குச் செல்கின்றனர். மூன்று மகள்களும் வெற்றி பெறுகின்றனர்.

அடுத்த விடுமுறைக்கு மீண்டும் சுற்றுலா செல்லத் தயாராகின்றனர். கடந்த தடவை கடற்கரைக்குச் சென்றமையினால் இந்தத் தடவை மலை நாட்டுக்கு செல்ல மகன் கேட்கின்றான். மகள்கள் அதை மறுக்கின்றனர். இந்த முறையும் கடற்கரைக்குத்தான் செல்லவேண்டும் என்கின்றனர். பெற்றோர் வேறுவழியில்லாமல் வாக்கெடுப்பு நடத்துகின்றனர். இம்முறையும் மகள்கள்தான் வெற்றி பெறுகின்றனர்.

மீண்டும் அடுத்த விடுமுறைக்குச் சுற்றுலா செல்லத் திட்டமிடும்போது இதே பிரச்சினை வருகின்றது. பெற்றோர் வாக்கெடுப்புக்குச் சென்றால்தான் மீண்டும் தோற்கும் நிலமையே ஏற்படும் என்பதை உணர்ந்த மகன், வீட்டில் சாப்பிடாமல் இருக்கின்றான். அதுதான் உணவு ஒறுப்புப் போராட்டம். பின்னர் வீட்டில் உள்ள பொருள்களை உடைக்கின்றான். அதுதான் வன்முறை.

நிரந்தர பெரும்பான்மையும், நிரந்தரச் சிறுபான்மையும் இருக்கும்போது மக்களாட்சி என்ற பெயரில் வாக்கெடுப்பு நடத்தினால் இப்படித்தான் நடக்கும்.

ஒவ்வொரு பிரதேசத்திலும் இருக்கின்ற மக்கள் கூட்டத்தினருக்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுத்தால் எந்தப் பிரச்சினையும் வராது. அதிகாரங்கள் பகிரப்படுவது தொடர்பில் பயப்படத் தேவையில்லை என்றார்.

அண்மையில் வடமராட்சியில் தமிழ் அரசுக் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏக்கிய ராஜ்ஜிய என்கிற சொல்லைப் பற்றி விளக்க தோடம்பழக் கதை ஒன்றைச் சொல்லியிருந்தார். (உ-5)





## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், நவ. 25
வவுனியா நியூ பேட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு ஏழு வீரர்கள் பங்குபற்றும் 6 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இரண்டாம் சுற்று ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் இன்று இடம்பெறும் முதலாவது ஆட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக 'பி' அணியை எதிர்த்து சீர்திருத்தம் விளையாட்டுக் கழக அணியும், யங்ஸ்ரரர் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து றோயல் யுத் விளையாட்டுக் கழக அணியும், யுனி பைட் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பிரண்ட்ஸ் ஸ்பைடர் விளையாட்டுக் கழக அணியும், நியூபேட்ஸ் விளையாட்டுக் கழக 'சி' அணியை எதிர்த்து சாள்ஸ் விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளன. (ம-23)

## கலந்துரையாடல்

வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா, மற்றும் கழகங்களை மீள் பதிவு செய்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறள்ளது. எனவே விளையாட்டுக் கழக்களின் தலைவர், செயலாளர், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-422-108)

## கால்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 25
பாசையூர் யுப்பிற்றஸ் கழகத்தின் 40ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பாசையூர் உள்ளூர் கால்பந்தாட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பாசையூர் சென். அன்ரனிஸ்விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் 12 கழகங்கள் கலந்துகொள்கின்றன என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-23)



# ஆஸ்திரேலியா - இங்கிலாந்து சமனான பலத்துடன் உள்ளன

ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின் படி இரண்டு அணிகளும் சம பலத்துடன் உள்ளன.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நடப்பு வருட ஆஷஸ் தொடர் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றிருந்தது இங்கிலாந்து அணி. மலன் 28 ஓட்டங்களுடனும் மொயின் அலி 13 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர்.

38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மொயின் அலி. அரைச்சதம் கடந்தார் மலன். அவரை 56 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் ஸ்ராக். பரிஸ்ரெளவ் 9 ஓட்டங்களுடனும், வோக்ஸ் ஓட்ட மெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர். முடிவில் 302 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து.

பந்துவீச்சில் ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், ஹசில்வுட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். பதிலுக்குக் களமிறங்கியது இங்கிலாந்து. ஆரம்ப வீரரான பான்குரொப்ட் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கவாயா 11 ஓட்டங்களுடன் பவிலியின் திரும்பினார். வோர்ணர், சிமித் இருவரும் சிறிது நிலைத்தனர். 26 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டவரான ஹான்ட்ஸ்கொம் வெறும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். எனினும் சிமித், ஷோன் மார்ஷ் இருவரும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. சிமித் 64 ஓட்டங்களுடனும், ஷோன் மார்ஷ் 44 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

20/-
இந்த வாரம்
தாயகக் கனவுக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்
என்ன கைமாறு செய்வோம்?
துரித உணவுகள்: உணவுப் புரட்சியின் மாயவலை
எங்கள் கல்லறைகளை மிதிக்காதீர்கள்
துயிலும் இல்லங்களை கொச்சைப்படுத்தாதீர்...!
வீரம் விளை வல்வையும் அதில் கம்பர்மலையும்
மற்றும் பல்சுவை அம்சங்களுடன்
விநியோகத் தொடர்புகளுக்கு
021 493 2222
சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.



## மீண்டும் தலைவராகிறார் மத்தியூஸ்?


இலங்கை அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைவராக மத்தியூஸ் மீண்டும் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது என்று தகவல்கள் கசிந்துள்ளன.

காயங்கள் காரணமாகவும் தொடர் தோல்விகள் காரணமாகவும் இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகினார் மத்தியூஸ். இதையடுத்து டெஸ்ட் ஆட்டங்களுக்கு சந்திமல்லும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கு தலைவராக தரங்கவும் பெயரிடப்பட்டனர். சந்திமல்லின் தலைமையில் கீழ்



இலங்கை அணி ஓரிரு வெற்றிகளைப் பெற்றுள்ள போதிலும் தரங்கவின் தலைமையில் படுமோசமாக பெறுபேற்றையே இலங்கை வெளிப்படுத்தியது. இதனால் தரங்க தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு மத்தியூஸ் மீண்டும் தலைவராக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன என்று தெரியவருகிறது.

மத்தியூஸ் தலைமைப் பொறுப்பை ஏற்க மறுக்கும் பட்சத்தில் அசல குணரட்ன அல்லது திசர பெரேரா ஆகியோரில் ஒருவர் தலைமைப் பொறுப்பை ஏற்க வாய்ப்புள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



# சுருண்டது இலங்கை

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரில் இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக சமரவிக்கிரம மற்றும் கருணாரத்ன. 13 ஓட்டங்களுடன் இசாந் சர்மாவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் சமர விக்கிரம. 9 ஓட்டங்களுடன் அஸ்வினிடம் போல்ட் ஆனார் திரிமன்னே. 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார் ஜடேயா.

சந்திமல் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். டிக்வெல்ல ஓரளவு தாக்குப்பிடித்தார். 24 ஓட்டங்களுடன் டிக்வெல்லவை வீழ்த்தினார் ஜடேயா. சந்திமலை பவிலியனுக்குத் திருப்பினார் அஸ்வின். 205 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இலங்கை அணி.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளையும், ஜடேயா, இசாந் சர்மா இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்று 8 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டது. அந்த அணி ஓர் இலக்கை இழந்து 11 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. விஜய் 2 ஓட்டங்களுடனும், புஜாரா 2 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)




## தாமதித்தால் தண்டம்

அடுத்த வருடம் நடைபெறவுள்ள பன்னாட்டு அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் வீரர் அல்லது வீராங்கனை யொருவர் அரங்கிற்குள் நுழைந்து 7 நிமிடங்களுக்குள் விளையாடத் தயாராக விட்டால் 20 ஆயிரம் டொலர்கள் தண்டம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள் ளது.

இந்தச் சட்டம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஆஸ்திரேலியத் தொடரின்போது பரீட்சித்துப் பார்க்கப்படவுள்ளது. (ம)

## ரியல் மட்ரிட் செல்கிறார் ஆர்சனல் வீரர் சந்தேஸ்



இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனலின் முன்கள வீரரான அலெக்சிஸ் சந்தேஸ், ஸ்பானியத் கழகமான ரியல் மட்ரிட்டால் ஒப்பந்தம் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆர்சனலுடனான அலெக்ஸ் சந்தேஸின் ஒப்பந்தம் நடப்பு பருவகாலத்துடன் முடிவடைகிறது. இதையடுத்து சந்தேஸின் அடுத்த ஒப்பந்தம் ரியல் மட்ரிட் அணியுடன் அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அடிக்கடி உபாதைக்கு உள்ளாகும் பேலை விடுவிக்க மட்ரிட் திட்டமிட்டுள்ளது என்று ஏற்கனவே தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில் சந்தேஸ் தொடர்பில் தற்போது வெளியாகியுள்ள கருத்துக்கள் பேலுக்கு பதில் வீரராக சந்தேஸ் அமையவுள்ளார் என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. (ம)

## மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 25

வடமராட்சி கல்வி வலயம் நடத்திய வடமராட்சி கல்வி வலய உத்தியோகத்தர் மற்றும் ஆசிரியர்களுக்கான கிரிக்கெட் தொடரில் மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

நெல்லியடி மத்திய கல்லூரி மைதா னத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணியை எதிர்த்து மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ருமேஸ், ஜெயகரன், சசிகரன் ஆகியோர் தலா 6 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் கஜானன் 2 இலக்குகளையும், காண்டீபன், ரவீந்திரன், அனிதன், ராகவன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மருதங்கேணி கோட்ட ஆசிரியர் அணி 8.2 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக ரவீந்திரன் 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கரவெட்டி கோட்ட ஆசிரியர் அணியின் சார்பில் கௌசிகன் 5 இலக்குகளையும் ராஜமனோகரன், சுகிர்தன் ஆகியோர் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். (ம-422)




ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் பார்சிலோனாவும், இத்தாலியின் யுவன்டாஸ்ஸும் மோதின. இந்த ஆட்டத்தில் இத்தாலியின் தேசிய அணியின் கோல் காப்பாளர் பவ்பெனுக்கு ஆதரவு தெரிவித்து ரசிகர்கள் பதாகைகளை ஏந்தியிருந்தனர். முன்னதாக முடிவடைந்த கால்பந்தாட்ட உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் இத்தாலி படுதோல்வியடைந்து தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டது. இந்த ஆட்டத்துடன் பவ்பென் ஓய்வை அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## அனுமதி!

பன்னாட்டு பளுதூக்கல் போட்டிகளில் ஈரான் நாட்டைச் சேர்ந்தவர்கள் கலந்துகொள்வதற்கு ஈரான் அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஈரான் பளுதூக்கல் சம்மேளனம் இதை உறுதிப்படுத்தியுள்ளது. (ம)



### தவறிவிட்டது

மாதவராசா சிறீசாந்தன் ஆகிய எனது பல்கலைக்கழக சான்றிதழ்களுடன் கூடிய File கடந்த 19.11.2017 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சிக்கும், யாழ்.நகருக்குமிடையில் தவறி விடப்பட்டுள்ளது. கண்டறிந்தவர்கள் தயவு செய்து தந்துதவவும். தொடர்பு - 077 271 8209

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com.
021493 1111

## மரண அறிவித்தல்



### இராமு சரவணமுத்து

(ஓய்வு பெற்ற பிரதம எழுதுவினைஞர், பிரதேச செயலகம், தென்மராட்சி)

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமு சரவணமுத்து நேற்று (24.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற புஸ்பாதேவி மற்றும் குருபரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலினியின் அன்பு மாமனும் வைஷாலி ,வைகை. ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**" பிரசாந்தி "**
**மீசாலைவடக்கு,கொடிகாமம்.**
**(மீசாலை கமநல சேவை நிலையம் APC அருகில்)**

**தகவல்: குடும்பத்தினர்.**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்



பிறப்பு 09 . 10 . 1931 — இறப்பு 23 . 11 . 2017

### திருமதி கமலாம்பிகை கனகரத்தினம் (பத்தர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் பத்திரகாளி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பிகை கனகரத்தினம் கடந்த (23.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் பத்தர் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசு பத்தர் தம்பதியரின் மருமகளும் கனகரத்தினத்தின் அன்பு மனைவியும் கனகம்மா, பாக்கியம், ரெத்தினசீலோன்மணி (குங்குமம்), நேசமணி (சந்தனம்), பரிமளரெத்தினம், ரெத்தினகோபால், கந்தசாமி தனலஷ்மி (பொன்னு) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற கந்தையா மற்றும் செல்வரத்தினம், மல்லிகாதேவி, கேதீஸ்வரன், காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் இராசரத்தினம், புலேந்திரன், பாலச்சந்திரன் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற இராஜராஜேஸ்வரி மற்றும் சரோஜினிதேவி காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் ஜெயராணி, சுசிலாதேவி, வைதேகி, செல்வராணி ஆகியோரின் மாமியும் வியவிந்தன், ஜெயவிந்தன், சூரியவிந்தன், வினோதினி லோகவிந்தன், காலஞ்சென்ற சங்கீதா மற்றும் நிர்மலா, தர்மபாலன், மதிவதனி, சசிகலா, உஷாநந்தினி, கார்த்திகாஜினி, சக்திவேல், வரதராசா, கணேசராசா, விமலராசா, விஜியலஷ்மி, வரதராஜா, ஈஸ்வரி, தயாபரன், சசிதரன், பகீரதன், மயூரன் சோமசேகரன், யோகராணி, நிறோசா, திவியந்தினி, கஜானன் கயந்தி, சங்கீர்த்தனா, சங்கீர்த்தனன், சதுர்ஷ்ஸன், சேனுசா, விதுர்சிகா, தர்விந்தன் ஆகியோரின் பேர்த்தியும் புவிபாரதி, ரமி, சுலோசினி, காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் ரஞ்சினி முகுந்தன், கௌசிகா, ராஜ்குமார், குகனேஸ்வரன், கமலராணி, கிருஷா, மாலா, சுதன், ஜெயக்குமார், சஞ்சுதா ஆகியோரின் பேர்த்தியும் தருன், ஜோபித்தா, அஜய்யா, அபிசூர், ஜோர்ஸ், டன்சிகா, வின்சிகா, ஜினிகிஷன், உஹாயிகன், தனுஜிகன், ரிஷிகா, ஆருஷன், மிதுரன், ஹவிஷனன், அனிஸ், கஜனியா, கம்சிகா, அஜீஸ், விருஷாந், அனுஸ்டிகன், திவ்னி, மதுஷன், சரணியா, பவர்ஷன் பவர்ஷிகா, ஜகீர்ஷன், குவேனிஷா, விதுஷா, மிதுசன் அர்ச்சனா, ஜீவன், கிருசாளினி, கிருசாந்தன், ஜங்கரன், பிரசாந்தன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் பத்திரகாளி கோவிலடி.**
**சுழிபுரம் கிழக்கு. 077 860 7715**

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 14 . 11 . 1941 — இறப்பு 23 . 11 . 2017

### திருமதி மனோன்மணி நவரத்தினம்

யா/நெடுந்தீவைப்பிறப்பிடமாகவும்ஆண்டிவாழ்வீதி,கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி நவரத்தினம் (23.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.11.2017) ஞாயிறு இல. 365, உதயநகர் கிழக்கு எனும் முகவரியில் மு.ப.10.00 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 204 8584** — **தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி இராஜேஸ்வரி (தேவி) அரசலிங்கம்



பிறப்பு 1948.12.24 — இறப்பு 2017.11.22

4ஆம்கட்டை ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி (தேவி) அரசலிங்கம் 22.11.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான செல்லத்துரை பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும் தம்பையா அரசலிங்கத்தின் அன்புமனைவியும் காலஞ்சென்ற வர்களான மரியதாஸ், அருள்தாஸ் மற்றும் அன்ரனீஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயசீலி (கிளி), ஜெயதாஸ் (ஐயா) காலஞ்சென்ற ஜெயக்குமார் மற்றும் ஜெய றூபன் (இத்தாலி), ஜெயசுதா, ஜெயந்தன் (பொலிஸ் உத்தியோகத்தர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் திலீப்குமார் (பாபு) யாமினி, செல்வம் (இந்தியா), அன்பரசி (இத்தாலி), டார்வின், அனுசியா ஆகியோரின் அன்பு மாமியும் யதுசன் விதுஷன் நிதுசன், சேமின், தர்சிகா, சியானிதா, ஐஸ்வர்யா, ஜெயப்பிரவின், அஜய், ராகுல், டிக்ஷன், செவின், கெல்வின், கருணியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் (27.11.2017) திங்கட்கிழமை மு.ப. 8.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு காக்கைதீவுசேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 162 8959, 077 595 9249, 076 883 9966**

**தகவல்: குடும்பத்தினர்.**

## நெய்மரால் வெற்றிபெற்றது பரிஸ் செயின்ட் ஜேர்மன்

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது.

ஆட்டத்தின் முதல் நிமிடத்தில் செல்டிக் வீரர் மௌஸ்சா கோல் அடித்து பரிஸ் செயின் ஜெர்மன் அணிக்கு அதிர்ச்சி வழங்கினார். அதன் பின்னர் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி அபார ஆட்டத்தை வெளிப் படுத்தியது. நெய்மர் 9ஆவது மற்றும் 22ஆவது நிமிடங்களிலும் கவானி 28ஆவது, 79ஆவது நிமிடங்களிலும், பெப்பே 35ஆவது நிமிடங்களி லும், மார்கோ 75ஆவது நிமிடத்திலும், அல்வ்ஸ் 80ஆவது நிமிடத்திலும் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 7:1 என்ற கோல் கணக்கில் பரிஸ் செயின்ட் ஜேர்மன் அணி வெற்றிபெற்றது. (ம)

### தேவை

பட்டா வாகனம் (பொடி உடன் கூடியது) வாடகைக்கு.
பன்சி கடைக்கு பெண் தேவை.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
தொடர்பு - 077 6237 956
(யாழ்ப்பாணம்)

### வாடகைக்கு

யாழ் நகர் பிரபல பாடசாலைக்கு அருகில் பண்பான குடும்பத்துடன் தங்கியிருந்து கல்வி கற்க விரும்பும் பிள்ளைகளுக்கு மாத்திரம் அறைகள் .உணவுடன் வழங்கப்படும். 077 862 2078

### விற்பனைக்கு

Samsung double door fridge and freezer (Invertor model) LG Aotomatic (silver) washing machin உம் உடன் விற்பனைக்குண்டு.வெளி நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது.
தொடர்பு - 077 450 5587

## மரண அறிவித்தல்



### திருமதி தவமணி பாலசிங்கம்



### பாலசிங்கம் பிரசன்னா

*(ஏசியன்ஸ் அலையன்ஸ் முகாமையாளர்)*

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி பாலசிங்கம் அவர்களும் அவரது சிரேஷ்ட புத்திரன், பாலசிங்கம் பிரசன்னா (ஏசியன்ஸ் அலையன்ஸ் முகாமையாளர்) அவர்களும் நேற்று (24.11.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்கள்.

பாலசிங்கம் தவமணி அவர்கள் சின்னையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற Dr.கந்தையா பாலசிங்கத்தின் அன்பு மனைவியும் கந்தையா முத்து மாணிக்கம் தம்பதியரின் மருமகளும் சமதினத்தில் காலஞ்சென்ற பிரசன்னா (ஏசியன்ஸ் அலையன்ஸ் முகாமையாளர்), பிரசாந்தன் (வைத்திய அதிகாரி பேராதனை தேசிய வைத்தியசாலை), பிரியந்தா (பொறியியலாளர் லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தாட்சாயினி (பிரதேச செயலகம், கோப்பாய்), அருந்தா (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பிரித்திகா, யஸ்விகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவஞானம், கிருஸ்ணபிள்ளை, ஜெகநாதன், குகநாதன், காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன், சதாசிவம், பாலசுப்பிர மணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகேஸ்வரி, மயில்வாகனம், காலஞ்சென்ற வர்களான கனகாம்பிகை, மகேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்றையதினம் காலமான பாலசிங்கம் பிரசன்னா அவர்கள் கச்சேரியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். பாலசிங்கம் தவமணியின் சிரேஷ்ட புத்திரனும் தாட்சாயினி (பிரதேச செயலகம், கோப்பாய்) அவர்களின் அன்புக் கணவரும் பிறீத்திகா, யஸ்விகா ஆகியோரின் அன்புத் தந்தையும் தயாபரன் சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் Dr.பிரசாந்தன் (பேராதனை தேசிய வைத்தியசாலை), பிரியந்தா (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் சகோதரரும் . தீசன், துஷ்யந்தினி, அருந்தா (லண்டன்), ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னார்களின் இறுதிக்கிரியைகள் இல.15, பேரின்பநாயகம் வீதி, கச்சேரியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல்கள் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 067 8753** — **தகவல்: குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.